# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் நிதியும் | (I) |
| வங்கி மேற்பார்வை | (XVII) |
| நாணயம் | (XXIII) |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | (XXVI) |
| பொருளாதார ஆராய்ச்சி | (XXX) |
| ஊழியர் சேமநிதியம் | (XXXII) |
| செலாவணிக் கட்டுப்பாடு | (XXXVI) |
| தகவல் | (XXXIX) |
| நூலகமும் தகவல் நிலையமும் | (XL) |
| தகவல் தொழில்நுட்பம் | (XLI) |
| பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | (XLIII) |
| சட்டம் | (XLVI) |
| முகாமைத்துவ கணக்காய்வு | (XLVII) |
| கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | (XLVIII) |
| பணிமனை | (L) |
| பொதுப்படுகடன் | (L) |
| பிரதேச அபிவிருத்தி | (LV) |
| செயலகம் | (LIX) |
| பாதுகாப்புப் பணிகள் | (LX) |
| புள்ளிவிபரவியல் | (LX) |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | (LXIII) |
| வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் | (LXVII) |
| பயிற்சி | (LXIX) |
| நலன்புரி | (LXIX) |
| மனிதவளமூ வளங்களின் அபிவிருத்தி | (LXX) |

# 1. கணக்குகளும் நிதியும்

## முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் கூற்று

### 1.1 அறிக்கையிடுகின்ற நிறுவனமும் நியதி அடிப்படையும்

இவை, இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பவற்றிற்கு பொறுப்பான அதிகாரசபையாக திருத்தப் பட்டவாறு 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயச் சட்ட விதியின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமான இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கூற்றுக்களாகும். இலங்கை மத்திய வங்கி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் உள்ளதுடன் இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 இல் அமைந்திருக் கிறது.

### 1.2 தயாரிப்பிற்கான அடிப்படை

நிதியியல் கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு நியாயமான பெறுமதிகளில் அளவிடப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடம், குறிப்பிடத்தக்க நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த, வரலாற்றுச்செலவு அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளன.

### 1.3 அறிக்கையிடுகின்ற வடிவம்

வங்கியானது நிதியியற் சொத்துக்களையும், நிதியியற் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும், செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கை களிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. இவ் அறிக்கையிடும் அணுகுமுறையானது முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் தொகுப்பு 1.26இல் மிக முழுமையாக விபரிக்கப்பட்டவாறு வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

### 1.4 இந்த ஆண்டு காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட பன்னாட்டு நிதி அறிக்கையின் நியமங்கள்

இந்த ஆண்டு காலப்பகுதியில் கீழ்வரும் திருத்தப்பட்ட நியமங்கள் பின்பற்றப்பட்டதுடன் தேவையானவிடத்து ஒப்பீட்டு தொகையில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

* ப.க.நி-1 நிதிகூற்றுக்களை சமர்ப்பித்தல்
* ப.க.நி-2 இருப்புக்கள்
* ப.க.நி-8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள்
* ப.க.நி-10 ஐந்தொகை திகதிக்கு பின்னரான செயற்பாடுகள்
* ப.க.நி-24 தொடர்பான தரப்பினரின் வெளிப் படுத்தல்கள்.
* ப.க.நி-28 துணை நிறுவனங்களில் முதலீடுகள்
* ப.க.நி-32 நிதியியல் கருவிகள்: வெளிப்படுத்தல் மற்றும் சமர்ப்பித்தல்
* ப.க.நி-39 நிதியியல் கருவிகள்: அடையாளம் காணல் மற்றும் அளவிடல்

குறிப்பு: ப.க.நி - பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்

### 1.5 இணங்குவிப்பு கூற்று

2005 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந்நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.6 சமர்ப்பித்தல் நாணயம்

வேறு விதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திலேயே தரப்பட்டுள்ளன.

### 1.7 முக்கியமான கணக்கீட்டு தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள்

கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும் செய்முறையின் போது நிதிக்கூற்றில் அடையாளம் காணப்பட்ட தொகைகளில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவற்றில் மதிப்பீட்டில் சம்பந்தப் படுவதிலிருந்தும் வங்கி விலகி பின்வரும் தீர்ப்புக்களை வழங்கியது.

#### (அ) கடன்கள் மீதான பெறுமதி இழப்பக்கள்

தேய்வினை மதிப்பீடு செய்வதற்காக வங்கியானது ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை வருடாந்தம் மதிப்பீடு செய்கின்றது. பெறுமதி இழப்பு பதியப்படவேண்டுமா என்பதனைத் தீர்மானிப்பதில் வங்கியானது அன்றியோ அவதானிக் கப்பட்ட பெறுமதி இழப்பு வெளிப்படுத்தும் தரவுகளின் அடிப்படையில் தீர்ப்பினை வழங்குகின்றது. மதிப்பீட்டிற்காக பயன்படுத்தப்படும் மேற்கோள்கள் மற்றும் முறைகள் என்பன தொடர்ச்சியாக மதிப்பிடப்பட்டன.

### (ஆ) விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீட்டின் பெறுமதி இழப்பு

செலவினைவிட சந்தைப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க அல்லது அதிகரிக்கக்கூடிய வீழ்ச்சி காணப்படும்பொழுது விற்பனைக்கு கிடைக்கத்தக்க தாகவுள்ள முதலீடுகள் பெறுமதி குறைவடைந்ததனை வங்கி தீர்மானிக்கின்றது. இந்த தீர்மானமான மெடுத்தலில் குறிப்பிடத்தக்க அல்லது அதிகரிக்க கூடியளவு தொடர்பான தீர்ப்பு எதிர்பார்க்கப் படுகின்றது.

### 1.8 வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்

வங்கிகளின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயமாக இலங்கை ரூபாய் காணப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களின் கொடுக்கல்வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற நாளன்று நடைமுறையில் இருந்த நாணய சந்தை விலையின் அடிப்படையில் குறிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் ஏற்புடைத்தாயிருந்த செலாவணி வீத சந்தை விலையை பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு மீளமாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றிற்கு கொண்டு செல்லப்பட்டன. மீள்மாற்றல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்கள் பின்வருமாறு.

**அட்டவணை II.1**

| | 2004 | 2005 |
|---|---|---|
| அவுத்திரேலிய டொலர் | 81.5448 | 74.6987 |
| கனடா டொலர் | 86.8704 | 87.7484 |
| யூரோ | 142.3203 | 120.9629 |
| யப்பானிய யென் | 1.0179 | 0.8661 |
| சி.எ.உ | 162.4520 | 145.9530 |
| இசுடேர்லிங் பவுண் | 201.3699 | 175.9428 |
| ஐ.அ.டொலர் | 104.6050 | 102.1172 |

### 1.9 நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானம் மற்றும் செலவுப்பாய்ச்சல்களையும் வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்திக் காட்டுகின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியானது வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவ தொழிற்பாடுகளிலிருந்து எழுகின்றது. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல், நாணயங்களை வழங்குதல் மற்றும் வங்கித் தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்பான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரதிபலிக்கின்றன.

வங்கியின் நிதி நிலைமை, நிதியியல் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைச் சிறந்த முறையில் வழங்குவதற்காக இந் நடவடிக்கைகளை தனித்தனியாகஅறிக்கையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுவது நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியினை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங் காணப்பட்டதுடன், இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு தொடர்ந்து மேற் கொள்ளப் பட்ட அளவைத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்துக் கிரமமான வழிக் கொள்வனவுகளும் விற்பனைகளும் வர்த்தகம் செய்யப்பட்ட திகதியில் இனங் காணப்பட்டன. கிரமமான வழிக் கொள்வனவுகள் அல்லது விற பனைகளான நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளிற்கு ஒழுங்குவிதிகளின் மூலம் அல்லது சந்தையின் மரபு வழிமுறைகளினால் நிறுவப்பட்ட காலவரையறையினுள் சொத்துக்களின் வழங்கல் தேவைப்படுகின்றது.

### (அ) இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தை பெறுமதியிலான பிணையங்கள்

வர்த்தக நடவடிக்கைக்காக வைத்திருக்கப் படுவது என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது இழப்பினூடான சந்தை பெறுமதியிலான வகைப் பிணையங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையில், வர்த்தகப்படுத்தக் கூடிய பிணையங்களின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சி ஒன்றாகவோ இனங் காணப்படுகின்ற வேளையில் ஏற்படும் இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங் காணப்படுகின்றன.

# இலங்கை மத்திய வங்கி

## வருமானக் கூற்று

## 2005 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2005 (ரூபா '000) | 2004 (ரூபா '000) |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்:** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 14 | **6,924,471** | 6,021,254 |
| விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்) | | **(90,502)** | 185,631 |
| விலை மாற்றங்களிலிருந்து தேறல் செய்யப்பட்ட இலாபம் (நட்டம்) | | **768,660** | 1,769,157 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **7,602,629** | 7,976,042 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 15 | **(1,799,733)** | (1,236,140) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(1,799,733)** | (1,236,140) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் (நட்டம்) | | **(12,955,088)** | 18,453,354 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** (நட்டம்) | | **(7,152,192)** | 25,193,256 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 14 | **6,138,434** | 4,339,104 |
| வட்டிச் செலவு | 15 | **(839,599)** | (506,938) |
| **உள்நாட்டு நாணயநிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்தவருமானம்** | | **5,298,834** | 3,832,166 |
| ஏனைய வருமானம் | 16 | **1,101,691** | 813,015 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** (நட்டம்) | | **(751,667)** | 29,838,437 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்:** | | | |
| ஆளணிச் செலவுகள் | 17 | **(2,208,455)** | (1,547,872) |
| பெறுமானத்தேய்வு | | **(458,876)** | (359,677) |
| பொருட்பட்டியல் செலவு | | **(1,273,044)** | (1,089,207) |
| நிருவாகம் | 18 | **(976,044)** | (522,612) |
| அறவிடமுடியா மற்றும் ஐயப்படுகடன்கள் மற்றும் தேறிய சில்லறைகளின் பதிவளிப்பு | | **(8,209)** | (46,753) |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(4,924,628)** | (3,566,121) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம் (நட்டம்)** | | **(5,676,295)** | 26,272,316 |
| வருமானவரி | | **(570,182)** | (589,029) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம் (நட்டம்)** | | **(6,246,477)** | 25,683,287 |

## இலங்கை மத்திய வங்கி
## ஐந்தொகை
## 2005 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறு

| சொத்துக்கள் | குறிப்புக்கள் | 2005 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டு (ரூ.000) | 2004 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டு (ரூ.000) |
|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்கு சமமானவையும் | 1 | 146,128,811 | 143,510,890 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப்பெறுதியில் பிணையங்கள் | 2 | 104,937,757 | 44,768,751 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப்பெறுமதியில் தங்கத்தில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் | 2 | 8,743,882 | 7,620,907 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கவுள்ள முதலீடுகள் | 2 | 13,992,948 | 21,377,058 |
| ஏனைய வெளிநாட்டிலிருந்து பெறத்தக்கவை | 3 | 163,667 | 151,423 |
| ப.நா. நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | | 60,491,555 | 67,177,196 |
| | | 334,458,620 | 284,606,225 |
| **உள்நாட்டுச் நிதிச சொத்துக்கள்** | | | |
| முதலீட்டுப்பட்டியல் - இலங்கை அரச பிணைகள் | | 51,806,545 | 82,839,235 |
| அரசுக்கான கடன் | 4 | 39,746,300 | 34,791,100 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன் | 5 | 2,468,989 | 29,878 |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் | 6 | 678,665 | 696,755 |
| ஏனைய உள்நாட்டு பெறத்தக்கவை | | 45,248 | 501,641 |
| ஏனைய சொத்துக்கள் | | 558,140 | - |
| | | 95,303,887 | 118,858,609 |
| **ஏனைய சொத்துக்கள்** | | | |
| பொருட்களின் இருப்பு | 7 | 1,351,677 | 950,789 |
| தங்க இருப்பு | | 59,766 | 59,766 |
| நானாவிதச் சொத்துக்கள் | | 1,590,099 | 1,399,073 |
| சொத்துக்கள், பொறிகள், இயந்திரங்கள் | 8 | 7,832,895 | 8,238,062 |
| | | 10,834,437 | 10,647,690 |
| | | 440,596,944 | 414,112,524 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய மற்றும் பங்குகள் நிதிப் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்படவேண்டிய தொகை | 9 | 15,630,980 | 4,758,324 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகை | | 28,285,643 | 37,899,263 |
| ப.நா.நி தொடர்பான பொறுப்புக்கள் | 10 | 102,635,004 | 101,645,332 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | | 1,326,619 | 128,346 |
| | | 147,878,246 | 144,431,265 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | |
| திறைசேரி உண்டியல்களும் பிணைகளும் (மீள் கொள்வனவுகள்) | | 65,483,580 | 55,051,087 |
| அரச, அரச முயற்சிகளின் வைப்புக்கள் | 11 | 931,592 | 892,435 |
| வர்த்தக வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 14,107,000 | 7,213,000 |
| ஊழியர் நன்மைகள் திட்டத்துடனான வைப்புக்கள் | 12 | 199,344 | 7,525 |
| கொடுபடத்தக்கவை | | 838,397 | 717,364 |
| | | 81,559,913 | 63,881,411 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 132,436,496 | 115,908,969 |
| பிற்போடப்பட்ட அரச கொடைகள் | | 278,660 | 429,459 |
| ஒய்வூதியம் மற்றும் ஏனைய வேலைக்குப்பின்னைய நன்மைகள் திட்டங்கள் | | 974,983 | 465,334 |
| நானாவிதப் பொறுப்புக்கள் | | 333,012 | 99,464 |
| பங்குகள் | | 134,023,152 | 116,903,226 |
| பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமும் ஒதுக்குகளும் | 13 | 77,135,633 | 88,896,622 |
| | | 440,596,944 | 414,112,524 |

***கணக்காளர் நாயகத்தின் குறிப்பு***

*2005 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13ஆம் பிரிவு உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 இற்கு அமையவும் நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) இன் பிரிவு 42(2)இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.*

*இதுவரையான எனது பரீட்சிப்புக்களிலிருந்து கண்டறியப்பட்ட எனது அபிப்பிராயத்தின்படியும் எனக்குக் கிடைத்த தகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களின் நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நிதியியல் கூற்றுக்கான 01-22 வரையான குறிப்புக்களில் எடுத்துக்காட்டப்பட்டவாறான கணக்கீட்டுக் கொள்கைக்கிணங்கவும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2005 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் நிதி நிலைமை தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான கருத்துக்களையும் அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் பெறுபேறுகளைறும் காசுப் பாய்ச்சலையும் தருகிறது.*

*கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்*
*கொழும்பு 7.*
*21 ஏப்பிறல் 2006*

| எஸ். சீ. மாயதுன்ன | எஸ். மென்டிஸ் | கே.எம்.ஏ.என்.டவுலகல |
|---|---|---|
| கணக்காய்வாளர் நாயகம் | ஆளுநர் | பதில் முதன்மைக் கணக்காளர் |

# இலங்கை மத்திய வங்கி

## காசுப்பாய்ச்சல் கூற்று

### 2005 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2005 (ரூபா '000 ) | 2004 (ரூபா '000 ) |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | | |
| **மூலம்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **6,399,379** | 6,429,721 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **48,895** | 43,641 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **768,660** | 1,769,157 |
| பெறப்பட்ட செலாவணி இலாபம்/ (இழப்பு) | | **1,703,091** | (35,947) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **145,767** | 304,009 |
| | | **9,065,792** | 8,510,581 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **1,652,955** | 1,166,276 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **840,641** | 335,991 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **1,326,591** | 989,528 |
| நிரம்பலர்களுக்கான கொடுப்பனவு | | **2,659,687** | 3,525,649 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | | **538,943** | 567,029 |
| | | **7,018,817** | 6,584,473 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்:** | 19 | **2,046,975** | 1,926,108 |
| **முதலீட்டு நடவடிக்கைளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | | |
| **மூலம்:** | | | |
| ஏனைய உள்ளூர் நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு) / குறைப்பு | | **(749,609)** | (75,484 ) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் மீள் பெறுகைகள் | | **(2,356,411)** | 79,258 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை/ மீட்டல் | | **474,764** | 119,685 |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | **16,582** | 267 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகள் மீதான வருமானம் | | **35,633** | 86,412 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு | | **6,894,000** | (13,761,201) |
| | | **4,314,959** | (13,551,063) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு ) | | **56,826,530** | (77,194,471) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | **131,617** | (58,635) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு) | | **(2,050,609)** | (18,507,734) |
| ஏனைய உள்ளூர் வைப்புக்களிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) மற்றும் கொடுபடத்தக்கவை | | **(191,819)** | 144,643 |
| கொடைகள் தவிர்ந்தசொத்து பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவு | | **53,708** | 42,421 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | **93,810** | 74,272 |
| | | **54,863,237** | (95,499,504) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(50,548,278)** | 81,948,441 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **மூலம்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடல் | | **151,998,690** | 115,993,628 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை புறக்கீடு செய்தல் | | **(135,471,163)** | (98,869,295) |
| சுற்றோட்டத்திலுள்ள தேறிய நாணய வழங்கல் | | **16,527,527** | 17,124,333 |
| **கழிக்குக:** | | | |
| அரச கொடுக்கல் வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் (புறக்கீடுகள்) | 20 | **(32,265,077)** | 49,237,087 |
| வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடுகள்) | 21 | **(11,613,517)** | (12,409,516) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடு) | | **(43,878,594)** | (36,827,571) |
| | | **60,406,121** | (19,703,238) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப்பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **(10,970,720)** | 11,456,546 |
| அரசுக்கான மிகைக் கொடுப்பனவுகள் | | **5,000,000** | 1,000,000 |
| | | **(5,970,720)** | 12,456,546 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **66,376,841** | (32,159,784) |
| **காசு மற்றும் காசுக்குச்சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு** | | **17,875,538** | 51,714,765 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் மீதான செலாவணிவீதத் தாக்கம் | | **(15,257,617)** | 13,855,896 |
| 2005 சனவரியில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | **143,510,890** | 77,940,229 |
| **2005 திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | 22 | **146,128,811** | 143,510,890 |

## இலங்கை மத்திய வங்கி
## நிதியியல் கூற்றுக்கான குறிப்புக்கள்
## 2005 திசெம்பர் 31இல் உள்ளவாறு

| | | 2005 (ரூபா '000) | 2004 (ரூபா '000) |
|---|---|---|---|
| 1. | ***காசு நிலுவையும் காசுக்கு சமமானவையும்*** | | |
| | வெளிநாட்டு வங்கிகளிலுள்ள நிலுவைகள் | **2,487,257** | 1,070,545, |
| | வெளிநாட்டு தாள் மற்றும் நாணயக் கணக்கு | **0** | 1,611 |
| | வெளிநாட்டு வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்கள் | **112,950,743** | 96,686,319 |
| | ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையான வைப்புக்கள் | **14,244,836** | 4,485,742 |
| | பெடரல் ஓ.வங்கியுடனான மீள்கொள்வனவு உடன்படிக்கை கணக்கு | **16,445,975** | 41,266,672 |
| | | **146,128,811** | 143,510,890 |
| 2. | **நிதியியல் சொத்துக்கள்** | | |
| | இலாப மற்றும் நட்டங்களூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | **104,937,757** | 44,768,751 |
| | இலாபம் அல்லது நட்டமூடாக சந்தைப் பெறுமதியில் தங்கத்தில் குறிக்கப்பட்ட பிணையங்கள் | **8,743,882** | 7,620,907 |
| | விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | **13,992,948** | 21,377,058 |
| | | **127,674,587** | 73,766,716 |
| 3. | **பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள்** | | |
| | பன்னாட்டு நாணய நிதியத்துடனான சிறப்பு எடுப்பனவு உரிமையிலுள்ள உடைமைகள் | **154,585** | 19,539 |
| | பன்னாட்டு நாணய அனுமதிப்பங்கு | **60,336,970** | 67,157,657 |
| | **பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான மொத்தச் சொத்துக்கள்** | **60,491,555** | 67,177,196 |
| 4. | ***அரசுக்கான கடன்கள்*** | | |
| | சுழலும் கொடுகடன் | **39,746,300** | 34,791,100 |
| | ***அரசுக்கான மொத்தக் கடன்கள்*** | **39,746,300** | 34,791,100 |
| 5. | **ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்** | | |
| | வெளிநின்ற மூலதனம் | **2,461.951** | 2,547,400 |
| | சுசகன, சுனாமி கடன் திட்டத்தின்கீழ் பெறத்தக்கவை | **2,441,860** | - |
| | பெறத்தக்க வட்டி | **5,100,696** | 4,732,762 |
| | **பெறத்தக்க மொத்தம்** | **10,004,507** | 7,280,162 |
| | **கழிக்குக:** ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஏற்பாடு | **(2,434,822)** | (2,517,522) |
| | இடைநிறுத்தப்பட்ட வட்டி | **(5,100, 696)** | (4,732,762) |
| | **தேறிய பெறத்தக்கவை** | **2,468,989** | 29,878 |
| 6. | **நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள்** | | |
| | பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | **-** | 430,113 |
| | கொடுகடன் தகவல் பணியகம் | **12,248** | 12,278 |
| | தேசிய அபிவிருத்தி வங்கி | **-** | 26,250 |
| | பிச் ரேட்டிங் லங்கா லிமிடெட் | **3,500** | 3,500 |
| | வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் லிமிட் | **29,500** | 29,500 |
| | | **45,248** | 501,641 |
| 7. | **இருப்புக்கள்** | | |
| | சுற்றோட்டத்திற்கான தாள்கள் | **1,126,682** | 518,834 |
| | சுற்றோட்டத்திற்கான நாணய குத்திகள் | **213,702** | 184,325 |
| | இடைப்போக்கிலுள்ள நாணய குத்திகள் | **43,627** | 287,501 |
| | | **1,384,011** | 990,660 |
| | **கழிக்குக: மெதுவாக அசையும் விடயங்களுக்கான ஏற்பாடு** | **(55,300)** | (64,700) |
| | | **1,328,711** | 925,960 |
| | எழுதுகருவிகள் மற்றும் நானாவிதப் பொருட்கள் | **22,966** | 24,829 |
| | குறைந்தசெலவில் மொத்த இருப்புக்களும் பெறத்தக்க தேறிய பெறுமதியும் | **1,351,677** | 950,789 |

**8. சொத்து பொறி மற்றும் கருவிகள்**

| கொண்டிருக்கும் பெறுமதி | காணியும் கட்டடமும் (ரூபா '000) | பொறிகள் மற்றும் பொறி இணைப்புப் பாகங்கள் (ரூபா '000) | தளபாடமும் கருவிகளும் (ரூபா '000) | ஏனையவை (ரூபா '000) | மொத்தம் 2005 (ரூபா '000) | மொத்தம் 2004 (ரூபா '000) |
|---|---|---|---|---|---|---|
| ஒன்று சேர்ந்த தேய்மானம் பெறுமதிக் குறைப் பிற்கான ஏற்பாடு நீங்கலாக சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 7,569,370 | 0 | 193,343 | 475,349 | 8,238,062 | 8,554,160 |
| புதிதாக வாங்கப்பட்டவை | 0 | 76 | 25,290 | 121,616 | 146,982 | 42,421 |
| விற்பனை செய்யப்பட்டவை, ஒன்றுசேர்ந்த தேய்மானம் நீங்கலாக | 0 | 0 | 0 | 0 | 0 | (61) |
| மீள்பகுப்பாய்வு செய்யப்பட்ட/ பதிவழிக்கப்பட்டவையில் தேறிய விளைவு | (1,072,833) | 934,043 | 48,541 | (3,024) | (93,273) | 0 |
| நேர்மாற்றியமைக்கப்பட்ட பழுதுகளுக்கான ஒதுக்கு | 0 | 0 | 0 | 0 | 0 | 1,219 |
| ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் | (91,776) | (52,267) | (46,428) | (268,405) | (458,876) | (359,677) |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம் நீங்கலாக திசெம்பர் 31ஆம் நாள் உள்ளவாறு** | 6,404,761 | 881,852 | 220,746 | 325,536 | 7,832,895 | 58,238,062 |

| | 2005 ('000 ரூபா) | 2004 ('000 ரூபா) |
|---|---|---|
| **9. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தத்தக்க தொகை** | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 15,226,975 | 4,485,742 |
| ஏனைய நிதி நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டியவை | 404,005 | 272,582 |
| | 15,630,980 | 4,758,324 |
| **10. பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள்** | | |
| பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் | 23,704,228 | 26,548,718 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையற்ற | 15,232,384 | 4,197,354 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | 10,343,397 | 11,512,648 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | 30,390,652 | 30,552,522 |
| ப.நா.நிதியத்திற்கு செலுத்தவேண்டிய ஏனைய தொகைகள் | 22,964,343 | 28,834,090 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | 78,930,776 | 75,096,614 |
| **பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான மொத்தப் பொறுப்புக்கள்** | 102,635,004 | 101,645,332 |
| **11. அரசு மற்றும் அரச முயற்சிகளுடனான நிலுவைகள்** | | |
| அரசுடனான வைப்புக்கள் | 372,485 | 522,673 |
| அரச முகவர்கள் மற்றும் நிதியங்கள் | 559,107 | 369,762 |
| | 931,592 | 892,435 |
| **12. ஊழியர் நன்மைகள் திட்டங்களிலுள்ள நிலுவைகள்** | | |
| சேமநிதியம் | 153,160 | 2,701 |
| ஓய்வுதிய நிதியம் | 40,393 | 2,067 |
| விதவைகள் அநாதைகள் நிதியம் | 5,791 | 2,757 |
| | 199,344 | 7,525 |
| **13. பங்குகள்** | | |
| பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனம் | | |
| நடுத்தர நீண்டகால கொடுகடன் ஒதுக்குகள் | 15,000 | 15,000 |
| மிகை, கட்டுப்பாட்டுக் கணக்கு ஒதுக்குகள் | 9,425,000 | 4,925,000 |
| மூலதனப் பங்களிப்பு கணக்கு | 42,584,950 | 14,011,728 |
| நிலையான சொத்து மீள்மதிப்பீட்டுக் கணக்கு | 577,859 | 577,859 |
| சந்தைப் பெறுமதியிடல் ஒதுக்கு - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள் | 662,382 | 662,382 |
| ஆண்டுக்கான இலாபம் | (135,077) | (185,717) |
| பன்னாட்டு ஒதுக்கு மீள்மதிப்பீடு | (6,246,477) | 25,683,287 |
| | 30,251,996 | 43,207,083 |
| | 77,135,633 | 88,896,622 |

| | 2005 (ரூபா '000 ) | 2004 (ரூபா '000 ) |
|---|---|---|
| **14. நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு, காசுக்குச் சமமானவைகள் | 3,912,533 | 2,656,598 |
| நிதியியல் சொத்துக்கள் | 2,925,756 | 3,302,531 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 86,182 | 62,125 |
| **வெளிநாட்டு நாணய நிதியச் சொத்துக்களிலிருந்ததான மொத்த வட்டி வருமானம்** | 6,924,471 | 6,021,254 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டிவருமானம்** | | |
| முதலீட்டுச் சொத்துப் பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | 6,080,552 | 4,254,941 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | 14,209 | 40,522 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | 43,672 | 43,641 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த தேறிய வட்டி வருமானம்** | 6,138,433 | 4,339,104 |
| **நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | 13,062,905 | 10,360,358 |
| | | |
| **15. நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கான கொடுப்பனவுகள் | 548,417 | 179,811 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | 1,249,248 | 1,054,075 |
| ஏனையவை | 2,068 | 2,254 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | 1,799,733 | 1,236,140 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| **மீள் கொள்வனவுக்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்** | 839,599 | 506,938 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்மீதான மொத்த வட்டிச் செலவு** | 839,599 | 506,938 |
| **நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | 2,639,332 | 1,743,078 |
| | | |
| **16. ஏனைய வருமானம்** | | |
| பங்கிலாப வருமானம் | 25,343 | 45,890 |
| சொத்துக்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் விற்பனையின் மீதான இலாபம் | 16,583 | 207 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகளை விற்பதன் மீதான இலாபம் | 612,776 | 21,797 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் கடன் தீர்ப்பனவு | 218,676 | 159,730 |
| பல்வகை வருமானம் | 228,313 | 585,391 |
| **ஏனைய மொத்த வமானம்** | 1,101,691 | 813,015 |
| | | |
| **17. ஆளணிச் செலவுகள்** | | |
| தொழில்தருநரினால் செலுத்தப்பட்ட உழைக்கும்போதே செலுத்தும் வரி உட்பட | | |
| கூலிகளும் சம்பளங்களும் | 911,107 | 854,362 |
| ஓய்வூதியச் செலவு | 715,288 | 413,413 |
| ஏனைய வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | 432,892 | 148,860 |
| வரைவிலக்ணம் செய்யப்பட்ட உதவுதொகைத் திட்ட செலவுகள் | 149,168 | 131,237 |
| | 2,208,455 | 1,547,872 |
| **18. நிர்வாகச் செலவுகள்** | | |
| திருத்தங்களும் பேணல்களும் | 312,417 | 272,048 |
| தகவல் | 70,088 | 77,322 |
| தொழில்ரீதியான பயணம் | 23,009 | 21,630 |
| வாடகைச் செலவுகள் | 349 | - |
| அச்சிடல் | 15,645 | 32,326 |
| கணக்காய்வுக் கட்டணம் | 8,200 | 9,300 |
| நாணயச்சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 437 | 795 |
| ஓய்வுபெற்றோருக்கான மருத்துவ நன்மைகள் | 20,519 | 34,985 |
| சொத்துக்கள், கருவிகள் பொறிகளுக்கான பதிவளிப்புக்கள் | 93,049 | - |
| இமவ சேம நிதிய வட்டிச் செலவுகள் | 155,178 | 28,839 |
| பல்வகை | 277,153 | 45,367 |
| | 9,760,044 | 522,612 |

| | 2003 ('000 ரூபா) | 2003 ('000 ரூபா) |
|---|---|---|
| **19. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப்பாய்ச்சலுடன் மீளிணக்கப்படுத்தல்** | | |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்** | **(6,246,477)** | 25,683,287 |
| **கூட்டுக (கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் | **458,876** | 359,677 |
| பெறப்பட்ட வட்டி - உள்ளூர் நாணயம் - முதலீட்டுச் சொத்துப் பட்டியல் | **(6,080,552)** | (3,239,803) |
| அறவிடமுடியாக்கடன் பதிவழித்தல் / (மீண்டும் பதிவுசெய்தல்) | **(82,700)** | (79,258) |
| வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஊழியர் நன்மை திட்டங்களுக்கான தேறிய ஒதுக்கு | **1,148,180** | 358,252 |
| பெறப்படாத தேறிய வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்) / இழப்பு | **14,658,179** | (18,489,302) |
| ஏனைய ஒதுக்கங்கள் | **(277,325)** | (906,932) |
| **கூட்டுக (கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவுகள்** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(400,888)** | (453,299) |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(523,788)** | (647,192) |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைப்பு) | **(5,583)** | (483,074) |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/ (குறைப்பு) | **145,736** | 262,810 |
| ஏனைய பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு/ (குறைப்பு) | **46,330** | (26,213) |
| **கூட்டுக (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| முதலீடுகளிலிருந்தான வருமானம் | **(622,913)** | (67,893) |
| பெறப்பட்ட பங்கிலாபம் | **(25,343)** | - |
| சொத்துக்கள், பொறிகள், கருவிகளின், விற்பனையிலிருந்து பெறப்பட்டவை | **(165,582)** | - |
| பெறப்படாததேறிய சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **90,502** | (185,630) |
| பிற்போடப்பட்ட அரச கொடைகள் | **(218,676)** | (159,322) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **2,046,975** | **1,926,108** |
| **20. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல்/ (புறக்கீடு)** | | |
| இலங்கை அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சி | **(133,512,344)** | (78,680,476) |
| முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்காக இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **102,127,387** | 127,281,072 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டு சொத்துப்பட்டியல் | **(5,728,286)** | (3,199,282) |
| இலங்கை அரசுக்கான கடன்கள் முற்பணங்களின் அதிகரிப்பு / (குறைப்பு) | **4,955,200** | 3,587,200 |
| அரச, அரச முயற்சிகளுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(39,157)** | 248,573 |
| பெறப்பட்ட அரச கொடைகள் | **(67,877)** | - |
| | **(32,265,077)** | 49,237,087 |
| **21. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான சுற்றோட்டநாணயத்தின் தேறிய வழங்கல்/ (புறக்கீடுகள்)** | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு) / குறைப்பு | **(1,181,024)** | (9,387,516) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான ஒரு நாளுக்குள்ளான திரவ வசதி(அதிகரிப்பு)/ குறைப்பு | **(10,432,493)** | (3,002,000) |
| | **(11,613,517)** | (12,409,516) |
| **22. முடிவில் காசு நிலுவைகள் மற்றும் காசுக்குச் சமமானவை** | | |
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| ஏனைய வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **146,128,811** | 143,510,890 |
| ***முடிவில் காசு நிலுவைகள் மற்றும் காசுக்குச் சமமானவை*** | **146,128,811** | 143,510,890 |

பிணையம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபம் அல்லது இழப்பு விலை மீள்மதிப்பீட்டிலிருந்து அடையப்படாத இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (பிணையத்தின் விற்பனை மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும்.

**(ஆ) வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள்**

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப் படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் ஐந்தொகையில் ஒதுக்குகளின் கீழ் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களின் பெறுமதியின் அதிகாிப் பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் இழப்புக்களும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கும்வரை அல்லது வேறுவிதமாக இதனை அகற்றும்வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை பங்கின் தனியொரு கூறாக (ஐந்தொகையின் ஒதுக்குகளின் கீழ் காட்டப்படுகிறது) இனங் காணப் படுகின்றது. அந்த நேரத்தில் முன்னர் மூலதனப்பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது இழப்பு வருமானமாக உள்ளடக்கப்படும்.

**(இ) தங்கத்தினாலான பிணையங்கள்**

வெளிநாடுகளிலுள்ள இணைக்கிணை நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் தங்கப் பிணையங்கள் ஆரம்பத்தில் கிரயச்செலவில் குறிப்பிடப் படுகின்றன.

தங்கத்தின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்களும் இழப்புக்களும் வருமானக்கூற்றில் இனங்காணப்படும். தங்கம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபம் அல்லது இழப்பு விலை மீள்பெறுமதி யிடலிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பாக) பதிவு செய்யப்படும். இலாபமாகவோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (தங்கத்தினை விற்பதன் மூலமாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்படும் இலாபமாகப் பதியப்படும்.

**(ஈ) பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் முகவராகத் தொழிற்படுவதனைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில் ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப்பங்கிற்காக ப.நா.நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகின்றது. ப.நா.நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாக கணிக்கப்படுகின்றன. ப.நா.நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு ஐந்தொகை திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து ப.நா.நிதிய சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதி யிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் இழப்புக்களும் வருமானக்கூற்றில் இனங் காணப்படும்.

ப.நா.நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்து கட்டணங்களும் வட்டியும் வருமானக் கணக்கில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**(உ) காசும் காசிற்கு சமமானவைகளும்**

காசும் காசிற்கு சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் உள்ள காசு மற்றும் வைப்புக்களையும் உள்ளடக்கியது.

உள்நாட்டு நாணயத்திலான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் மேற்கொள்கின்றது. இவை காசின் நகர்வுடன் தொடர்பானவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன் முக்கியமாக இலங்கை அரசாங்கத் துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினூடாக கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் அடிப்படையில், ஏலங்களில் கோரப்படாத திறைசேரி உண்டியல்களின் பகுதியின் கொள்வனவு மற்றும் அரசாங்கம், மத்திய வங்கி என்பவற்றால் நாணயக்கொள்கை நடைமுறையின் கீழ் வழங்கப்பட்ட பிணைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள்

விற்பனைகள் அல்லது அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவேடுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாக பிரதிபலிக்கப் படுகின்றன. இவை நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 20, மற்றும் குறிப்பு 21 என்பவற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

ஏக அதிகாரம் கொண்ட அதிகார சபையாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி நாணயவிதிச் சட்டத்திற்கிணங்க, பொதுமக்களுக்கு நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வழங்கல் செய்யப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனையும் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பாகவுள்ள வேளையில், உடமையாளரின் கையில் காசு விடயமாகவுள்ளது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திலான அசைவானது காசுப்பாய்ச்சல் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கின்ற, மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்றுறை முறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவு கட்டளை செயற்பாடுகளுடாக நாணயத்தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில் பெறப்பட்ட பொருள்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசினை பகிர்ந்தளிக்கின்றது. இது ஒன்றில் சுற்றோட்ட பொறுப்பிலுள்ள நாணயங்களுடன் அல்லது வர்த்தக வங்கிகளிலுள்ள மீதிகளுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு காசு/கொடுப்பனவு கட்டளையின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் நீங்கலான காசு மற்றும் காசிற்கு சமமானவற்றை உள்ளடக்கி யுள்ளன.

**(ஊ) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் ஐந்தொகையில் சொத்துக்களாக தொடர்ந்தும் பதிவு செய்யப் படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்கு மிடையேயான வேறுபாடும், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்கு மிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இவை வருமானக் கூற்றில் செலவினமாகக் காட்டப் படுகின்றன.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன் படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) ஐந்தொகையில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப் படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்றுசேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**(எ) முதலீட்டுப் பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள்**

வங்கியின் முதலீட்டுப் பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணையங்களை உள்ளடக்கு கின்றது. இவை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதனால் ஐந்தொகையில் இச்சொத்துப்பட்டியல் தீர்ப்பனவு செய்யப்படும் செலவில் பதியப்படுகிறது.

**(ஏ) அரசிற்கான கடன்கள்**

திருத்தப்பட்டவாறான 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 89 இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**(ஐ) ஏனைய நிறுவனங்களிற்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்பத் தொகைகளிலிருந்து சேகரிக்கப்பட முடியாத தொகை ஏதுமிருந்தால் அதை கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன்களுக்கான (பெறமுடியாத கடன்கள்)

ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஏற்பாடு செய்யப்பட்ட தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப்பெறப்படத்தக்க தொகைக்கு மிடையிலான வேறுபாடாகும். அறவிட முடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும்போது பதிவழிக்கப்படுகின்றன.

**(ஒ) வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள், பொறுப்புக்களின் கடன் தீர்ப்பனவுக் கிரயச்செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப்பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங் காணப்படுகின்றது. வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாகத் தோன்றும் இலாபங்களும் இழப்புக்களும் உடனடியாகவே வருமானக்கணக்கில் செலவுகளாக இனங்காணப்படுகின்றன. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது இழப்போ விலை மீள்பெறுமதியிடலிலிருந்தான பெற்றுக்கொள்ளப்படாத இழப்பாக (இலாபமாகப்) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பில் மீள்கொடுப்பன வினூடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இழப்புக்களாக (இலாபம்) பதிவு செய்யப்படுகின்றது.

**(ஓ) பெறுதிக் கருவிகள்**

பெறுதிக் கருவிகளில் வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டு ஒப்பந்தங்களில் காணப்படுகிறது. அத்தகைய பெறுதி நிதியியல் கருவிகள் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப் படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியாக இதையொத்த முதிர்ச்சி தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்பான வீதங்களில் கணிக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது இழப்பு நிலையிலுள்ள அனைத்து பெறுதிக் கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது ஐந்தொகையிலுள்ள விற்பனைக்கு கிடைக்கத் தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

**(ஔ) ஏனைய நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக்காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங் காணப்படுகின்றன.

**(க) நிதி சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

நிதிச்சொத்தொன்று பின்வருவன தொடர்பாக பெறுமதி இழப்பு உடையதாக இருக்கின்றதோ என்பதனை அறிவதற்காக வங்கியானது ஒவ்வொரு ஐந்தொகை திகதியிலும் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது.

**(i) கடன்தீர் செலவில் கொண்டுவரப்பட்ட சொத்துக்கள்**

கடன்தீர் செலவில் கொண்டுவரப்பட்ட கடன்கள் மற்றும் பெறுவனவுகள், பெறுமதி இழப்புக்கு உட்பட்டமை தொடர்பாக கண்டுகொள்ளக்கூடிய ஆதாரம் காணப்படுமானால் இழப்பின் தொகையானது சொத்துக்களின் அளவுக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் நடப்பு பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் (உறப்படாத எதிர்கால வரவு இழப்புக்கள் நீங்கலாக) நிதிச் சொத்துக்களின் பயனுறுதியுள்ள வட்டி வீத மூலத்தில் கழிவிடப்பட்டு கணிக்கப்படுகின்றது. (உ+ம் பயனுறுதியுள்ள வட்டி வீதமானது ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது) சொத்தின் அளவானது நேரடியாகவோ அன்றி மேலதிக கொடுப்பனவுக் கணக்கினை பாவிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும். இழப்பின் அளவானது வருமானக்கூற்றில் இனங்காணப்படும்.

வங்கியானது பெறுமதி இழப்பு காணப்படுவதற்கான கண்டுகொள்ளக்கூடிய ஆதாரம் குறிப்பிடத்தக்க தனிப்பட்ட நிதிச்சொத்துக்களுக்கு தனிப்பட்டதாக மற்றும் குறிப்பிடத்தக்க தனிப்பட்டதற்ற நிதிச் சொத்துக்களுக்கு தனிப்பட்ட அல்லது ஒன்று சேர்ந்ததாக காணப்படுவதனை முதலில் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட மதிப்பீட்டில் நிதிச்சொத்தில் பெறுமதி இழப்பு காணப் படுவதற்கான எந்த கண்டு கொள்ளக்கூடிய ஆதாரமும் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டால், குறிப்பிடத்தக்கதோ அன்றி குறிப்பிடத்தக்கதற்றதோ சொத்தானது அதே வரவு இடர்நேர்வு பண்புகளுடன் நிதிச்சொத்துக்களின் குழுவுக்குள் உள்ளடக்கப் படுவதுடன் அந்த நிதி சொத்துக்களின் குழு பலவீனத்திற்காக ஒன்றுசேர்த்து மதிப்பிடப் படுகின்றது. பலவீனத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும்

தொடர்ச்சியாக இனங் காணப்பட்ட பலவீன இழப்புக்கள் பலவீனத்தின் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

ஒரு தொடர்ச்சியான காலத்தில் பலவீன இழப்பு வீழ்ச்சியடைவதுடன் அவ்வீழ்ச்சி பலவீன இழப்பு இனங் காணப்பட்டதன் பின்னரான நிகழ்வு ஒன்றுடன் கண்டுகொள்ளக்கூடிய வகையில் தொடர்புபட்டிருந்தால் ஆரம்பத்தில் இனங் காணப்பட்ட பலவீன இழப்பு எதிர்மறையாக்கம் வருமானக்கூற்றில் இனங் காணப்படுகின்றது. அத்துடன் எதிர்மறையாக்கல் திகதியில் சொத்து கொண்டுள்ள பெறுமதி அதன் கடன்தீர் செலவினை மேவாது.

#### (ii) விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள்

விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள சொத்து பலவீனப்பட்டால், ஒரு தொகையானது செலவிற்கும் (எந்த ஆரம்ப கொடுப்பனவு மற்றும் கடன் தீர்ப்பனவு பெறுமதியின் நிகர பெறுமதி) மற்றும் அதன் தற்போதைய சந்தை பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம், இலாபத்திலோ அல்லது இழப்பிலோ முன்னர் இனங் காணப்பட்ட எந்த பெறுமதி இழப்பையும் கழிவீடு செய்தல் என்பன அதன் நிகர மதிப்பில் வருமானக் கூற்றிற்கு மாற்றப்படும். நிகர மதிப்பீட்டு கருவிகளிலான எதிர்மறையாக்கல்கள் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வேறுபடுத்தல்களாக இலாபத்தில் இனங் காணப்படவில்லை. கருவிகளின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பானது பலவீன இழப்பொன்று இலாபத்திலோ அல்லது நட்டத்திலோ இனங் காணப்பட்டதன் பின்னரான நிகழ்வு ஒன்றுடன் கண்டுகொள்ளக் கூடிய வகையில் தொடர்புபட்டிருந்தால் கடன் கருவிகளினாலான பெறுமதி இழப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக எதிர்மறையாக்கப்படும்.

### 1.10 துணை நிறுவனங்களில் முதலீடு

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச்செலவு முறையில் கணிக்கப்படுகின்றன.

### 1.11 தங்க இருப்பு

உயர்ந்த திரவத் தன்மையைக் கொண்ட பண்டமான தங்க இருப்பு கிரயச்செலவில் வைத்திருக்கப்படுகின்றது.

### 1.12 இருப்புக்கள்

இருப்புக்கள் குறைந்த கிரயச் செலவிலோ அல்லது விற்றுப்பெறக்கூடிய பெறுமதியிலோ வைத்திருக்கப்படுகின்றன. கிரயச்செலவு நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. மெதுவாக வெளிச்செல்லும் இருப்புக்களுக்கு ஒதுக்கம் செய்யப்படுகின்றது.

### 1.13 சொத்து, பொறி மற்றும் கருவி

நாளுக்கு நாள் சேவையின் கிரயச்செலவுகள் நீங்கலாக பெறுமதியிலான திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட பலவீனம் என்பன கழிவு செய்யப்பட்டு சொத்து, பொறி மற்றும் கருவி தொடர்பான சகல விடயங்களும் கிரயச்செலவில் குறிப்பிடப்படுகின்றது. இனங் காணப்பட்ட பிரமாணத்தை உள்ளடக்கப்படும் செலவானது அடையும்பொழுது குறிப்பிட்ட கிரயச் செலவுகள், குறிப்பிட்ட சொத்து, பொறி மற்றும் கருவிகளின் பாகங்களை மாற்றியமைத்தலுக்கான செலவினையும் உள்ளடக்கி இருக்கும். காணி மற்றும் கட்டிடங்கள் மறுமதிப்பீட்டு திகதியில் கட்டிடங்கள் மற்றும் பலவீன தொடர் விதிப்பனவில் கழிவு செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு சந்தைப் பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றது.

பெறுமானத் தேய்மானமானது மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தினைக் கவனத்தில் கொண்டு நேர்கோட்டு வழிமுறையில் கணிக்கப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகை | பயனுறுதிக் காலம் |
|---|---|
| இலவச காணியிலான கட்டிடங்கள் | 50 ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணி, கட்டிடம் | குத்தகைக்காலத்திற்கு மேல் |
| பொறி மற்றும் பொறி செய்பாகங்கள் | 20 ஆண்டுகள் |
| தளபாடம் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் | 4 ஆண்டுகள் |
| வாசிப்பதற்கு பயன்படும் பொருட்கள் | 3 ஆண்டுகள் |

முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது மீளப்பெற்றுக் கொள்ள முடியாதபோது, நிகழ்வு அல்லது மாற்றம் குறிகாட்டும் சந்தர்ப்பத்தில் பொறி மற்றும் கருவிகளின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பலவீனத்திற்காக மதிப்பிடப்படுகின்றது. கீழ்வரும் செலவு, காணி மற்றும் கட்டிடங்களிலான ஆரம்ப இனங்காணல்களில் முன்கொண்டுவரும் மீள் பெறுமதியிடப்பட்ட

தொகையானது கட்டிடங்கள் மற்றும் தொடர்ந்துவரும் திரண்ட பலவீன இழப்புக்களிலான தொடர்ந்துவரும் திரண்ட பெறுமானத் தேய்வுகள் கழிவீடு செய்யப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியிலான சந்தைப் பெறுமதியாகும்.

மீள்மதிப்பிடப்பட்ட சொத்தினது சந்தை பெறுமதியானது முன்கொண்டு வரப்படும் தொகையிலிருந்து வேறுபடுவதில்லை என்பதனை நிச்சயப்படுத்த அடிக்கடி மேற்கொள்ளும் மீள்மதிப்பீடானது போதுமானதாகும்.

முன்னரே வருமானச்செலவு கூற்றில் இனங் காணப்பட்ட மீள்மதிப்பீட்டு பெறுமதிகளிலான குறைவுகளிற்கு எதிராக பதிவு செய்யப்பட்ட ஒதுக்குகள் தவிர்ந்த மதிப்பீட்டின் மிகைகள் ஐந்தொகையின் உரிமையாண்மைப் பகுதியில் உள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தினுள் வரவு வைக்கப்படுகின்றது. இந்நிலையில், அதிகரிப்பானது வருமானக்கூற்றில் இனங் காணப்படுகின்றது. வருடத்தின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலுள்ள அதே சொத்தின் பதிவழிக்கப்பட்ட பற்றாக்குறை தவிர்ந்த மறுமதிப்பீட்டின் பற்றாக்குறை தொகையானது வருமானக்கூற்றில் இனங் காணப்படுகின்றது. பாவனை அல்லது ஒதுக்கிவைத்தலில் எதிர்காலத்தில் எந்த பொருளாதார நன்மைகளும் எதிர்பார்க்கப்படாத போது அல்லது சொத்து, பொறி மற்றும் கருவியின் பாகம் ஒன்று ஒதுக்கிவைத்தலின் போது மீள் இனங் காணப்படு கின்றது. ஒதுக்கிவைத்தலின் போது விற்பனை செய்யப்பட்ட சொத்திற்கான மறுமதிப்பீட்டு மேலதிக தொகையானது நிறுத்திவைத்த இலாபத்திற்கு மாற்றப் படுகின்றது. சொத்துக்களின் மீதி பெறுமதிகள், பயன்தரு ஆயுட் காலம் மற்றும் முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான சந்தர்ப்பங்களில் ஒழுங்காக சீராக்கப் படுகின்றது.

### 1.14 பெறுவனவுகள்

பெறக்கூடிய கணக்குகள், ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஒதுக்கினைச் செய்தபின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் குறிக்கோள் சான்றுகளின் அடிப்படையில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

### 1.15 நானாவிதச் சொத்துக்கள்

நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப்பெறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

### 1.16 ஏற்பாடுகள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்டரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக்கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் மூலங்களின் வெளிப்பாய்ச்சல், தேவைப்படுவதுடன் இக்கடப்பாட்டுத் தொகையை நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறியமுடியும். ஏற்பாடு ஒன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங் காணப்படுகிறது.

### 1.17 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திற்கான பொறுப்பு ஐந்தொகையில் முகப்பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 1.18 ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வு பெற்றதன் பின்னரான நன்மை திட்டங்கள்

#### நிர்ணயிக்கப்பட்ட நன்மை திட்டங்கள்

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், ஓய்வூதிய வெகுமதி, ஓய்வு பெற்றதன் பின்னரான மருத்துவ நன்மைகள் ஆகிய நிர்ணயிக்கப்பட்ட நன்மை திட்டங்களை வங்கி நடைமுறைப்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களுக்கும் வங்கியும் திட்டத்திற்கு பொருத்தமான நன்மை பெறுவோரும் தனியாக நிர்ணயிக்கப்படும் நிதியமொன்றிற்கு உதவு தொகையினை செலுத்தி வருகின்ற அதேவேளை ஓய்வூதிய வெகுமதி மற்றும் ஓய்வு பெற்றதன் பின்னரான மருத்துவ நன்மைகள் நிதியிடப்படாத போதும் ஏனையவைகள் அனைத்தும் நிதியிடப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழான நன்மைகளை வழங்குவதற்கான செலவு எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தி தனித்தனியாக தீர்மானிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உண்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு தனிஆளுக்குமான திட்டத்திற்கான திரண்ட இனங் காணப்படாத உண்மை இலாபங்களோ அல்லது இழப்புக்களோ தெளிவாக குறித்துரைக்கப்பட்ட நன்மைக் கட்டுப்பாடுகளின் 10 சதவீதத்தினை விஞ்சுமிடத்தும் மதிப்பிடப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதியினையும் விஞ்சுமிடத்து வருமானமாக அல்லது செலவாக இனங் காணப்படுகின்றது.

உண்மை இலாபங்களும் இழப்புக்களும் இலாபமாகவோ அல்லது இழப்புக்களாகவோ இத்திட்டங்களில் பங்கேற்கும் ஊழியர்களின் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சியிருக்கும் வேலைக் காலத்தினால் இனங் காணப்படுகின்றன.

சேவைக்கு பின்னரான செலவானது நன்மைகள் உரித்தாகும் வரை சராசரிக் காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு முறையில் இனங் காணப்படுகின்றது. அறிவுரையை பின்பற்றுவதன் மூலம் நன்மையானது ஏற்கனவே உரித்தாக்கப் பட்டிருக்குமானால் மாற்றங்கள், நன்மை திட்டம், சேவைக்கு பின்னரான செலவு உடனடியாக இனங் காணப்படுகின்றது.

**நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகை திட்டங்கள்**

ஊழியர்கள் தொடர்பான நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமநிதிய பங்களிப்புக்களுக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் ஊழியர்சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கின்றது. இவை தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டு வரும் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

### 1.19 கொடைகள்

கொடைகள் பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து கொடைகள் அவற்றின் சாதாரண பெறுமதியில் இனங் காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும்பொழுது, ஒழுங்கு முறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்கு தேவையான காலப்பகுதிக்கு வருமானக்கணக்குக் கூற்றில் இனங் காணப் பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சாதாரண பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு தொடர்பான சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, தொடர்பான சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றிற்கு விடுவிக்கப்படும்.

### 1.20 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச்செலவினையும் உள்ளடக்கு கின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்றுசேரும் விடுப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.21 தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையை கருத்திற்கொண்டு வருமானக் கூற்றில் இனம் காணப்படுகின்றது.

### 1.22 வருமானவரி

1949 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட 58 ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின் கீழ் வங்கி வருமானமானது வரியிலிருந்து விலக்களிக்கப் படுகின்றது.

### 1.23 பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிருவாக ஒழுங்குமுறை களின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிருவகிக்கப்பட்ட தொகை இந்த நிதியியல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

### 1.24 வருமானம் மற்றும் செலவினங்கள்

வங்கிக்கு பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டுவரக்கூடியதாகவும் அவ்வருமானத்தினை நம்பகமான முறையின் அளவிடக்கூடியதாகவும் உள்ளபோது வருமான மானது இனங்காணப்படுகின்றது. உறப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தை கொண்டு நடத்துவது தொடர்பாகவும் சொத்து, பொறி மற்றும் கருவியை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் உறப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும்போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும், செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும்

குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

### (அ) வட்டி

உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்றுசேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான நறுக்கிலிருந்தான வருவாய்களையும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் மீது கொடுபட வேண்டிய கழிவுகளையும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும்பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும்வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

### (ஆ) பங்கிலாபங்கள்

பங்குடமையாளர்கள் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டவுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகின்றது.

### (இ) பல்தரப்பட்டவை

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் இனங்காணப் பட்டுள்ளன. சொத்து, பொறி மற்றும் கருவிகளின் விற்பனை மீதான வருமானத்தன்மையின் தேறிய இலாபங்களும், இழப்புக்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கணக்கில் காட்டப்பட்டுள்ளன. மீளப்பெறுமதியிடப்பட்ட சொத்து, பொறி மற்றும் கருவியின் விற்பனவின் போதும் இச்சொத்து சார்பாக மீளப்பெறுமதியிடல் ஒதுக்கில் எஞ்சியிருக்கும் தொகை நேரடியாக திரண்ட இலாபத்திற்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

எதிர்பாராத நடவடிக்கைகள் மற்றும் முக்கிய வருமானத்தினை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத அவ்வாறான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

### 1.25 ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் உள்ளிட்ட எதிர்பாராத மற்றும் கடப்பாட்டு விடயங்கள்

ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடு என்பன ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் என இனங் காணப்பட்ட தொடர்பான தலைப்புக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளன.

### 1.26 நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றுவதற்கு அல்லது மேற்கொள்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது வழிமுறைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கி அதிகாரங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம், என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறை என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறைமுகவராண்மையாகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- நாணய மற்றும் செலாவணிவீத கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- நாணய வெளியீடு.
- நிதியியல் முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டினையும் வசதிப்படுத்தல்.
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்.
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும் மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்தலும்.

- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களையும், முற்பணங்களையும் வழங்குதல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படல்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்கலின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்தும் பொருட்டு அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

### (அ) வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டு செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக (வெளிநாட்டு ஒதுக்குகள்) வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ, இசுடேர்லிங் பவுண் மற்றும் யப்பானிய யென் என்பன காணப்பட்டன. இவ்வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது அரச பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் தீர்ப்பனவு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக்காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

### (ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள். திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்தான தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பட்டியலொன்றைக் கொண்டுள்ளது. வர்த்தக நடவடிக்கைக்காக அன்றி நாணய தொழிற்பாடுகளுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கித் தொழில் முறையின் பாதுகாப்பினையும் ஆற்றலினையும் உறுதிப்படுத்துவதனையும் வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் வழங்கியோரின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதனையும் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் தொடர்பாக மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. 2005 இன் இறுதியில் மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் 36 உரிமம் பெற்ற வங்கிகள் அதாவது 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 14 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தொழிற்பட்டன.

2005 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

## 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வெளியிட்டமை

2005 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பல புதிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும், வழிகாட்டல்களையும் அதேபோன்று ஏற்கனவேயுள்ள முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கு திருத்தங்களையும் வெளியிட்டது. இவ்வொழுங்கு விதிகளினதும் வழிகாட்டல்களினதும் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. இப் புதிய தேவைப்பாடுகள் வங்கி அதிகாரமளிப்புச் செயற்பாடுகள், இஸ்லாமிய வங்கித்தொழில் வசதிகளளித்தல், மூலதனத்தினை வலுப்படுத்தல், கம்பனி ஆளுகை, இடர்நேர்வினைக் தணித்தல் மற்றும் சந்தை வெளிப்படுத்துகை என்பன பற்றியதாக இருந்தது. அவை பின்வருமாறு.

அ. வங்கிப் பணிப்பாளர்கள், 2005 இன் வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளின் படி, அவர்கள் அத்தகைய பதவிகளை வகிப்பதற்கு சரியான பொருத்தமான ஆட்கள் என்பதற்கு சத்தியக்கடதாசியொன்றினையும் பிரகடனம் ஒன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ. தற்போதுள்ள முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில் இஸ்லாமிய தோற்றப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட வங்கித் தொழில் சாதனங்களை வழங்க வங்கிகளை அனுமதித்தல்.

இ. ஆகக்குறைந்த பங்குமூலதனத் தேவைப்பாடு: வலுவான வங்கிகளின் பிரசன்னத்துடன் வங்கித்தொழில் துறையினை திரட்சிப்படுத்தும் நோக்குடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.2500 மில்லியனுக்கும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் தவிர்ந்த உரிமம் பெற்ற வங்கிகளுக்குமான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு ரூ.200 மில்லியனிலிருந்து ரூ.1500 மில்லியனுக்கும் உயர்த்தப்பட்டது. போதாமல் உள்ள மூலதனத்தில் 50% 2006 இறுதியில் ஈடுசெய்யப்படுமிடத்து ஏற்கனவேயுள்ள வங்கிகளுக்கு 2007 திசெம்பர் வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஈ. தொடர்புபட்ட தரப்பினருக்கு கடன் வசதி: பணிப்பாளருக்கு அல்லது பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு வங்கியினால் வழங்கப்படும் கடன்வசதியின் உச்ச எல்லை ஒப்புதலளிக்கப்பட்ட பிணையங்களுக்கெதிராக ரூ.500,000 ஆகவும் பிணையங்களைத் தேவைப்படுத்தாமல் கொடுகடன் அட்டைகளுக்கெதிராக ரூ.500,000 ஆகவும் காணப்பட்டது.

உ. தனியொரு கடன்பாட்டாளர் எல்லை: தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை மூலதனத்தில் 30% என விதிமுறைப்படுத்தப்படுவதன் மூலம் அனைத்து வங்கிகளிடையேயும் ஒரே விதமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகவும் (அ) தரமிடப்பட்ட பன்னாட்டு மற்றும் உள்நாட்டு வங்கிகளினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தினால் பிணையிடப்பட்ட வசதிகள் அல்லது வெளிநாட்டு வங்கிகளாக இருக்கும் பட்சத்தில் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட பொறுப்பேற்பு/உத்தரவாதம் (ஆ) உள்கட்டமைப்பு செயற்றிட்டங்களைப் பொறுத்தவரை அத்தகைய செயற்றிட்டங்களில் குறைந்தது 50 சதவீதம் கடன்வசதிகளை வழங்கும் வங்கி தவிர்ந்த இலங்கைக்கு வெளியேயுள்ள மூலங்களினால் அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் அத்துடன்/அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் கூட்டமைப்பினால் நிதியிடப்படுமிடத்தும் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையிலிருந்து விலக்குப்பெறும் விதத்திலும் தனியொரு கடன்பாட்டாளர் வரையறை மீதான ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டன.

ஊ. நிதியியல் கூற்றுக்களை வெளிப்படுத்தல். சந்தை ஒழுங்குகளையும் இடர்நேர்வு மதிப்பீடுகளையும் உயர்த்தும்

நோக்குடன் பத்திரிகைகளில் வங்கிகளினது காலாண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கான விபரிக்கப்பட்ட படிவம், செயற்படாக் கடன்கள், மூலதனப் போதுமை, திரவத்தன்மை, வட்டி எல்லை, தொழிற்பாட்டுச் செலவுகள் மற்றும் இலாபத்தன்மை போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட செலவுகள் மற்றும் இலாபத்தன்மை போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளை உள்ளடக்கும் விதத்தில் திருத்தப்பட்டன.

மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் துறைக்கு தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையொன்றினூடாக பாசல் II உடன்படிக்கையினை 2007/08 இல் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கு முறையொன்றினை அறிமுகப்படுத்தியது. பாசல் II இன் நடைமுறைப்படுத்தலுக்காக சுய மதிப்பீடொன்றினை மேற்கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. நடைமுறைப்படுத்தும்பொழுது எழக்கூடிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக வங்கிகள் மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் என்பன வற்றிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. 2006 மார்ச்சிலிருந்து சந்தை இடர்நேர்விற்காக மூலதன விதிப்பனவொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டமைப்பொன்று இறுதிப்படுத்தப்பட்டதுடன் வங்கித் தொழில் துறையின் கருத்துக்களுக்காக காத்திருக்கிறது. மத்திய வங்கி "ஆசிய பசுபிக் பிராந்தியங்களில் பாசல் II இனை நடைமுறைக்கிடுவதற்கு ஆயத்தம் செய்தல்" என்ற தலைப்பின் கீழ் "10ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கி- FSI பிராந்திய ஆய்வரங்கு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு" என்ற தலைப்பின் கீழும் இரண்டு பன்னாட்டு ஆய்வரங்குகளை கொழும்பில் நடாத்தியது.

## 2.2 வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களுக்கான ஒப்புதல்கள்

2005 ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க வங்கித்தொழில் உரிமங்களுக்காகவும் வங்கிக்கிளைகளைத் திறக்கவும், மூடிவிடவும், வேறோரிடத்தில் அமைப்பதற்குமாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்தும் செய்முறைப்படுத்தியது. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றாக தொழிற்படுவதற்காக எஸ்.எம்.ஈ.வங்கி லிமிட்டெ என வழங்கப்படும் வரையறுக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழிற்முயற்சி வங்கிக்கு உரிமம் வழங்கப்பட்டது. இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியான என்.டி.பி வங்கியினதும் வியாபாரத்தினைப் பொறுப்பேற்ற வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கிக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகத் தொழிற்படுவதற்கு உரிமம் வழங்கப்பட்டது. இந்தியாவிலுள்ள ஐசிஐசிஐ வங்கி இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகத் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கு இடையேற்பட்டு ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் 50 புதிய கிளைகளைத் திறப்பதற்கும் 85 கிளைகளை வேறு இடங்களில் அமைப்பதற்கும், விரிவாக்க அலுவலகங்கள், அடகுபிடித்தல் நிலையங்கள், மாணவர் சேமிப்பகங்கள் போன்ற ஏனைய வங்கித்தொழில் நிலையங்களும், 17 கிளைகளை வேறு இடங்களில் அமைப்பதற்கும், 6 வங்கித்தொழில் நிலையங்களை தரமுயர்த்துவதற்கும், 38 தன்னியக்க கூற்றுப்பொறிகளை தலத்திற்கு வெளியே அமைப்பதற்கும், ஒரு தன்னியக்க கூற்றுப்பொறியினை வேறிடத்தில் அமைப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி, 2005 இறுதியில் 1507 கிளைகளும், 2314 ஏனைய வங்கித்தொழில் நிலையங்களும் 836 தன்னியக்க கூற்றுப்பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் இரு முனைகளைக் கொண்ட அணுகுமுறைகளை கொண்டிருந்தன. அதாவது தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினூடாக வரையறுக்கப்பட்ட நியதிக் காலப்பகுதியில் தலப்பரீட்சிப்புக்களினூடாகவும் வங்கிகளின் ஆரோக்கியத்தினை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் அணுகுமுறையினைக் கொண்டிருந்தது.

## 2.3 உரிமம் பெற்ற வங்கிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறை

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு வங்கிகளினால் காலத்திற்குக்காலம் வழங்கப்பட்ட நிதியியல் தகவல்களின் அடிப்படையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் நிதியியல் நிலைமைகளை இத்தொழிற்பாடு பகுப்பாய்வு செய்கிறது. இடர்நேர்வு தொடர்பான மதிப்பீடுகள் தனிப்பட்ட வங்கிகளாகவும் வங்கித்தொழில் முறையினை முழுவதுமாகக் கொண்டும் மேற்கொள்ளப்படுகின்றன. தலத்திற்கு வெளியேயான

கண்காணிப்புக்கள் வங்கிகளினது நிதியியல் நிலைமைகளின் மீது ஏற்படும் மேலதிக புலனாய்வும் பரீட்சிப்பும் தேவைப்படுகின்ற குறிப்பிடத்தக்கதும் முக்கியமானதுமான மாற்றங்களையிட்டு நேர காலத்துடன் எச்சரிக்கை முறையொன்றினை விடுக்கின்றன. வங்கித்தொழில் துறையினையும் பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளையும் உள்ளடக்கும் விதத்தில் மத்திய வங்கியின் தரவுத் தளத்தினூடாக புதிய உடனடி வெப்தள அறிக்கையிடும் முறையொன்று தற்பொழுது விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இப்புதிய முறையானது 2005 இல் பரீட்சார்த்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2006 இல் இது முழுமையாக நடைமுறைக்கிடப்படும்.

## 2.4 உரிமம் பெற்ற வங்கிகளின் நியதித்தன்மை பரீட்சிப்புக்கள்

நாணயவிதிச் சட்டத்தினதும் வங்கித்தொழில் சட்டத்தினதும் ஏற்பாட்டு நியதிகளின்படி, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் நாணயச்சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற தற்பொழுது இரண்டாண்டுகளாகவுள்ள ஒவ்வொரு பரீட்சிப்புக் காலப்பகுதியிலும் ஒரு முறையாவது நியதிச்சட்ட பரீட்சிப்புக்களுக்கு உட்பட வேண்டும். வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தலப்பரீட்சிப்பு செய்முறையானது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் இது இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதிலும் இவ்விடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதிலும், இவ்விடர்நேர்வுகளைத் தணிப்பதற்கேற்ற விதத்தில் மூலதனப்போதுமையினை மதிப்பிடுவதிலும் கவனம் செலுத்தியது. 2005 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 22 நியதி பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. இதில் 2005 இல் தொடங்கிய 12 பரீட்சிப்புக்களும் 2004 இல் தொடங்கிய 10 பரீட்சிப்புக்களும் பூர்த்தி செய்ததுடன் 2005இல் தொடங்கிய 12 இல் 8 வங்கிகளின் பரீட்சிப்புக்களும் முற்றுப்பெற்றதுடன் 4 பரீட்சிப்புக்கள் விரைவில் நிறைவயடையவுள்ளன. இதன்படி, வங்கி மேற பார்வைத் திணைக்களம் 2005 இல் 18 பரீட்சிப்புக்களை நிறைவு செய்துள்ளது.

## 2.5 வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் மீதான தீர்மான நடவடிக்கை

2002 ஒத்தோபரில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரம் இடைநிறுத்தப் பட்டதனைத் தொடர்ந்து, நாணயச்சபை பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வங்கித் தொழில் உரிமத்தினை இரத்துச் செய்ய தீர்மானித்ததுடன், நாணயச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி பிரமுக சேமிப்பு வங்கியின் தொழிற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு கட்டளையிட்டது. எனினும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு, மற்றும் நாணயச்சபையின் தீர்மானத்தினை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வைப்பாளர் குழுக்களினாலும் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் முகாமைத்துவத்தினாலும் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்களைத் தொடர்ந்து, சட்டத்தின் நியதிகளின்படி, பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை மீளத்தொடங்குவதற்கான சாத்தியங்களை மத்திய வங்கி மேலும் பரிசீலனைக்கெடுத்தது. இது தொடர்பாக பல தரப்பினரும் வியாபாரத்தினை மீண்டும் தொடங்கும் நோக்குடன் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியினை மீளவமைப்பதற்கான தமது ஆர்வத்தினை வெளிப்படுத்தினர். மத்திய வங்கி சுதந்திரமான ஆலோசனையாளரான எர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் உதவியுடன் முன்மொழிவுகளையும் கோட்பாட்டுப் பத்திரங்களையும் மதிப்பீடு செய்ததுடன், முன்மொழிவுகளில் ஒன்று கூட வைப்பாளர்களினதும் மற்றும் கடனீந்தோரினதும் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கேற்ற விதத்தில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் மீள் மூலதன மயப்படுத்தி மீளவமைப்பதற்கான சாத்தியங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதனைக் கண்டறிந்தது. ஆகவே நாணயச்சபை வங்கித்தொழில் சட்டத்தின் 76 எம் (i) இன் நியதிகளின்படி பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை 2004 ஓகத்து 3 ஆம் நாளன்று இடைநிறுத்துவதற்கும் நாணயவிதிச் சட்டத்தின் 30 (3) ஆம் பிரிவின் கீழ் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியினை முடிவிடுவதற்கு உரிய நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யுமாறும் நாணயவிதிச் சட்டத்தின் 30(10) (ஆ) இன் நியதிகளில் பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் வங்கித்தொழில் உரிமத்தினை இரத்துச் செய்யுமாறும் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரைப் பணிப்பதற்கு தீர்மானித்தது. இதன்படி, பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியினை முடிவிடுவதற்கான கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 168/சி.ஒ என்ற இலக்கத்தினைக் கொண்ட வழக்கினை வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து பிரமுக சேமிப்பு அபிவிருத்தி

வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் பிரமுக சேமிப்பு வங்கியினை ஒடுக்கி அதன் உரிமத்தினை இரத்துச் செய்வதென்ற நாணயச்சபையின் தீர்மானத்தினை நீக்கிவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 1955/2004 என்ற இலக்கம் கொண்ட வழக்கினைத் தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விசாரணையும் இறுதித் தீர்மானமும் எடுக்கப்படும்வரை மூடிவிடும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவினை வழங்கியது. வழக்கிற்கான விவாதங்கள் 2005 யூனில் முடிவடைந்துள்ளதுடன் தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. 2005 திசெம்பரில் வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடனீந்தோரின் நன்மை கருதி பிரமுக சேமிப்பு வங்கியினை மீளமைப்பதற்கான தனது விருப்பத்தினை அரசாங்கம் வெளிப்படுத்தியதுடன், சாத்தியமான முன்மொழிவுகளை மாண்புமிகு அரச வங்கிகளின் அபிவிருத்தி அமைச்சருக்கு பொருத்தமான விதந்துரைப்புக்களை வழங்குவதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இதன்படி, 2006 சனவரியில் புதிய அரச வங்கியொன்று ஏற்படுத்தப்பட்டு அது பிரமுக சேமிப்பு வங்கியின் பொறுப்புக்களையும் நல்ல சொத்துக்களையும் பொறுப்பேற்க வேண்டுமென்ற முன்மொழிவிற்கு அரசாங்கம் ஒப்புதலளித்த வேளையில் பிரமுக சேமிப்பு வங்கியின் வராத சொத்துக்கள் இந்நோக்கத்திற்காக நிறுவப்படவுள்ள உத்தேச சொத்து முகாமைத்துவக் கம்பனிக்கு மாற்றல் செய்யப்படும்.

## 2.6 நிதியியல் பாதுகாப்பு வலை-வைப்பு காப்புறுதித் திட்டத்தின் நிருவாகம்

1987 இல் தொடங்கிய சுயவிருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. இத்திட்டம் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களுக்கும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்புடையதாகும். 2005 இல் ஒரு கூட்டுறவுச் சங்கம் மட்டுமே அதன் கிராமிய வங்கியினது வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பாக இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி வசதியினைப் பெற்றுக்கொண்டது. 2005 திசெம்பர் 31 ஆம் நாளன்று வைப்புக் காப்புறுதி நிதியம் சேகரிக்கப்பட்ட கட்டணங்களையும் 1997 இல் மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் உள்ளடக்கி ரூ.186 மில்லியனாகக் காணப்பட்டது. இந்நிதிகள் ரூ.201 மில்லியன் கொண்ட முகப்புப் பெறுமதியுடன் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றன. தற்பொழுதுள்ள சுயவிருப்பு திட்டத்திற்குப் பதிலாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான முன்மொழிவிற்கு கொள்கையளவில் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டு நிதியியல் சீர்திருத்த அரங்கத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் சாத்தியமான தன்மைகளும் பரீட்சிக்கப்பட்டன. பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து வந்திருந்த ஆலோசனைக் குழுவொன்று முன்மொழிவுகளின் சாத்தியத் தன்மைகளைப் பற்றி மீளாய்வு செய்ததுடன் இருவழி அணுகுமுறைகளை விதந்துரைத்தது. அதாவது, திட்டத்தினை விருத்தி செய்யும் வேளையில் திட்டத்திற்கு ஆதரவாக நிதியியல் முறை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்கு கொள்கைகளை நடைமுறைக்கிடுவதாகும். இதன்படி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டவாக்கத்தினை முன்மொழிவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

## 2.7 பொதுவான வங்கித்தொழில் அரங்கம்

வங்கித்தொழில் பிரச்சனைகளை விவாதிப்பதற்கும், கலந்துரையாடுவதற்குமாக மத்திய வங்கிக்குள்ளே ஒரு பொதுவான அரங்கமொன்று பின்வரும் விதத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

அ. வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் மாதாந்தக் கூட்டங்கள்: இக்கூட்டங்கள், வங்கித்தொழில் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள் பற்றிய கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கான அரங்கமாக விளங்குவதுடன் மத்திய வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்குமிடையில் நெருங்கிய உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும் உதவுகின்றன. கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களாக, சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்காக சுசகன மீள்நிதியிடல் கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மூலதனப்போதுமைத் தேவைப் பாட்டிலுள்ள சந்தை இடர் நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணங்களை நடைமுறைக்கிடுதல், பாசல் II மூலதன உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ஆயுத்த

மாகுதல், வலையமைப்பு சந்தைப் படுத்தல் பிரமிட்டுக்களுக்கான பன்னாட்டு கொடுகடன் அட்டைகளின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு, மற்றும் "உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் விதிகளைப்" பின்பற்றுதல் வர்த்தக வங்கித்தொழில் துறையில் காணப்படும் உயர்ந்த இடையீட்டுச் செலவு மற்றும் சந்தை வட்டி வீதங்களுக்கு இணையாக வைப்பு வீதங்களை அதிகரிக்க வேண்டியதன் தேவை, பத்திரிகைகளில் நிதியியல் கூற்றுக்களை காலாண்டு ரீதியில் வெளிப்படுத்துவதற்கான படிவத்தின் திருத்தம் மற்றும் பல முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கான திருத்தங்கள் என்பன காணப்பட்டன. மேலும், மிகக் கூடுதலான தகவல்களைக் கொண்ட வியாபார தீர்மானங்களை எடுப்ப தற்கு பயனுள்ள தகவல்களை எடுக்கும் நோக்குடன் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு நாட்டின் பொருளா தாரம் மற்றும் நாணய அபிவிருத்திகள் பற்றி கிரமமாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆ. நிதியியல் முறை உறுதிப்பாடு மற்றும் சீர்திருத்தங்கள் மீதான இரு குழுக்களின் கூட்டங்கள்

(i) நிதியியல்துறைக் கொத்தணி: நிதியியல் துறைக் கொத்தணியானது அரசியல் யாப்பின் 33 ஆவது உறுப்புரையின்கீழ் முன்னாள் அதிமேதகு சனாதிபதி யினால் 2004 யூனில் நியமிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழ் நியமிக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபை திறைசேரிச் செயலாளரை தலைவராகக் கொண்டு ஆறு உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழ் 24 கொத்தணிகள் அவசியமான சீர்திருத்தங்களை அடையாளங்கண்டு மீளாய்வு செய்வதில் பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபைக்கு உதவுவதற்காகவும் பொருத்தமான விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்காகவும் நியமிக்கப் பட்டுள்ளன. பொருளாதார அபி விருத்திக்கான தேசிய சபையின் மற்றைய கொத்தணிகள் வரிவிதிப்பு, மூலதனச்சந்தை, சட்டம், தடை, தொலைத்தொடர்பூட்டல், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், ஏற்றுமதிகள், போக்குவரத்து, சுற்றுலா வர்த்தகம் மற்றும் தீர்வை போன்ற விடயங்களை உள்ளடக்கியிருந்தன. ஒவ்வொரு கொத்தணியும் இணைத் தன்மையுடையனவாகவும் தொடர்பான துறைகளில் நிபுணத்துவம்/தொழில்சார் தன்மை கொண்டவர்களை உறுப்பினர் களாகவும் உள்ளடக்கியிருந்தது. அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பொழுது எதிர்நோக்கப்படும் நடைமுறை இடர்ப்பாடுகளைக் கவனிக்க வேண்டு மெனவும் பொருளாதாரத்தில் இலக்கிடப்பட்ட வளர்ச்சி குறை ந்தவர்களுக்கு தொடர்ச்சியாக நன்மை கிடைப்பதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் செயற்றிட்டங்களை/நிகழ்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கொத்தணிகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

நிதியியல் துறைக் கொத்தணியின் இரு முக்கிய குறிக்கோள்களாக, நிதியியல் உறுதிப்பாட்டினை மேம்படுத்து வதற்கான கொள்கைகளை வடிவமைப் பதும் உள்ளூர் தொழிற்முயற்சியாளர், சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில்முயற்சிகள் மற்றும் கிராமியத் துறைகள் நிதி பெறுவதற்கான வசதிகளை அதிகரிப்பதும் விளங்கின. 11 உறுப்பினர்களைக் கொண்டுள்ள நிதியியல் துறைக் கொத்தணிக்கு மத்திய வங்கியின் துணை ஆளுநரும் திறை சேரியின் துணைச் செயலாளரும் இணைத் தலைவர்களாக இருப்பர். 2005 இல் நிதியியல் துறைக் கொத்தணி 7 கூட்டங்களை நடத்தியது. நிதியியல் துறைக் கொத்தணியின் நடவடிக்கைகள் உத்தேச கட்டாய வைப்பு காப்புறுதித்திட்டம், தொடர்பான சாத்தியவள ஆய்விலும் தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் சேமிப்பு விரிவுகளை சீர்திருத்துவதனூடாக நிதியளிப்பு

வசதிகளை அதிகரித்தல் மற்றும் நிலுவையிலுள்ள நிதியியல் சட்ட வாக்கங்களை தொடர்ந்தும் கவனித்து வருதல் என்பன மீது கவனம் செலுத்தின.

(ii) நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு: நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவின் பொறுப்பு யாதெனில் நாட்டின் முக்கிய நிதியியல் முறைமையினை உறுதிப்பாட்டின்மைக்கு இட்டுச்செல்லக் கூடிய இடர் நேர்வுகளையும் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய தன்மைகளையும் மதிப்பிடுவதும் மத்திய வங்கியின் இரண்டு நியதிக் குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறை உறுதிப்பாட்டினை மேம்படுத்து வதற்கு கொள்கைகளை விதந்துரைப் பதுமேயாகும். 2005 இறுதியில், நிதியியல் உறுதிப்பாட்டுக் குழு 13 உறுப்பினர் களை அதாவது, இரண்டு துணை ஆளுநர்களையும் நிதியியல் முறை உறுதிப்பாட்டில் நேரடித் தாக்கத்தினை விளைவிக்கக் கூடிய தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற மூத்த முகாமை யாளர்களைக் கொண்ட 11 மற்றைய உறுப்பினர்களையும் உள்ளடக்கி யிருந்தது. 2005 இல் நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு 4 கூட்டங்களை நடத்தியது. 2005 ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் உறுதிப்பாட்டுக் குழு நிதியியல் துறை பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் விதத்தில்; முதலாவது நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வினையும் நான்கு துண்டுப்பிரசுர தொடர் வெளியீடுகளை யும் அதாவது இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள், தொழிற் பாடுகள் மற்றும் நிறுவன அமைப்பு; வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கான வழிகாட்டி, விலை உறுதிப்பாடும் நிதியியல் முறை உறுதிப்பாடும்; என்பனவற்றை வெளியிட்டது. மேலும் நாணயச் சபையின் ஒப்புதலுடன் நிதியியல் உறுதிப்பாட்டுக் குழு நாட்டின் பல்வேறுபட்ட நிதியியல் கூட்டுக்களின் தொழிற்பாட்டிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்து கண்காணிப்பதற்காக நிதியியல் முறை யிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளை உள்ளடக்கிய தொழிற்பாட்டுக் குழுவொன்றினை நியமிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தது. நிதியியல் உறுதிப்பாட்டுக் குழு கவனம் செலுத்திய ஏனைய துறை களாக நிதியியல் பாதுகாப்புவலைக் கருவியாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான முன்மொழிவினை வடிவமைத்தல் வங்கிகள் மற்றும் நிதியியல் கம்பனிகளின் உடனடித் தகவல்களைக் கண்காணிப் பதற்காக மத்திய தரவுத் தளமொன் றினை நடைமுறைப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு முறையினையும் நிதியியல் நிறுவனங்களின் தொடர்ச்சியான வியாபார மற்றும் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களையும் மேற்பார்வை செய்தல் என்பன காணப்பட்டன.

### 2.8 நிதியியல் முறை பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு

நிதியியல் முறை தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் செய்திப் பத்திரிகைகளில் இரண்டு வெளியீடுகளை வெளியிட்டது. அதாவது "வங்கிகளின் வட்டி வீதங்களுக்கான ஒரு வழிகாட்டி" என்பது பற்றிய ஒரு பக்க பத்திரிகை விளம்பரம் மற்றும் "பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ள சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள்" என்ற தலைப்பில் அரைப்பக்க பத்திரிகை விளம்பரமும் வெளியிடப்பட்டன. இவ்வெளியீடுகள் மூலமாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிதியியல் நிறுவனங்களுடனான பொதுமக்களின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான இடர்நேர்வு மற்றும் வருமானம் என்பன பற்றி மதிப்பீடு செய்யுமாறும் எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

## 3. நாணயம்

### 3.1 நாணய வெளியீடு

இலங்கையில் நாணயத்தினை வெளியிடும் அதிகாரம் கொண்ட தனியொரு நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2005 ஆம் ஆண்டுப்பகுதியிலும் உள்நாட்டுக் கொடுக்கல்

வாங்கல்களுக்குப் பயன்படுத்துவதற்காக சட்டரீதியான நாணயத்தை வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2005 ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் அளவு 2004 இன் இறுதியில் காணப்பட்ட ரூ.116 பில்லியனுக்கு எதிராக ரூ.132 பில்லியனாக காணப்பட்டது. இது நாட்டின் நாணயச் சுற்றோட்டத்தில் பதிவு செய்யப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த அளவாகும். சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 97 சதவீதமாகும். இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயக் குத்திகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் ரூ.272 மில்லியன் மொத்தப் பெறுமானம் கொண்ட 112 மில்லியன் குத்திகளுடன் ஒப்பிடுகையில் 115 மில்லியன் குத்திகளாகவும் அதன் மொத்தப் பெறுமதி ரூ.250 மில்லியனாகவும் காணப்பட்டது. 2000-2005 காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குத்திகளின் அளவும் பெறுமதியும் அட்டவணை 11.3 இல் தரப்பட்டுள்ளன.

### 3.2 சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகளின் புதிய தொடர்கள்

நாணயக்குத்திகளின் அளவையும் நிறையையும் குறைக்க வேண்டுமென நீண்ட காலமாக உணரப்பட்ட தேவையையும் நாணயக்குத்திகளின் வார்ப்புச் செலவினைக் குறைப்பதற்கான வலியுறுத்தலையும் தொடர்ந்து வங்கியினால் புதிய சுற்றோட்டத் தொடர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. புதிய நாணயக்குத்திகளின் தொடர்களின் அறிமுகத்துடன் வங்கியானது 2005 ஆண்டில் ரூ.600 மில்லியனளவுக்கு சேமிக்க முடிந்தது. புதிய தொடர்கள் ரூ.5, ரூ.2, ரூ.1 சதம், 50 சதம் மற்றும் 25 சதம் என்பவற்றினை உள்ளடக்கி 2005 திசெம்பர் 14 ஆம் நாளிலிருந்து சுற்றோட்டத்திற்கு விடப்பட்டன. புதிய நாணயக்குத்திகளின் முன்புற மற்றும் பின்புற தோற்றங்கள் நடைமுறையில் இருக்கும் அதே இன நாணயக் குத்திகளை ஒத்தனவாகவுள்ளன. புதிய ரூ.5 மற்றும் ரூ.2 நாணயங்களின் அளவும், நிறமும் மாற்றமுறாதிருந்த வேளையில் நிறையும், கலப்பு உலோகமும் மாற்றமுற்றிருந்தது. ரூ.1 மற்றும் சதம் 50 மற்றும் சதம் 25 ஆகிய நாணயக் குத்திகள் நடைமுறையிலிருக்கும் அதே இனங்களைக் கொண்ட நாணயக் குத்திகளை விட சிறிய அளவினையும் குறைந்த நிறையினையும் கொண்டிருந்ததுடன் சுலபமாக அடையாளம் காணும் நோக்கங்களுக்காக வெவ்வேறான கலப்பு உலோகங்களாலும், நிறங்களாலும் வார்க்கப்பட்டு இருக்கின்றன. இந்த புதிய நாணயக்குத்திகள் நடைமுறையிலுள்ள நாணயக்குத்திகளுடன் புழக்கத்திற்கு விடப்படும்.

### 3.3 போலி நாணயத் தாள்களைக் கண்டுபிடித்தல்

போலி நாணயத் தாள்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை தயாரிக்கும் முயற்சிகளை மிகவும் குறைப்பதற்குமாக திணைக்களம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத் தாள்கள் பணியகத்தின் நெருக்கமான

அட்டவணை II.3
வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயக் குத்திகளின் அளவும் பெறுமதியும் 2000- 2005
அளவு (குத்திகளின் எண்ணிக்கை ஆயிரத்தில்)

| ஆண்டு | ரூபா.10 | ரூபா.5 | ரூபா.2 | ரூபா.1 | 50 சதம் | 25 சதம் | 10 சதம் | 5 சதம் | 2 சதம் | 1 சதம் | மொ.அளவு | மொத்தப் பெறுமதி (ரூ.000) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2000 | 10,693 | 15,413 | 16,186 | 4,876 | 6,936 | 4,320 | 1,955 | 1,287 | 75 | 430 | 62,171 | 226,057 |
| 2001 | 6,136 | 20,726 | 22,668 | 19,328 | 4,286 | 5,996 | 2,380 | 399 | 60 | 205 | 82,184 | 233,557 |
| 2002 | 10,965 | 16,820 | 19,968 | 11,991 | 8,466 | 5,752 | 1,770 | 396 | 185 | 425 | 76,738 | 251,553 |
| 2003 | 5,735 | 23,512 | 27,187 | 29,160 | 8,276 | 5,964 | 2,905 | 294 | 195 | 220 | 103,448 | 264,384 |
| 2004 | 5,670 | 24,677 | 25,218 | 34,093 | 9,220 | 9,184 | 2,785 | 549 | 105 | 80 | 111,581 | 271,829 |
| 2005 | 1,601 | 27,983 | 21,543 | 43,297 | 11,374 | 8,396 | 152 | 225 | 280 | 15 | 114,866 | 250,126 |

ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் பணியாற்றியது. நாணயவிதிச் சட்டத்தினால் கேட்டுக் கொள்ளப் பட்டவாறு, நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு மத்திய வங்கியின் உறுதிப்படுத்தலுக்காக அனுப்பப்பட்ட போலி நாணயத்தாள்களின் எண்ணிக்கையானது 2004 இன் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 4.5 தாள்கள் என்ற அளவிலிருந்து 2005 இல் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 11.8 தாள்கள் என்ற அளவுக்கு அதிகரித்து காணப்பட்டது.

### 3.4 பாவனைக்குதவாத தாள்களை அழித்தல்

இவ்வாண்டில் நாணயத்தாள்கள் சரிபார்த்தல், கணக்கெடுத்தல் மற்றும் தரம்பிரித்தல் பொறிகள் இரண்டும் 130.7 மில்லியன் பயன்படுத்தத்தக்க, பயன்படுத்த முடியாத நாணயத்தாள்களை இனம் கண்டன. திணைக்களமானது 1996 முதல் நிலவறையில் எஞ்சியிருந்த 168 மில்லியன் களங்கப்பட்ட நாணயத்தாள்களை வெளிமுகவர்களிடமிருந்து கிடைக்கத்தக்கதான எரியூட்டும் வசதிகளைப் பயன்படுத்தி அழிக்கக் கூடியதாயிருந்தது.

### 3.5 ஞாபகார்த்த தாள்களினதும், நாணயக்குத்திகளினதும் விற்பனை

திணைக்களம் தொடர்ந்தும் ஞாபகார்த்த தாள்கள் மற்றும் நாணயக்குத்திகளை உலோக நாணய அறிவியலாளருக்கும், சேகரிப்பாளருக்கும் விற்பனை செய்தது. தங்க மற்றும் வெள்ளி ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் விற்பனை விலைகள் நாணயத் திணைக்களத்தின் பீடப்பிரிவில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. மத்திய வங்கி வெப்தளம் இத்தகைய நாணயங்களின் நாளதுவரையான விபரங்களைத் தருகின்றது. விற்பனைக்கு கிடைக்கத்தக்கவுள்ள ஏனைய ஞாபகார்த்த தாள்களினதும் நாணயக்குத்திகளினதும் விபரங்களை விற்பனை விலைகளுடன் அட்டவணை II-4 தருகின்றது.

### 3.6 பயிற்சியும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும்

போலி நாணயத் தாள்களை இனம் காணல் மற்றும் சுத்தமான நாணயத்தாள் கொள்கை மற றும் வங்கி அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், பாடசாலை மாணவர், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு பொதுவிரிவுரைகள், ஆய்வரங்குகள் மின்னியல் அச்சு ஊடகங்கள் என்பன வற்றினூடாக புதிய நாணயக்குத்தித் தொடர்களை அறிமுகம் செய்தல் என்பவற்றினை முக்கிய அம்சங்களாகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நாணயத் திணைக்களம் நடாத்தியது. செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் கட்டுரைகளில் புதிய நாணயக்குத்தித் தொடர்கள், வங்கித்தாள்கள் மற்றும் நாணயத்தின் தோற்றம் பற்றியும் போலி நாணயத்தினை தயாரிக்கக்கூடிய தன்மைகள் பற்றியும் கட்டுரைகள் எழுதப்பட்டன.

மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கி அலுவலர்களுக்காக கொழும்பில் உள்ள வங்கியின் தலைமையகத்திலும் மற்றும் கண்டி, மாத்தறை, அநுராதபுரம் போன்ற பிரதேச அலுவலகங்களிலும் புதிய குத்திநாணயங்களின் தொடர்கள் பற்றிய அறிமுகப்படுத்தலுக்காக ஐக்கிய இராச்சியத்தின் றோயல் மின்ட்டின், ஆதரவுடன் ஆறு ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன.

ஒரு ஆய்வரங்கானது ஐக்கிய இராச்சியம் டீலாறூவின் ஆதரவுடன் மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கி அலுவலர்களுக்காக போலி நாணயத்தாள்களை அடையாளம் கண்டுபிடிப்ப தற்கும் ஏனைய 14 ஆய்வரங்குகள் இவ்வாண்டில் நாணயத் திணைக்களத்தினால் வர்த்தக

அட்டவணை II-4
விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஞாபகார்த்த நாணயக் குத்திகளும் தாள்களும்

| விடய எண். | விபரணம் | வழங்கப் பட்ட ஆண்டு | முகப்புப் பெறுமதி (ரூபா) | உலோகம்/ மூலப்பொருள் | விற்பனை விலை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | சனாதிபதி ஆர். பிரேமதாசவின் மூன்றாவது ஆண்டுநிறைவு (உறை) | 1992 | 1 | செப்பும் நிக்கலும் | 250 |
| 2. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1995 | 5 | நிக்கல் செம்பு | 200 |
| 3. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (தாள் மடிப்பு) | 1998 | 200 | பொலிமர் | 400 |
| 4. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1 | நிக்கல் முலாமிடப்பட் உருக்கு | 400 |
| 5. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1 | செம்பும் நிக்கலும் | 500 |
| 6. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1 | நிக்கல் முலாமிடப்பட் உருக்கு | 200 |
| 7. | சியாமோபாலி மகா நிக்காய (தாள் மடிப்பு) | 2003 | ரூபா 5x10 | செம்பும் நிக்கலும் | 100 |

வங்கிகளுக்கும் கொழும்பு கண்டி, மாத்தறை கேகாலை, குருநாகல, நுவரெலியா, களுத்துறை, வவுனியா, அநுரதபுரம், மாத்தளை போன்ற மாவட்டங்களிலுள்ள காவல்துறை அலுவலர்களுக்குமாக இடம்பெற்றன.

இத்திணைக்களம், நாணயத்தினைக் கையாளுவதில் பொதுமக்களின் விழிப்புணர்வினை உயர்த்தும்முகமாக பின்வரும் கண்காட்சிகளிலும் பங்குபற்றியது.

அ. 2005 ஏப்பிறல் 26 முதல், மே 1 ஆம் நாள் வரை கேகாலையில் நிதி திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்கு படுத்தி நடாத்தப்பட்ட 245 ஆவது மகாபொல கண்காட்சி.

ஆ. 2005 ஓகத்து 1 ஆம் நாள் வத்தளை, சென் அந்தனீஸ் கல்லூரியில் இடம் பெற்ற வர்த்தக தினம்.

இ. 2005 செத்தெம்பர் 30ஆம் நாளிலிருந்து ஒத்தோபர் 2 ஆம் நாள் வரை பண்டாரநாயக்க பன்னாட்டு மகாநாட்டு மண்டபத்தில் தகவல் ஊடகத்துறை அமைச்சினால் ஒழுங்குபடுத்தி நடாத்தப்பட்ட "அகயமு லமவிய" கண்காட்சி.

ஈ. 2005 நவெம்பர் 2 முதல் 6 வரை ரூவன்வெலவில் நிதி திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்குபடுத்தி நடாத்தப்பட்ட துறுணு சக்தி கண்காட்சி.

உ. 2005 திசெம்பர் 6 இலிருந்து 8 ஆம் நாள் வரை களனிப் பல்கலைக் கழகத்தின் பொருளியில் திணைக் களத்தினால் ஒழுங்குபடுத்தி நடாத்தப் பட்ட கண்காட்சி.

இந்த அனைத்து கண்காட்சியிலும் நிறுவப்பட்ட மத்திய வங்கியின் விற்பனைக் கூடத்திற்கு ஏராளமான பாடசாலை மாணவர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் பெருமளவு ஆதரவு கிடைத்தது.

## 4. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாகவும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதினூடாகவும் வங்கியின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது மற்றும் வர்த்தக வங்கிகளுக்கும் அரசாங்கத்திற்கும் வங்கியாளராக தொழிற்படுவது ஆகிய இரு தொழிற்பாடுகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும் திணைக்களமானது நாட்டின் அதே நேர மொத்த தீர்ப்பனவு முறையான "லங்கா செட்டில்" இன் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் முகமாக வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குகின்ற துணைப்பணியினையும் மேற்கொள்கிறது.

### 4.1 நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

#### அ. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

திணைக்களமானது 2003 இல் அறிமுகப் படுத்தப்பட்ட சந்தையை அடிப்படையாகக் கொண்ட நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கட்டமைப்பினுள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இக்கட்டமைப்பின் கீழான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பலவித தொழிற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. (அ) ஒன்றில் மிகையான திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கு அல்லது திரவத் தன்மையில் பற்றாக்குறை காணப்படுமாயின் திரவத் தன்மையினை உட்புகுத்துவதற்கான நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகளுக்காக நாளாந்த அடிப்படையில் நாளாந்த ஏலங்களை நடத்துதல். (ஆ) துணைநில் வசதிகளின் கீழ் மீள்கொள்வனவு நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளுக்கான ஏற்பாடுகள். அத்துடன் (இ) நீண்டகால அடிப்படையில் திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக அல்லது அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் தற்றுணிபின்படியான திறைசேரி உண்டியல்களின் கொள்வனவுகள் (முதலாம்தர மற்றும் இரண்டாம்தரச் சந்தைகளில்) மற்றும் திறைசேரி முறிகளின் (இரண்டாந்தரச் சந்தையில் மட்டும்) கொள்வனவுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதங்களினாலும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களினாலும் உருவாக்கப்பட்ட வட்டி வீதங்களின் இடைவெளியிடையே மேற் கொள்ளப்படுகின்றது. மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்காக திறைசேரி உண்டியல்கள் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்காக பிணையங்களாகப் பயன்படுத்தப்பட்ட வேளையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் என்பன நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் அனைத்து

வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தொடர்ந்தும் பங்கேற்கும் நிறுவனங்களாக விளங்கின.

இவ்வாண்டில் பணச்சந்தையானது சராசரியாக ரூ.10.5 பில்லியன் வரையிலான மிகைத் திரவத் தன்மையினைக் கொண்டதாகக் காணப்பட்டது. ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மிகைத் திரவத்தன்மை சராசரி ரூ.15.5 பில்லியனாக விளங்கியதுடன் ரூ.7 பில்லியனிலிருந்து ரூ.26 பில்லியன் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. பெருமளவு திரவத் தன்மைக்கு முக்கியமாக சுனாமி அழிவுக்கு பின்னர் ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய உட்பாய்ச்சல்கள் பெரிதும் காரணமாயிருந்தது. பின்னர் இது மத்திய வங்கிக்கு விற்பனை செய்யப்பட்டது. இவ்வகையான உயர்ந்த அளவிலான மிகையான திரவத்தன்மை ஏற்கனவே உயர்வாகவிருந்த கொடுகடன் விரிவாக்கத்திற்கு வழிவகுத்ததுடன் நிரந்தர அடிப்படையில் மிகைத் திரவத்தன்மையைக் குறைப்பதற்காக 2005 ஏப்பிறலில் மத்திய வங்கி அதனது உடைமைகளிலிருந்த திறைசேரி உண்டியல்களின் நேரடி விற்பனையை தொடங்கிய வேளையில் நாளாந்த ஏலங்களின் மூலம் ஏறக்குறை முழு மிகைத் திரவத் தன்மையையும் ஈர்த்துக்கொள்ள கூடியதாகவிருந்தது. சுனாமி பேரழிவுக்குப் பின்னர் உடனடியாக நாட்டின் கொடுப்பனவு தீர்ப்பனவு முறை சுமூகமாக தொழிற்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக வங்கித்தொழில் முறைமையை கூடிய அளவு மிகைத் திரவத்தன்மையுடன் அனுமதிப்பது முன்மதியானது எனக் கருதப்பட்டது.

## (i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நாளாந்த ஏலங்கள்

### மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்

முதல் சில மாதங்களுக்கான சந்தையினை மிகுந்த திரவத் தன்மையுடன் அனுமதிப்பது என்ற தீர்மானத்திற்கு இசைவாக நாளாந்த ஏலங்களூடாக ஈர்க்கப்பட்ட மிகைத் திரவத்தன்மை, மதிப்பிடப்பட்ட மிகைத் திரவத் தன்மையில் ஏறத்தாழ 50 சதவீதமாக இருந்ததுடன் இது 2005 சனவரி 5 ஆம் நாளிலிருந்து பெப்புருவரி 21 ஆம் நாள் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. நாளாந்த ஏலங்கள் 2005 பெப்புருவரி 21 ஆம் நாள் மீண்டும் தொடங்கியதுடன் ஏலங்களினூடாக திரட்டப்பட்ட தொகை படிப்படியாக அதிகரித்து 2005 மார்ச்சின் தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட மிகைத் திரவத்தன்மையின் அளவிற்கு பெரும்பாலும் அதிகரித்தது.

2005 மார்ச்-திசெம்பர் காலப்பகுதியில் அநேகமான நாட்களில் பதிவு செய்யப்பட்ட மிகையான திரவத்தன்மையானது மீள்கொள்வனவு அடிப்படையில் திறைசேரி உண்டியல்களை நாளாந்த ஏலங்களின் ஊடாக விற்பனை செய்வதன் மூலமாக நாளாந்த அடிப்படையில் ஈர்த்துக்கொள்ளப்படுகிறது. சராசரியாக ஏலங்களுக்கு வழங்கப்பட்ட ரூ.10 பில்லியன் அளவானது மதிப்பீடு செய்யப்பட்ட மிகையான திரவத்தன்மையில் 97 சதவீதமளவிற்கு வகைகூறியது. பெறப்பட்ட விலைக் கோரல்களின் பெறுமதியும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையின் ஏறத்தாழ முறையே 97 சதவீதமாகவும், 92 சதவீதமாகவும் விளங்கின. வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மை பரந்தளவில் சமநிலையான தன்மையுடன் காணப்பட்டமையினால் மேயில் ஐந்து நாட்களும் யூலையில் எட்டு நாட்களும், திசெம்பரில் ஐந்து நாட்களும் நாளாந்த ஏலங்கள் மேற்கொள்ளப் படவில்லை.

சுனாமிக்கு முன்னரான வேலை நாளான 2004 திசெம்பர் 24 இல் 7.88 சதவீதமாக விளங்கிய நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 2005 பெப்புருவரி 21 இல் ஏலம் மீளத்தொடங்கப்பட்ட போது 7.59 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் 2005 மார்ச்சு இறுதியளவில் (7.50 சதவீதமான) வட்டிவீத இடைவெளியின் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இதற்கு முக்கியமாக ஏலத்தின் ஊடாக குறைந்த தொகையிலான மிகைத் திரவத்தன்மை ஈர்த்துக் கொள்ளப்பட்டமையே காரணமாகும். 2005 மார்ச்சு தொடக்கப்பகுதியிலிருந்து நாளாந்த ஏலங்களின் ஊடாக கிட்டத்தட்ட முழுவதுமான மிகைத்திரவத்தன்மையும் ஈர்க்கப்பட்டபோதும், விளைவு வீதமானது ஆரம்பத்தில் தொடர்ந்தும் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கு பங்கேற்கும் நிறுவனங்கள் தமது விலைக்கோரலில் மிக எச்சரிக்கையுடன் இருந்தமையே காரணமாகும். எனினும், வட்டி வீதங்கள் படிப்படியாக வட்டிவீத இடைவெளியின் நடுப்பகுதியை நோக்கி, குறிப்பாக, நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக 2005 ஏப்பிறலில் திறைசேரி உண்டியலின் உடனடி விற்பனை தொடங்கியமையுடன் நகர்ந்தன.

### நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் தற்போதைய முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் முதலாவது ஏலவிற்பனை நடைபெற்ற நாளான 2005 யூன் 20 ஆம் நாளன்று

திரவத் தன்மையில் ஏறத்தாழ ரூ.3.7 பில்லியன் கொண்ட குறைவு ஏற்பட்டது. இந்த ஏல விற்பனையானது முழுவதும் உதவப்பட்டதுடன் வழங்கப்பட்ட ரூ.2 பில்லியன் 9.00 வீதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இது வட்டி வீத இடைவெளிகளின் நடு வட்டி வீதம் காரணமாக ஏற்பட்டது.

### (ii) துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தைகளின் கொடுக்கல்வாங்கல்களின் ஊடாகவும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நாளாந்த ஏலங்களிலும் தமது குறுங்கால திரவத்தன்மையினை முழுமையாக ஈடுசெய்து கொள்ள முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் தொடர்ந்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தன. மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வீதம் மற்றும் நேர்மாற்று மீள்நிதியிடல் வீதங்களில் இந்த வசதிகள் வழங்கப்பட்டதுடன் இவை 2005 திசெம்பரில் 125 அடிப்படைப் புள்ளிகளினால் நான்கு படிமுறைகளில் முறையே 8.75 சதவீதத்தாலும் 10.25 சதவீதத்தாலும் அதிகரித்துக் காணப்பட்டன.

### மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் நாளாந்த ஏலங்களினூடான ஈர்ப்பு இடைநிறுத்தப்பட்டமையின் அல்லது குறைக்கப்பட்டமையின் காரணமாக துணைநில் வசதிகளின் கீழ் மிகப்பாரிய மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல் வசதிகள் (சராசரியாக நாளொன்றுக்கு ரூ.9 பில்லியன்) காணப்பட்டன. எனினும் ஆண்டின் எஞ்சிய பகுதியில் துணைநில் வசதிகளின் கீழ் நாளாந்த ஏலவிற்பனைக் மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் ஊடாக முதலில் ஈர்த்துக்கொள்ளப்பட்ட மிகையான திரவத்தன்மை நாளொன்றிற்கு சராசரியாக ரூ.1 பில்லியன் அளவுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது.

### நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

வங்கித் தொழில் முறைமையில் திரவத்தன்மை பற்றாக்குறை காணப்படுமிடத்து வழமையாக பங்கேற்கும் நிறுவனங்கள் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் ஊடாக மத்திய வங்கியிடமிருந்து நிதியினைப் பெற்றுக்கொள்கின்றன. எனினும், திரவத் தன்மையானது பரந்தளவில் சமநிலையில், அல்லது ஒப்பீட்டுரீதியில் சிறிய அளவு மிகையான திரவத் தன்மையுடன் சந்தை தொழிற்பட்ட போதும்கூட துணைநில் வசதிகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் காணப்பட்டன. இவ் அபிவிருத்தியானது வங்கிகள் ஏனைய பங்கேற்பு நிறுவனங்களுக்கான தமது கடன்வழங்குதலில் சுயமாகவே விதித்துக்கொண்ட வரையறைகள் காரணமாக ஏற்பட்ட சந்தையின் இறுக்கத் தன்மையினைப் பிரதிபலித்ததுடன் இது சில பங்கேற்பு நிறுவனங்களுக்கு தமது வங்கிகளுக் கிடையிலான சந்தையில் நிதிகளைத் திரட்டுவதில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தியது. அதேவகையில், துணைநில் வசதிகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் பணச்சந்தையில் தளம்பலான தன்மையினைக் கட்டுப்படுத்த வழிவகுத்தன. சராசரியாக, துணைநில் வசதிகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் ஆண்டின் ஐம்பத்து நான்கு நாட்களில் நாளொன்றுக்கு ரூ.1.5 பில்லியனளவுக்கு இடம்பெற்றது.

### (iii) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு

நாளாந்த ஏல விற்பனைகள் மற்றும் துணைநில் வசதிகள் இரண்டினதும் கீழான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவு 2004 இன் ரூ.1,602 பில்லியனிலிருந்து 2005 இல் ரூ.2507 பில்லியன் ரூபாவாக 56 சதவீதத்தால் அதிகரித்தது. நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2004 இன் ரூ.37 பில்லியனிலிருந்து 2005 இல் ரூ.80 பில்லியனுக்கு அதிகரித்துக் காணப்பட்டது.

### (iv) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்

நிரந்தர அடிப்படையில் மிகையான திரவத் தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் வகையில், 2005 ஏப்பிறலில் மத்திய வங்கி தமது சொந்த சொத்துப்பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்களை உடனடியாக விற்பனை செய்வதற்காக ஏல விற்பனைகளை நடாத்துவதற்குத் தொடங்கியது. இவ்வாண்டில் பதினெட்டு ஏலவிற்பனைகள் இடம் பெற்றதுடன் அவற்றில் பதின்மூன்று மேலதிகமாக உதவப் பட்டிருந்தது. பெறப்பட்ட விலைக்குறியீடு ஒன்று ஏற்றுக் கொள்ள முடியாதளவுக்கு உயர் விளைவு வீதத்தினைக் குறிப்பீடு செய்திருந்தமையினால் ஒரு ஏலவிற்பனை முழுமையாகநிராகரிக்கப் பட்டிருந்தது. விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூ.37.2 பில்லியனாக விளங்கியதுடன் அது, விற்பனைக்கென விடப்பட்ட தொகையில் 85 சதவீதமளவினைக் கொண்டிருந்தது. இந்த திறைசேரி உண்டியல்கள் மிகக் குறுகிய காலத்துக்குரியனவாக, முதிர்ச்சிக்கு மிகுதியாகவுள்ள நாட்களின் எண்ணிக்கை 7 இலிருந்து

58 இற்கு இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தன. (பெரும்பாலனவை 32-45 நாட்கள் வரை) இந்த விற்பனைகள் முதன்மைச் சந்தையில் ஒவ்வொரு 91 நாள் திறைசேரி உண்டியலும் விற்பனை செய்யப்பட்டபோது காணப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவு வீதங்களைக் கொண்டு விளங்கின.

**(ஆ) நியதி ஒதுக்குத் தேவைப்பாடு**

திணைக்களம் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தியதுடன், இது இலங்கை ரூபாவில் குறித் துரைக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களில் 10 சதவீதமாக காணப்பட்டது.

**(இ) வங்கி வீதம்**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87 இன் கீழ்

வரைபடம் II-1
திறந்த சந்தை தொழிற்பாட்டு மீள் கொள்வனவு ஏலங்கள் - 2005
(மாதாந்த சராசரி)




வரைபடம் II-2
மாதாந்த மீள்கொள்வனவு அளவுகள்
(2004 மற்றும் 2005)




வரைபடம் II-3
2005இல் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி எடுப்பனவுகள்




குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்களில் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமானது (வங்கி வீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும் எந்தவொரு வங்கியும் வங்கி வீதத்தில் கடன் பெறுவதற்கு மத்திய வங்கியினை நாடாததினால் இவ்வீதம் தொழிற்படாமலிலிருந்தது.

## 4.2 வர்த்தக வங்கிகளுக்கும், அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

**(அ) நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்**

வங்கிகளின் வங்கியாக மத்திய வங்கி தொழிற்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில், வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல் மற்றும் தீர்ப்பனவு முறை வினைத்திறனுடன் தொழிற்படுவதினை உறுதிப்படுத்தும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர் களுக்குமான நடைமுறைக் கணக்கு வசதிகளை திணைக்களம் வழங்குகின்றது. இக்கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப் பேரேட்டு முறைக்கு அமைவாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

**(ஆ) அரச கணக்குகள்**

அரசிற்கான வங்கியாளர் என்ற ரீதியில் மத்திய வங்கி பணியாற்றுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் நிறுவனங்கள் குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் அவற்றிற்கு தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கியது. வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2005 இறுதியில் 33 ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டில் ஆறு புதிய கணக்குகள் திறக்கப்பட்டதுடன் அரசாங்கத்தின் கோரிக்கை களையடுத்து 28 கணக்குகள் மூடப்பட்டன. நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 89 நியதிகளில் வங்கியானது அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் முற்பணங்களை வழங்கி வருகிறது. அத்தகைய முற்பணங்களின் மீதான வரையறை (மதிப்பிடப்பட்ட அரசின் அரசிறையில் 10 சதவீதம்) 2005 இல் 5.6 பில்லியனிலிருந்து 41.2 பில்லியனாக அதிகரிக்கப்பட்டது. இம்முற்பணங்களின் மீது வட்டி விதிக்கப்படுவதில்லை.

## 4.3. ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி ஏற்பாடு

லங்கா செட்டிலின் சுமூகமானதும், வினைத்

திறன் மிக்கதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களம் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை தொடர்ந்தும் வழங்கியது. இப்பொறுப்புக்களை நிறைவேற்று வதானது ஒரு நாளுக்குள்ளேயான திரவத்திற்கான பங்கேற்கும் நிறுவனங்களளின் கோரிக்கைகளையும் அவற்றை மீளச்செலுத்துவதனையும் சரியான விதத்தில் கையாளுதல் மற்றும் அதேநாளில் லங்கா செட்டிலின் வியாபாரம் முடிவடைவதற்கு முன் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியினை தீர்ப்பனவு செய்யத் தவறுபவர்களிடமிருந்து செலுத்தத் தவறியமைக்கான வட்டியை சரியான முறையில் விதித்தல் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது. அரச திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் பிணைகளுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திர வவசதி தொடர்ந்தும் கட்டணமின்றி வழங்கப்படுகிற து. அந்நாளில் விலைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களை உள்ளடக்குவதற்கும் போதுமான "இலாப"மொன்றிற்கு ஏற்ப பிணையங்கள் அவற்றின் நடைமுறைச் சந்தை வீதங்களில் மதிப்பிடப் படுகின்றன.

இவ்வாண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் மொத்தப் பெறுமதி ரூ.543 பில்லியனாக விளங்கியது. ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் நாளொன்றிற்கான சராசரி எடுப்பனவு ரூ.2.3 பில்லியனாக காணப்பட்டதுடன் 2004 ஆம் ஆண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட சராசரியான ரூ.2.7 பில்லியனை விட சிறிதளவு குறைவாக விளங்கியது. 2005 இல் பங்கேற்பாளரினால் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை செலுத்தத் தவறியமை எதுவும் காணப்படவில்லை. வங்கி வீதத்திலான தண்ட வட்டி மற்றும் திரும்பத்திரும்ப செலுத்த தவறுமிடத்து வசதியினை இடைநிறுத்துதல் போன்ற வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டமையின் காரணமாக லங்கா செட்டிலின் வியாபாரம் மூடப்படுவதற்கு முன் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மையினை மீளச் செலுத்துவது உறுதிப்படுத்தப்பட்டது.

## 5. பொருளாதார ஆராய்ச்சி

நாணய சட்டத்தின் 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழிற்படுகின்ற பொருளாதார ஆராய்ச்சி திணைக்களமானது, நாணயச்சபை மற்றும் மத்திய வங்கியின் முகாமை என்பன நாணயக் கொள்கைகளை உருவாக்கவும், நடைமுறைப்படுத்தவும் நிறைவேற்றுதல் போன்றவற்றுக்கு வழிகாட்டுவதற்காக தரவினை தயாரித்து பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொண்ட அதேவேளை அத்தகைய கொள்கைகள் மீதான தகவல்களை பொதுமக்களுக்கு பரப்பியது.

அனைத்து முக்கிய பொருளாதார துறை களினதும் தொடர்பான தரவு தயாரித்தலானது நாளாந்த, வாராந்த, மாதாந்த, காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட முக்கிய பொருளாதார தரவுகள் நாணய அளவீடு, வட்டி வீதங்கள், சென்மதிநிலுவை, செலாவணி வீதங்கள் மற்றும் செலாவணிவீத சுட்டெண்கள், வெளிநாட்டு ஒதுக்கு நிலைமை, வர்த்தகச் சுட்டெண்கள், ஏற்றுமதி பெறுகைகளை கண்காணித்தல், வரவுசெலவுத் திட்ட வெளிப்பாடு, கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண், வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் மற்றும் கொழும்பு பெரும்பாக வீடமைப்பு மொத்தச் சுட்டெண் போன்ற வற்றை உள்ளடக்குகின்றது.

ஆராய்ச்சி நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கையின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் மீதும் ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைக்கான பொருத்தமான கொள்கைகளின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலின் மீதும் முக்கிய கவனம் செலுத்தியது. இதனைப் பொறுத்தவரை நாணயக் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்கின்ற கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு வலியுறுத்தப்பட்டது. திணைக்களமானது அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பகுப்பாய்வுகள், நாணயக் கொள்கை நிலைக்கு தொடர்ச்சியான அல்லது மாறிலிகள் மீதான மாதாந்த உள்ளீடுகள் வழங்குவதன் மூலம் நாணயக் கொள்கை குழுவின் ஆழ்ந்த கருத்துக்களுக்கு வசதியளிப்பதிலும் பின்னர் நாணயக் கொள்கை குழுவின் கருத்துக்களையும் பரிசீலனைகளையும் உள்ளடக்கிய அறிக்கைகளை நாணயச்சபைக்கு வழங்குவதிலும் திணைக்களம் இன்றியமையாத பங்கொன்றினை வகிக்கிறது. நாணயக் கொள்கை நிலை மீதான நாணயச் சபையின் தீர்மானங்கள் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட கலண்டரின்படி பத்திரிகை வெளியீடுகளூடாக சந்தைக்கு பரப்பப்படுகின்றன. இவற்றுக்குப் புறம்பாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் முக்கியத்துவம் மிக்க சமகால விடயங்களைப் பற்றி ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். சில ஆராய்ச்சி ஆய்வுகள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட உயர் அலுவலர் ஆய்வுகளின் இரண்டாவது தொகுதியில் வெளியிடப்

பட்டிருக்கின்றன.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பன்னாட்டு நிறுவனங்களான சியசென் என அழைக்கப்படும் தென் கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம் சார்க்நிதி என அழைக்கப்படும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென் ஆசிய அமைப்பு போன்றவற்றுடன் இணைந்து கூட்டு ஆராய்ச்சிகளை நடாத்துவதில் ஈடுபட்டிருந்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் வங்கிக்குள்ளேயும் வெளியேயும் பல்வேறு முக்கிய குழுக்களில் பணியாற்றினர். சார்க் முகாமைக்கும் மற்றும் பாக்கித்தான், அமெரிக்கா போன்ற தனிப்பட்ட நாடுகளுடனான வர்த்தக கூட்டங்களுக்கான ஆயத்த வேலைகளிலும் இந்தியாவுடனான அனைத்தையு முள்ளடக்கிய பொருளாதார பங்குடமை மீதான பேரப்பேச்சுக்களிலும் ஈடுபட்டனர். அவர்கள் பல்வேறு நிறுவனங்களது பணிப்பாளர் சபைகளிலும் மற்றும் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மூலவள ஆட்களாகவும் பணியாற்றியுள்ளனர். திணைக்களமானது இவ்வாண்டுக் காலத்தில் வங்கியின் பல்வேறு குழுக்களான சந்தைத் தொழிற்பாடுகள் குழு, உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக்குழு, மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக்குழு போன்ற வற்றிற்கு உள்ளீடுகளை வழங்கி கலந்துரையாடல்களிலும் பங்கு பற்றியது. திணைக்களத்தின் மூத்த ஆராய்ச்சி அலுவலர்கள் வங்கியின் பட்டப்பின் படிப்பு பட்டம் பெறுவதற்கு ஆர்வம் கொண்ட அலுவலர்களுக்கான பயிற்சிக்கு உதவிகளை வழங்கியதுடன் அவர்களது ஆராய்ச்சி வேலைகளுக்கும் வழிகாட்டினர். தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு சமநிலைப்படுத்தும் நிதியங்களின் தலைவராக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் விளங்குவதனால் அவற்றின் ஆரம்பம் முதலே அவை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் முகாமை செய்யப்படுகின்றன. எனினும், 2005 இல் திறைசேரியால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, இத்தகைய நிதியங்களிலமைந்த அனைத்து செலவு மீதிகளும் பொதுத்திறைசேரிக்கு மாற்றல் செய்யப்பட்டன.

நியதி அறிக்கைகள் மற்றும் ஏனைய வங்கியின் சிறப்பு அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் தயாரிப்பது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஒரு முக்கியமான பொறுப்பாகும். திணைக்களம் 2004 ஆம் ஆண்டிற்கான வங்கியின் ஆண்டு அறிக்கை, அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்-2005 இன் முக்கிய பண்புகளும் 2006 இற்கான வாய்ப்புக்களும், மற்றும் 2005 இன் மாதாந்த செய்தித்திரட்டு என்பவற்றின் வெளியீடுகளை ஒருங்கிணைத்தது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், நாணயவிதிச் சட்டத்தின் கீழ் நிதியமைச்சருக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட நியதி அறிக்கையினை தயாரிப்பதற்கும் பொறுப்பாகவுள்ளது.

திணைக்களமானது நியதி வெளியீடுகள், தெரிவு செய்யப்பட்ட பொருளாதார வாராந்த மற்றும் மாதாந்த குறிகாட்டிகள், வங்கியின் இணையத்தளம் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் என்பன ஊடாக தகவல்களை பரப்புவதை தொடர்ந்தும் செய்து வந்துள்ளது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2005 இல் பன்னாட்டு வர்த்தகம் மீதான மாதாந்த பத்திரிகை வெளியீடுகளையும் சென்மதிநிலுவை மீதான காலாண்டு பத்திரிகை வெளியீடுகளையும் தொடர்ந்தும் வெளியிட்டு வந்துள்ளது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தரம், உள்ளடக்கம், நேரம் தவறாமை அதேபோன்று அவற்றை விசாலித்த முறையில் அடைதல் என்பனவற்றை முன்னேற்றுவதன் மூலம் தரவுப் பரம்பலை தொடர்ந்தும் முன்னேற்றுகிறது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் பன்னாட்டு பல்புடை நிதி நிறுவனங்களுடனான உறவுகளை ஒருங்கிணைத்து வருகிறது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு நாணய நிதியத்துடன் குறிப்பாக உறுப்புரை iv இன் ஆலோசனைகள் அரசாங்கங்களுக்கிடையான இருபத்து நான்கு குழுமம் (ஜி.24) தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமான நிலையம், தென்கிழக்காசிய, நியூசிலாந்து, அவுத்திரேலியா மத்திய வங்கிக்குழு மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களினதும் நிதிச் செயலாளர்களினதும் சார்க் நிதிக்குழு என்பவற்றுடனான இலங்கையின் உறவுகளை ஒருங்கிணைத்தது. 2005 இல் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை கொடையாளி நாடுகளுடனான வேலைகளை ஒருங்கிணைப்பதற்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நிதிஅமைச்சிற்கு உதவியது. 2005 சனவரியில் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தினையும், யூன் 2005 இல் "பிரமிட் திட்டங்களை ஒழித்தல்" என்னும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்ஆசிய அமைப்பு நிதிக்குழுவின் கருந்தரங்கினை ஒழுங்கமைப்பதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் முக்கிய பொறுப்பினை வகித்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் அலுவலர்களது திறன்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு தனது அலுவலர்களும் அதன் முக்கிய தொழிற்பாட்டு பரப்புகளில் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் கிடைக்கத்தக்கதான நிகழ்ச்சித் திட்டங்களை பயன்படுத்தி அதன் மையத் தொழிற்பாட்டுத் துறைகளில் தொடர்ந்தும் பயிற்சியளித்தது. வங்கியின் வாராந்த மற்றும் மாதாந்த கருத்தரங்குகளிலும் அதேபோன்று வெளியில் நடத்தப்பட்ட முக்கியமான ஆய்வரங்குகளிலும் செயலமர்வுகளிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் பங்கு பற்றியுள்ளனர். அலுவலர்கள் ஈடுபாட்டிற்குரிய முக்கியமான விடயங்களை கலந்துரையாடுவதற்காக வாராந்த சிறப்பு ஆய்வரங்கு தொடர்களையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய மூத்த அலுவலர்கள் தாம் பெற்றுக்கொண்ட அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்குமாக விசேட வாராந்த கருத்தரங்குகளையும் திணைக்களத்தில் நடத்தினர்.

## 6. ஊழியர் சேமநிதியம்

ஊழியர்சேம நிதிய சட்டத்தின் நியதிகளின்படி நாணயச்சபை உதவு தொகை, தண்டப்பணம் பெறுதல், முதலீடுகளிலிருந்தான வருமானம் என்பனவற்றைப் பெறல் பதிவு செய்யப்பட்ட தொழில்நிலைகளினதும் உறுப்பினர்கள் மற்றும் நிதியத்தினதும் கணக்குகளைப் பேணுதல் மேலதிக பணத்தினை பொருத்தமான முதலீடுகளில் முதலீடு செய்தல் நிதியத்தின் உறுப்பினருக்கு அத்தகைய நன்மைகளை வழங்குதல் என்பனவற்றுக்குப் பொறுப்பாக விளங்குகிறது. 2005 இல் இந்த நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவின் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

### 6.1 முறையினை மேம்படுத்தல்

நிதியத்தின் தொழிற்பாடுகளின் பல்வேறு அம்சங்களிலும் வினைத்திறன் மிக்க முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன. மின்னியல் ஊடகத்தின் ஊடாக உறுப்பினர் உதவுதொகை தரவுகளை சேகரிக்கும் செய்முறையினை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த செய்முறையின் அனுகூலங்கள் பின்வருமாறு: 2006 முதலரைக் காலத்தில் இப்புதிய முறையில் 150 இற்கு மேற்பட்ட ஊழியர்களை கொண்ட தொழில்தருநர்களை உள்ளடக்குவதன் மூலம் 75 சதவீதமான உதவுதொகை செலுத்தும் உறுப்பினர்கள் உள்ளடக்குவது இலக்காக இருந்தது. ஊழியர் சேமநிதியம் இந்த நிதியத்திற்கு உதவுதொகை அனுப்பாத உறுப்பினர் தொடர்பாக பூரணப்படுத்தப்பட்ட தகவல்களை சேகரிக்கும் மற்றுமொரு செயற்றிட்டத்தை தொடங்கியுள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் எதிர்காலத்தில் தமது உதவுதொகை செலுத்தாத கணக்குகள் தொடர்பில் உறுப்பினர்களின் ஆண்டுக் கூற்றுக்களை அனுப்பி வைத்தலாகும். நடைமுறையில் ஊழியர் சேமநிதியமானது உதவுதொகைக் கணக்குகள் தொடர்பில் அரையாண்டு உறுப்பினர் கூற்றுக்களை அனுப்பி வைக்கின்றது. இது நிதியத்தின் உறுப்பினர் வெளிப்படுத்துகைக் கொள்கையின் மேம்பாட்டினை நோக்கிய முக்கியமானதொரு படியாகும். ஊழியர் சேமநிதிய வெப்தளமானது (www.epf.lk) பொது மக்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தகவல்களை அளிக்கும் விதத்தில் மீளவடிவமைக்கப் பட்டது. தரமுயர்த்தப்பட்ட வெப்தளம் பங்குடமை யாளரிடையேயான சிறந்த செயல் நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கான பலவித பண்புகளை உள்ளடக்கியுள்ளது. கணக்கீட்டு மற்றும் முதலீட்டுப் பொதியொன்றினை கொள்வனவு செய்து நிறுவி தொழிற்படுத்துவதற்காக கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. 2006 இன் இரண்டாவது காலாண்டில் நிறுவுதல் பூர்த்தியாக்கப்படும். இந்த கணனிப் பொதியானது ஊழியர் சேம நிதியத்தின் கணக்கீடு, முதலீடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகளின் வினைத்திறனையும் துல்லியமான தன்மையினையும் உறுதிப்படுத்தும்.

உறுப்பினர்களுக்கு 2004 இற்கான வருடாந்த உறுப்பினர் கூற்றுக்களும் 2005 முதலரையாண்டுக்கான அரையாண்டுக் கூற்றுகளும் 2005 ஆண்டில் தொழில்தருநர் ஊடாக வழங்கப்பட்டது. தொழிற் பாடுகளில் வினைத்திறன் முன்னேற்றங்கள் ஏற்கனவே அடையப்பட்டமையானது ஊழியர்சேம நிதியத்தினை முன்னைய ஆண்டினைவிட 2-3 மாதங்கள் முன்னராக இந்த கூற்றுக்களை வழங்குவதனை இயலச்செய்தது.

### 6.2 பொதுமக்கள் விழிப்புணர்வும் உறுப்பினர் வெளிப்படுத்தலும்

விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது நிதியத்தின் அனைத்து பங்குடமையாளர்களையும் மையப்படுத்தி 2005 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. உதவிபீடமானது உறுப்பினர்களின் விசாரணைகளை துரிதமாக கவனிப்பதால் உறுப்பினரிடையே தொடர்ந்தும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. இவ்வாண்டில் பெருந்தோட்டத்துறையில் பதினொரு நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டதுடன் அவை தரவுத்

தளத்தில் காணப்பட்ட குறைபாடுகளுக்கு அதே நேரத்தில் தீர்வுகளை பெற்றுக்கொடுத்தன. ஊழியர் சேமநிதிய பணவனுப்பல்களில் தவறுகளற்ற செயன்முறையினைப் பின்பற்றவும் மின்னியல் ஊடகத் தரவுகளை வழங்கும் முறையினை ஊக்குவிக்கவும் தொழில்தருநர்களுக்காக தொடர் ஆய்வரங்குகள் இடம்பெற்றன. ஊழியர் சேமநிதிய தொழிற் பாடுகளுக்கான "சேவக அர்த்தசாதக அறமுதல் அத்பொத" என அழைக்கப்படும் கைநூலொன்று 2005 இல் வெளியிடப்பட்டது.

## 6.3 ஊழியர் சேமநிதியத்தில் இயலளவினைக் கட்டியெழுப்புதல்

"கற்றறியும் அமைப்பினை" நிறுவுகின்ற மத்திய வங்கியின் கோட்பாட்டிற்கு இசைவாக, ஊழியர் சேமநிதிய அலுவலர்களுக்கான தொழில்திறன் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்றன. பங்கேற்பாளர்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளின் மூலம் தாம் பெற்ற தமது அறிவையும் அனுபவத்தையும் முக்கியமாக ஆய்வரங்குகள் மற்றும் கட்டுரைகள் ஊடாகப் பகிர்ந்து கொண்டனர். பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவாற் றலை பிரயோகிப்பதற்கான சூழ்நிலையும் உருவாக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகால நிதிய முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் பதின்மூன்று பகுப்பாய்வாளர்கள் நிதிய முகாமைத்துவப் பிரிவின் பல்வேறு அலகுகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். வெளிக்கள பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது அலுவலர்களின் தீர்மானம் எடுத்தல், தலைமைத்துவம் மற்றும் முறைமைத்தேர்ச்சி என்பவற்றை ஊக்குவிக்க உதவின. இந்த இயலளவினைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளின் நோக்கம் உன்னதமான பணியொன்றினை வழங்குவதற்காக இந்த நிதியத்தினை தகுதி வாய்ந்த மனித வளங்களுடன் இணைப்பதன் மூலம் வளம் சேர்ப்பதேயாகும்.

## 6.4 வீடமைப்புக் கடன் வசதிகள்

1988 முதல் ஊழியர் சேமநிதிய உறுப்பினர் களுக்கு அனுமதியளிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ஊழியர் சேமநிதிய நிலுவைகளை பிணையாகக் கொண்டு வீடமைப்பு நோக்கங்களுக்காக வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்கான வசதி கிடைக்கப்பெற்றது. 2005 ஆண்டில் ஊழியர் சேம நிதியம் ரூ.2,766 மில்லியன் கொண்ட மொத்த ஒப்புதலளிக்கப் பட்ட கொடுகடன் தொகை கொண்ட 14,600 உறுப்பினர் நிலுவை சான்றிதழ்களை வழங்கியது. முதலாவது கடன் வெற்றிகரமாக மீளச்செலுத்தப்பட்ட பின்னர் இரண்டாவது கடனும் கிடைக்கக் கூடியதாயிருக்கும். எனினும், கடன் தொகைகளை திருப்பிச் செலுத்தத்தவறும் பட்சத்தில் கடன் நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு 36 சதவீதமான தண்ட வீதத்தினை செலுத்தும்படி கோருவது உறுப்பினர்கள் கடன்களை திருப்பிச் செலுத்த தவறுவதற்கு வழியமைக்கின்றது. செலுத்தத் தவறிய தொகையுடன் தண்ட வட்டியும் சேர்த்து குறிப்பிட்ட ஊழியர் சேமநிதிய உறுப்பினரின் உறுப்பினர் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு கடன் வழங்கும் நிறுவனத்திற்குச் செலுத்தப்படுவதனால் இந்த வசதியினை பிழையான வழியில் பயன்படுத்துவது ஊழியர் சேமிப்பு நிதிய உறுப்பினருக்கு செலவு கூடிய விடயமாக அமைகிறது. இத்தகைய சமயங்களில் உறுப்பினர்களின் ஓய்வூதிய சேமிப்பு குறைக்கப்பட்டு விடுகிறது. மேலும் கடன் செலுத்தத் தவறியவர்கள் இரண்டாவது கடனுக்கு அல்லது 4 சதவீத வட்டிவீத கடனைக் கொண்ட சிரமோத வீட்டுக் கடன் திட்டத்திற்கு உரித்து இல்லாதவராவர். அட்டவணை II-5 வீடமைப்புக் கடன்களின் அதிகரித்த போக்கினைக் காட்டுகின்றது.

## 6.5 ஊழியர் சேமநிதிய உறுப்பினர்களுக்கான சிரமோத வீட்டுக்கடன் திட்டம்

"சிரமோத வீட்டுக் கடன் திட்டம்" என்ற பெயரிலான புதிய திட்டமானது குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களைப் பூர்த்தி செய்த திறமையுடைய ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு ஆகக் கூடுதலாக ரூ.300,000 கொண்ட வீடமைப்புக் கடன்களை 4 சதவீதமான சலுகை வட்டி வீதத்தில் வழங்கும் பொருட்டு தொழில் தொடர்புகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் முன்

அட்டவணை II.5
ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கான வீடமைப்புக் கடன் வசதிகள் பற்றிய விபரங்கள்

ரூ.மில்லியன்

| ஆண்டு | உறுப்பினர் நிலுவை சான்றிதழ்கள் வழங்கப்பட்டவை (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் தொகை (ரூ.மில்லியன்) | செலுத்தத் தவறிய வீடமைப்புக் கடன்கள் (எண்ணிக்கை) | செலுத்தத் தவறியமைக்காக ஊழியர் சேம நிதியம் செலுத்தியவை (ரூ.மில்லியன்) |
|---|---|---|---|---|
| 2000 | 12,938 | 1,648 | 19,944 | 262 |
| 2001 | 16,066 | 2,091 | 24,202 | 381 |
| 2002 | 19,502 | 2,673 | 31,574 | 541 |
| 2003 | 18,689 | 2,792 | 40,085 | 670 |
| 2004 | 14,307 | 2,452 | 43,108 | 735 |
| **2005** | **14,600** | **2,766** | **47,000*** | **750*** |

* மதிப்பிடப்பட்டவை

மூலம்: ஊழியர் சேம நிதியம்

முயற்சியுடன் 2004 திசெம்பரில் ஏற்படுத்தப்பட்டது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பன பங்கேற்பு கொடுகடன் நிறுவனங்களாக விளங்கின. கடன் வழங்கும்பொழுது பங்கேற்பு கொடுகடன் நிறுவனமானது ஊழியர் சேமநிதிய உறுப்பினர்களது சொந்த கொடுகடன் மதிப்பீட்டு வழிகாட்டல்களின் அடிப்படையில் மீள்கொடுப்பனவு இயலளவினை உறுதிசெய்யும். இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடனை செலுத்தத் தவறுமிடத்து கடன் வழங்கிய நிறுவனம் சொத்தினை கையேற்கும். உறுப்பினரின் ஊழியர் சேமநிதிய நிலுவையிலிருந்து எந்தவித கொடுப்பனவும் செய்யப்படாது. எனினும் ஊழியர் சேமநிதியத்தினால் பிணையிடப்பட்ட திட்டத்தின் கடனைச் செலுத்தத் தவறியவர்களுக்கு இந்த புதிய திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு உரித்து கிடையாது. சலுகை வீதத்தில் வீடமைப்புக் கடன்பெறும் உறுப்பினர்களுக்கு தமது சொந்தமான வீட்டினை அல்லது சொத்தினை வைத்திருப்பதற்கு வசதியளிக்கும் வேளையில் ஊழியர் சேமநிதியத்தினால் பிணையிடப்பட்ட கடன் திட்டத்தின் செலுத்தத்தவறும் அளவினையும் குறைப்பதற்கு உதவும். இதற்கு மேலாக சிரமோத திட்டமானது வீடமைப்புக் கடன் செலுத்தத் தவறுவோரின் எண்ணிக்கையினைக் குறைவடையச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 6.6 முதலீட்டு நடவடிக்கைகளும் விளைவுகளும்

இவ்வாண்டில் நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 12.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, 2005 இறுதியில் ரூ.405 பில்லியன் கொண்ட பெறுமதியினை பதிவு செய்தது. கடந்த 8 ஆண்டு கால போக்கினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் நீண்டகால சந்தைப்படுத்தத்தக்க முதலீட்டு கருவியான திறைசேரி முறிகளிலான முதலீடுகள் முன்னைய ஆண்டின் 77 சதவீதத்திற்கு எதிராக 2005 இறுதியின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் 83 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது. சந்தைப்படுத்தப்படாத கருவியொன்றான அரச ரூபா பிணைகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் 2004 இறுதியில் சொத்துப்பட்டியலின் 20 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

2005 இறுதியில் ஊழியர் சேமநிதியத்தினது மொத்த சொத்துப்பட்டியலில் 97.8 சதவீதமானது அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டது. ஊழியர் சேமநிதியம் தொடர்ந்தும் அதனது சொத்துப்பட்டியலில் பெரும்பகுதியினை அரச பிணையங்களில் முதலீடு செய்வதினால் ஊழியர் சேமநிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்கள் மீதான விளைவு வீதமும், ஊழியர் சேமநிதிய உறுப்பினர்களுக்கு கொடுபட வேண்டிய வட்டி வீதமும் சந்தையில் காணப்படும் அரச பிணையங்களின் வீதங்களிலேயே தங்கியுள்ளது. எனினும் மிகவும் குறுகிய காலத்தில் (ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில்) சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றம் உறுப்பினர்களின் முதலீட்டு விளைவுகளிலும் உறுப்பினர்களுக்கான வட்டி வீதங்களிலும் மிகவும் சிறிதளவான தாக்கத்தினை மட்டுமே ஏற்படுத்தக் கூடியதாகவிருக்கும் என்பதனைக் கவனித்தல் வேண்டும். பதிலாக, சந்தையில் நீண்ட காலத்திற்கு மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கிக் காணப்படும் வட்டி வீதங்கள் ஊ.சே.நி. வருவாய்களில் மேல்நோக்கிய அல்லது கீழ்நோக்கிய போக்கினை ஏற்படுத்தும். 364 நாள் திறைசேரி உண்டியல்கள் ஆண்டு முழுவதும் 2004 இல் பதிவு செய்யப்பட்ட 7-8 சதவீதத்திலிருந்து 8-10 சதவீத மட்டத்திற்கு சிறிதளவு உயர்ச்சியை குறித்துக்காட்டியது. எனினும் இந்த வீதங்கள் 2001-2002 காலத்தில் நிலவிய 21-11 சதவீத வீதங்களை விட மிகவும் குறைவான நிலையில் இருந்தன. (வரைபடம் II-4 கீழே) 2001-2002 இல் உயர் சந்தை வீதங்களில் கொள்வனவு செய்யப்பட்டு ஊழியர் சேமநிதிய சொத்துப்பட்டியலில் காணப்பட்ட மற்றுமொரு நீண்டகால அரச பிணையங்கள் 2005 இல் முதிர்ச்சியடைந்தன. முதிர்ச்சி பெறுகைகள் 8-10.5 சதவீதமான குறைந்த வீதத்தில் மீள்முதலீடு செய்யப்பட்டன. ஆகவே 2005 ஊழியர் சேமநிதியத்தின் சொத்துப்பட்டியலின் அளவிடப் படக்கூடிய விளைவு வீதங்கள் நீண்டகால சந்தை வட்டிவீத போக்குகளுடன் இசையும் விதத்தில் மேலும் வீழ்ச்சியடையும்.

பொதுவாக 2001 இல் தொடங்கிய பங்குச்சந்தையின் நீண்டகால போக்கு குறுங்கால ஏற்றஇறக்கங்களுடன் மீளாய்வுக்குரிய ஆண்டிலும் தொடர்ந்தது. சந்தையானது தொடர்ந்தும் வேகமான போக்கினைக் கொண்டிருந்ததுடன் அனைத்துப் பங்கு

வரைபடம் II-4
சந்தை வட்டி வீதங்கள்



விலைச்சுட்டெண்ணானது நவெம்பர் மத்தியில் எல்லா காலங்களையும் விட உயர்வான 2,551 புள்ளிகளைப் பெற்று விளங்கியது. 2005 பின்பகுதியில் சமாதான முனைப்பில் நிலவிய பதற்றம் முழுமொத்த சந்தை நிலைமைக்கு 27 சதவீதத்தினாலான வீழ்ச்சியினை விளைவித்தது. எவ்வாறெனினும் 2006 தொடக்கத்தில் இந்நிலைமை தளர்வடைந்தது. சுனாமி பேரழிவின் காரணமாக உருவான குறுகிய கால கீழ்நோக்கிய போக்கும் சமாதான செயற்பாட்டில் தோன்றிய பதற்றமும் நீண்டகால முதலீட்டாளர்களுக்கு இலாப வாய்ப்புக்களாக அமைந்தன. ஆகவே ஊழியர் சேமநிதியமானது அதனது அட்டவணைப் படுத்தப்பட்ட பங்குடமை சொத்துப்பட்டியலில் நீண்டகால உள்ளார்ந்த வளம்மிக்க முதலீடுகளை கட்டியெழுப்பிய வேளையில் தற்காலிகமான சந்தை ஏற்ற இறக்கங்களிலிருந்து குறுங்கால இலாபங்களையும் பெற்றது. 2005 இல் ஊழியர் சேமநிதியத்தினது பங்குடமை முதலீடு களிலிருந்து பெறப்பட்ட மொத்த விளைவுகள் ரூ.908 மில்லியனாக அல்லது சராசரி பங்கு முதலீட்டில் 39 சதவீதமாக விளங்கியது. (அட்டவணை 11.6) வகை கூறியது. 1998 முதல் 2005 வரையிலான 8 ஆண்டு முழு முதலீட்டு காலப்பகுதியில் ஊழியர் சேமநிதியம் பங்கு முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் சராசரியாக 25 சதவீதமான ஆரோக்கியமான நிலையில் உள்ள விளைவினை உழைக்கக்கூடியதாக விளங்கியது. எனினும், இது 2005 இறுதியில் மொத்த ஊழியர் சேமநிதிய சொத்துப்பட்டியலில் 0.7 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறியது.

அரச பிணையிலிருந்து பெறப்பட்ட மூலதன நன்மைகள் 2004 உடன் ஒப்பிடுகையில் 2005 இல் வீழ்ச்சியடைந்தமைக்கு தூண்டுதலற்ற சந்தை நிலைமைகளே காரணமாகும். எனினும், 2005 இல் பங்குச் சொத்துப்பட்டியல் ரூ.817 மில்லியன் கொண்ட மூலதன நன்மைகளை உருவாக்கியதுடன் அது 2004 இல் பதிவு செய்யப்பட்ட ரூ.318 மில்லியனை விட 150 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். பங்கு முதலீடுகளின்செயலாற்றம் அரச பிணையங் களிலிருந்து கிடைத்த மூலதன நன்மைகளின் வீழ்ச்சியினை இழப்பீடு செய்யக்கூடியதாக இருந்ததுடன் 2005 இல் ரூ.1591 மில்லியன் கொண்ட மொத்த மூலதன நன்மைகளைப் பெற இயலச்செய்தது. அது 2004 இல் பெறப்பட்ட மொத்த மூலதன நன்மையினை விட ரூ.43 மில்லியன் உயர்வானதாகும். (அட்டவணை II.7)

## 6.7 மொத்த உறுப்பினர் நிலுவையும் 2005 ஆம் ஆண்டிற்கான வட்டிவீதமும்

ஊழியர் சேமநிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை கலண்டர் ஆண்டிற்காக பிரகடனப்படுத்தப் பட்ட வட்டி வீதமான 9 சதவீதத்திற்கு கணக்கீடு

அட்டவணை II.6
ஊ.சே.நி: 2005 காலப்பகுதியில் பங்குச் சொத்துப்பட்டியலின் செயலாற்றம்

ரூ.மில்லியன்

| விடயம் | 2004 | 2005 |
|---|---|---|
| சராசரி சொத்துப்பட்டியல் | 1,064 | 2,335 |
| மொத்த பங்கிலாபவருமானம்(அ) | 112 | 91 |
| மொத்த மூலதன நன்மைகள் | 318 | 817 |
| **மொத்த பங்கிலாபங்கள் மூலதன நன்மைகள்** | 430 | 908 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

அட்டவணை II-7
ஊ.சே.நி: 2005 இல் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

ரூ.மில்லியன்

| விடயம் | கொள்வனவு அளவு | | விற்பனவு அளவு** | | மூலதன நன்மைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2004 | 2005 | 2004 | 2005 |
| திறைசேரி முறிகள் | 13,311 | 5,188 | 20,094 | 11,433 | 1,225 | 774 |
| திறைசேரி உண்டியல்கள் | 2,572 | 196 | 6,634 | 381 | 5 | 0.12 |
| திரவப்பங்குகள் | 824 | 2,703 | 380 | 1,628 | 318 | 817 |
| **மொத்தம்** | 16,707 | 8,087 | 27,108 | 13,442 | 1,548 | 1,591 |

** செலவுப் பெறுமதிகளில்　　மூலம் ஊழியர் சேம நிதியம்

அட்டவணை II- 8
ஊ.சே.நி : அடிப்படைப் பண்புகள்

| விடயம் | 2004 | 2005* |
|---|---|---|
| உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | 10,307,477 | 10,778,876 |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் | 1,973,601 | 2,045,000 |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் | 8,333,876 | 8,733,876 |
| உதவு தொகை செலுத்தும் ஊழியர்கள் | 53,567 | 56,067 |
| மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.) | 23,330 | 27,315 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 16,617 | 17,024 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 98,666 | 93,841 |
| மொத்த முதலீட்டு சொத்துப் பட்டியல் (ரூமில்.) | 360 | 405 |
| மொத்த முதலீடுகளின் %மாக அரசபிணையங்களின் முதலீடுகள்(%) | 98.2 | 97.8 |
| மொத்த முதலீடுகளின் %மாக தனியார்துறை முதலீடுகள்(%) | 1.8 | 2.2 |
| சராசரிச் சொத்துச் பட்டியலின் மீதான பெறப்பட்டவருமான வீதம் | 11.56 | 10.92 |
| மொத்த உறுப்பினர் நிலுவை (ரூ.பில்) | 373 | 418 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 39,315 | 41,818 |
| வருமான வரி (ரூ.மில்.) | 4,735 | 3,201 |
| நிருவாகச் செலவுகள் (ரூ.மில்.) | 360 | 418 |
| மொத்த வருமானத்தின் % நிருவாகச் செலவுகள் (%) | 0.9 | 0.9 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட ஆண்டு வட்டிவீதம் (%) | 9.50 | 9.00 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட பயனுறு வட்டிவீதம் (%) | 9.59 | 9.13 |

* தற்காலிகமானவை.　　மூலம் : ஊழியர் சேம நிதியம்

செய்த பின்னர் 2005 இறுதியில் ரூ.418 பில்லியன் கொண்ட பெறுமதிக்கு 2005இல் 12 சதவீதமான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. ஆண்டினி றுதியிலுள்ள உறுப்பினர் நிலுவைக்கு வட்டி வீதத்தினை பிரகடனப்படுத்தும் நிதியத்தின் சட்டபூர்வமான தேவைப்பாட்டிற்கு அமைவாக ஆண்டிறுதி உறுப்பினர் நிலுவையின் மதிப்பிடப்பட்ட வட்டிவீதம் 9.1 சதவீதமான பயன்தரு வீதமாக விளங்கியது. இப்பயன்தரு வீதமானது வர்த்தக வங்கியின்சராசரி நிறையேற்றப்பட்டவைப்பு வீதத்திலும் பார்க்க 3.5 சதவீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதத்திலும் பார்க்க 0.9 சதவீதமும் உயர்வானதாக விளங்கி முறையே 5.6 சதவீதமாகவும், 8.3 சதவீதமாகவும் விளங்கின.

ஊழியர் சேமநிதியத்தின் அடிப்படைப் பண்புகள் அட்டவணை II.8இல் தரப்பட்டுள்ளன.

## 7. செலாவணிக் கட்டுப்பாடு

நாட்டிற்குள் வருகின்ற மற்றும் நாட்டிற்கு வெளியே செல்கின்ற வெளிநாட்டுச் செலாவணியின் பெறுகைகளையும் கொடுப்பனவுகளையும் முகாமைப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்துவதே செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடாகும். 2005 ஆம் ஆண்டில், நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சில மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அனைத்து வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவுகளையும் பெறுகைகளையும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பில் அதிகார மளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினூடாக, வாடிக்கையாளர்களின் மிக நுணுக்கமான ஆய்வு நடவடிக்கைகளுக்குட்பட்டு, அவற்றின் நியாயம் மற்றும் தற்றுணிபுகளுக்கேற்ப எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி தொடர்ந்தும் விடுவிக்கப்பட்டன. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் புறம்பாக, நாணய மாற்றுநர்கள், சுற்றுலா விடுதிகள், பயண முகவர்கள் மற்றும் தீர்வையற்ற கடைகள் என்பன குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. இவை வெளிநாட்டு நாணயத் தாள்களையும் குத்திகளையும் மாற்றிக்கொள்ளுதல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல், பயணிகள் காசோலை வடிவத்திலும் நாணயத் தாள்களாகவும் வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குதல், வெளிநாட்டவர்களின் செலவிடப்படாத இலங்கை ரூபாவினை வெளிநாட்டு நாணயத்திற்கு மீண்டும் மாற்றிக்கொடுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2005 இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதன் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக அதிகார மளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுக்கும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல் களையும் தொடர்ந்தும் வழங்கி வந்ததுடன் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகளை நடத்தியும் அவற்றின் வெளிநாட்டுச் செலாவணியின் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்தும் வந்ததுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற மைக்காக கம்பனி மற்றும் கம்பனியல்லாத நிறுவனங்களின் மீது தண்டங்களையும் விதித்தது. மேலும், இலங்கையர்களின் கம்பனியினால் வெளிநாடுகளில் செய்யப்படும் மூலதனம், வெளிநாட்டுச் செலாவணியில் மேற்கொள்ளப்படும் கடன்பாடுகள், மற்றைய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கான மாற்றல்கள் போன்ற குறிப்பிட்ட மூலதனக் கணக்கு மாற்றல்களுக்கு திணைக்களம் தொடர்ந்தும் அனுமதி வழங்கியது. 2005 இல் இடம்பெற்ற இன்னொரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் கடன் அட்டையை வைத்திருப்பவர்கள் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளைச் செய்ய அனுமதிக்கப்பட்ட நோக்கங்கள் தொடர்பாக எழும் எந்த ஒரு சந்தேகத்தையும் தெளிவுபடுத்துவதற்காகவும் அட்டையை வைத்திருப்பவர்களே அவர்களது அட்டை மீது செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு பொறுப்பு என்பதனை அவர்களுக்கு அறியச்செய்வதற்காகவும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்குகின்ற வங்கிகளின் ஆலோசனையுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். இது தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இல.1411/5 கொண்ட அரச வர்த்தமானியில் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டது. இது இணையத்தளம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பிரமிட் திட்டங்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்ய 2003 இலும் 2004 இலும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் பெருமளவிற்கு தவறாகப் பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

### 7.1 2005 இன் முக்கிய நிகழ்வுகள்

2005 இல் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ முறையினை மேம்படுத்துவதில்

முன்னேற்றமடையப்பட்டது. அவற்றுள் முக்கியமானது யாதெனில், ஏற்றுமதிப் பெறுகைகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதனைக் கண்காணிப்பதற்கான திட்டமாகும். ஏற்றுமதிப் பெறுகைகள் மீதான தகவல்கள், ஏறத்தாழ 3000 முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களை உள்ளடக்கி காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நுண்பாக மட்ட அளவீட்டினூடாக திரட்டப்பட்டன. 2005 ஆம் ஆண்டில் அனைத்து அரசல்லா நிறுவனங்களி னாலும் அவர்களின், சமூக, அபிவிருத்தி மற்றும் நாட்டின் நிவாரண நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட உள்வரும் பணவனுப்பல்களுக்கான பகிர்ந்தளிப்புக் கணக்கொன்றாக இலங்கை ரூபா கணக்குத் திட்டம் அதாவது சுனாமிக்குப் பின்னைய உள்வரும் பணவனுப்பல் கணக்கு எனப் பெயர் கொண்ட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கணக்குகளினால் பெறப்பட்ட நிதிகள் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் கிரமமாக வெளியிடப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தும் விதத்தில் விமான நிறுவனங்கள் வானூர்திப் பயணச்சீட்டுக்களை ஐ.அ.டொலர்களில் குறிப்பிட அனுமதிக்கப்பட்டன. ஏற்றுமதித் துறைக்கான மேலுமொரு ஊக்குவிப்பாக, மறைமுக ஏற்றுமதியாளர்கள் நேரடி ஏற்றுமதியாளர்களிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெற மறைமுக ஏற்றுமதியாளர்களை அனுமதிக்கும் விதத்தில் "மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கு" என்ற பெயரில் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்காக வெளிநாட்டு நாணய கணக்கு திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையை பொறுத்தவரையில் நாணய மாற்றுநர்களை நியமிப்பதற்காக, அவர்களின் நிதியியல் வலுவாற்றலை உயர்த்தும் நோக்குடன் புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள நாணயத்தினை மாற்றுகின்ற கம்பனிகளுக்கு அவர்களது பங்குமூலதனத் தேவைப்பாடு ரூ.1 மில்லியனிலிருந்து ரூ.10 மில்லியனிற்கு உயர்த்தப்பட்டது. மேலும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையை வைத்திருப்போருக்கு அவர்களது அட்டைகளூடாக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளின் வகை மற்றும் வதிவற்ற தொழில்முயற்சிகளுக்கு அவர்களின் அட்டை மீது செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் மீது இவர்களுக்குள்ள பொறுப்பு என்பன பற்றி அறிவூட்டுவதற்காக திட்டமொன்று 2005 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 7.2 மூலதன கொடுக்கல் வாங்கல்கள்

#### (அ) முதலீடுகள்

வதிவற்றவர்களினால் இலங்கையில் செய்யப்படும் முதலீடுகள் மற்றும் வதியும் இலங்கையர்களின் கம்பனிகளினால் வெளிநாடுகளில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பாக தற்பொழுதுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் 2005 ஆம் ஆண்டிலும் மாற்றமின்றியிருந்தன. முதலீட்டுச்சபை இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு தொடர்ந்தும் அனுசரணையாளராக இருந்து வருகின்றது. இலங்கைக் கம்பனிகளினால் வெளிநாட்டில் செய்யப்படும் முதலீடுகளைப் பொறுத்தவரை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அவர்களது முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து அவர்களது தகைமையின் அடிப்படையில் அத்தகைய முன்மொழிவுகளை மாண்புமிகு நிதியமைச்சருக்கு விதந்துரைக்கிறது. 2005 இல் பதினைந்து இலங்கைக் கம்பனிகள் ஐ.அ.டொலர் 38.42 மில்லியன் கொண்ட முதலீடுகளை கூட்டு முயற்சிகளிலும் வெளிநாட்டிலுள்ள முழுமையாகச் சொந்தமான துணை நிலுவைகள் மற்றும் கிளைகளிலும் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டன.

#### (ஆ) வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்

முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் முதலீட்டுச் சபையினால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்தும் முழுமையாக விலக்குப்பெறுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த, இலங்கையிலுள்ள கம்பனிகள் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன்அனுமதியினைப் பெற வேண்டும். ஆய்விற்குரிய ஆண்டில் இரு நிதியியல் நிறுவனங்களுக்கும் இரு வதியும் கம்பனிகளுக்கும் ஐ.அ.டொலர் 22.26 மில்லியன் கொண்ட மொத்த வெளிநாட்டுக் கடனைப்பெற திணைக்களம் அனுமதியளித்தது.

### 7.3 வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்கள்

முன்கூட்டியே செய்யப்பட்ட கொடுப்பனவிற்கான இறக்குமதிகள் நாட்டிற்குள் வந்துவிட்டமையினை உறுதிப்படுத்தும் நோக்குடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அத்தகைய இறக்குமதிகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது. 2005 இல் வர்த்தக கொடுக்கல்வாங்கல் துறையில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம் யாதெனில் 1988 ஆம் ஆண்டு ஏப்பிறல் 8 ஆம் நாளிடப்பட்ட இலக்கம்:1022/6 கொண்ட அரச வர்த்தமானியில்

(அதி சிறப்பு) வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி 2(i) மூலம் இறக்குமதிகளுக்காக குறித்துரைக்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகளின் வரையறையானது 2005 மே 20 நாளிடப்பட்ட இல.1393/21 கொண்ட அரச செய்திமடலில் (அதி சிறப்பு) வெளியிடப்பட்ட மாண்புமிகு வர்த்தக, வாணிப, நுகர்வோர் அலுவல்கள் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதியின் நியதிகளின்படி ஐ.அ.டொலர் 7500 இலிருந்து ஐ.அ.டொலர் 10,000 வரையில் உயர்த்தப்பட்டமையேயாகும்.

### 7.4. கப்பற் சரக்கேற்றுவோரை பதிவு செய்தலும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட உரிமப் பத்திரங்களை வழங்குதலும்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கப்பற் சரக்கேற்றுவோரைப் பதிவு செய்தல், பயணிகள் காசோலைகளை வழங்குவதற்கான அங்கீகாரத்தினை பயண முகவர்களுக்கு வழங்குதல், வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள்வதற்காக நாணய மாற்றுநர்கள், மற்றும் சுற்றுலா விடுதிகள், தீர்வையற்ற கடைகள், பயண முகவர்கள் போன்ற ஏனைய நிறுவனங்களுக்கு உரிமங்களை வழங்குதல் என்பனவற்றை தொடர்ந்தும் மேற்கொண்டது.

#### அ. கப்பற் சரக்கேற்றுவோரைப் பதிவு செய்தல்

2005 ஆண்டுப்பகுதியில் 42 புதிய கம்பனிகள் கப்பற் சரக்கு ஏற்றுவோராக பதிவு செய்யப்பட்டதன் மூலம் கப்பற் சரக்கேற்றுவோரின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 173 இற்கு அதிகரித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2005 இல் கப்பற் சரக்கேற்றுவோரின் எண்ணிக்கை அதிகரித்தமைக்கு, 2005 யூலை 22 ஆம் நாளிடப்பட்ட இல:1402/19 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உரிமம் பெற்ற கப்பற்படுத்தல் முகவர்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 10 ஆம் பிரிவின் கீழ் மாண்புமிகு துறைமுகங்கள் விமான போக்குவரத்து அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஒழுங்கு விதியானது குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கையில் கப்பற் சரக்கேற்றும் வியாபாரத்தினை/ கப்பற் கலமல்லா பொதுவான பொருட்களைக் கொண்டுசெல்லும் தொழிற்பாட்டினை மேற்கொள்கின்ற கம்பனிகள் வணிக கப்பற்படுத்தும் பணிப்பாளரினால் வழங்கப்படும் உரிமத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவைப் பாட்டினை விதித்தமையே முக்கிய காரணமாகும். இவ்வாண்டில் கப்பற்படுத்தல், மற்றும் வான் பயண முகவர்கள் அதேபோன்று கப்பற்சரக்கு ஏற்றுவோரினால் அவர்களது வெளிநாட்டு முதல்வர்கள்/ முகவர்களின் சார்பில் பேணப்படும் ரூபாக் கணக்குகளுக்கு செய்யப்படும் வரவு மற்றும் பற்றினை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது.

#### (ஆ) நாணய மாற்றுநர்களுக்கு உரிமங்களை வழங்குதல்

1999 இல் நாணய மாற்றுநர்களை நியமிப்பதற்காக நாணயச்சபையினால் அறிமுகப் படுத்தப்பட்ட பிரமாணங்களின் கீழ் நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் 2005 இல் 13 புதிய உரிமங்களை வழங்கியது. நாணயமாற்று கம்பனியாக நியமிக்கப்படவுள்ள கம்பனிக்கான மூலதனத் தேவைப்பாட்டினை ரூ.1.0 மில்லியனிலிருந்து ரூ.10.0 மில்லியனுக்கு உயர்த்தும் விதத்தில் பிரமாணமானது 2005 மேயிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மாற்றப்பட்டது. புதியபிரமாணம் அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர் 5 விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன், புதிய பிரமாணத்தில் தெரிவிக்கப் பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருந்த ஒரு விண்ணப்பத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. இதன் மூலம் 2005 திசெம்பர் 31 ஆம் நாளன்று அதிகார மளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை 62 ஆக விளங்கியது. 2005 இல் அவர்களது மொத்த வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள் ஐ.அ.டொலர் 70 மில்லியன்களாக விளங்கின. இவை பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன.

### 7.5 கண்காணிப்பு

1994 இல் செலாவணிக் கட்டுப்பாடுகள் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர், அதிகார மளிக்கப்பட்ட வணிகர்களும் ஒப்புதலளிக்கப்பட்ட பயணமுகவர்களும் கோரிக்கையின் உண்மைத்தன்மை பற்றி அவர்களே திருப்திப்பட்ட பின்னர் அவர்களது நியாயம் மற்றும் தற்றுணிபு என்பனவற்றைப் பயன்படுத்தி, நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களின் மீது எவ்வித கட்டுப்பாடுமின்றி வெளிநாட்டுச் செலாவணியை வழங்க அனுமதிக்கப் பட்டனர். அனைத்து அதிகாரம் பெற்ற வணிகர்களும் ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்களும் அவர்களது வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் கொள்வனவுகள் தொடர்பான கிரமமான அறிக்கையினை கண்காணிப்பு நோக்கங்களுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

ஆள் ஒருவருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை ஐ.அ.டொலர் 5,000 இற்கு கூடுதலாக இருக்குமிடத்து நாளாந்தம் அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்ட வேளையில் ஆள் ஒருவருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை ஐ.அ.டொலர் 5,000 இற்கு குறைவாக இருக்குமிடத்து வாராந்த அடிப்படையில் அறிக்கையிடப்பட வேண்டும். இலத்திரனியல் நிதியமாற்றல் அட்டைகளுடாக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கும் விடயத்தினைப் பொறுத்தவரையில், அட்டையினை வழங்கிய வங்கிகள் ஆள் ஒருவருக்கு மாதமொன்றிற்கான மொத்த வெளிநாட்டுச் செலாவணிச் செலவு, ஐ.அ.டொலர் 5000 இனை விஞ்சியிருக்குமாயின் மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீது விபரமான மாதாந்த அறிக்கையினை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டன. அதிகாரமளிக்கப்படாத மூலதனமாற்றல்கள் மற்றும் பயங்கரவாத நிதியிடலுடன் அல்லது சட்டத்திற்கு மாறான பணத்தினைச் சட்டரீதியான பணமாக மாற்றும் நடவடிக்கையுடன் தொடர்பானதா என்பதனைக் கண்டறியும் நோக்குடன் வெளிநாட்டுச் செலாவணியின் விடுவிப்புக்கள் கண்காணிக்கப் படுகின்றன.

### 7.6 புலனாய்வுகள்

தனிப்பட்டவர்களினாலும், கம்பனிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்ட ஏற்பாடுகளை மீறியதான குற்றச்சாட்டுக்கள் பற்றிய புலனாய்வுகள் 2005 இல் மேற்கொள்ளப்பட்டன. புலனாய்வுகள் முடிவடைந்த பின்னர், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமை தொடர்பான 29 வழக்குகளின் மீது ரூ.29.4 மில்லியன் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட தொகையில் குற்றப்பணமாக பெறப்பட்ட ரூ.28 மில்லியன் மத்திய வங்கியில் பேணப்படும் "செலாவணிக் கட்டுப்பாட்டு தண்டப்பணக் கணக்கு" இல் வரவு வைக்கப்பட்டது. 2005 இல் அதிகார மளிக்கப்படாத வெளிநாட்டு வணிகம் இடம்பெறுவதாக கிடைக்கின்ற தகவல்களின் மீது அத்தகைய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் வியாபாரக் கட்டிடங்களில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தேடுதல்களை மேற் கொண்டதுடன் ரூ.1.6 மில்லியனுக்கு சமமான வெளிநாட்டு நாணயங்களையும் மீட்டுக்கொண்டது. அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டு நாணய வணிகத்தில் ஈடுபட்டிருந்த கட்டிடங்களின் சொந்தக் காரர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டது.

## 8. தகவல்

தகவல் திணைக்களமானது வங்கியின் மத்திய தகவல் நிலையமாக தொடர்ந்தும் தொழிற்பட்டதுடன் உள்ளேயும் வெளியேயும் தகவல்களைப் பரப்புவ தற்கும் பொறுப்பாகவிருந்த வேளையில் புகைப்பட மற்றும் கலைநய வடிவமைப்புப் பணிகளையும் வங்கிக்கு வழங்கியது. திணைக்களத்தினால் உள்ளக சுற்றோட்டத்திற்காக தொடர்ந்தும் "கவுலுவ" என்ற வங்கிச் செய்திகளுடன் கூடிய மாதாந்த சஞ்சிகை தனிச்சிறப்பு சஞ்சிகையாக வெளியிடப்படுகின்றது. இது முகாமைத்துவத்திற்கும் அலுவலர்களுக்கும் வங்கிச் செய்திகள் மற்றும் நடைமுறை விடயங்களின் அறிவித்தல்கள் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு உதவின. 2005 ஆம் ஆண்டில் 10 கவுலுவ வெளியீடுகள் வெளியிடப்பட்டன. நாளாந்தம் தகவல்கள் பூரணப்படுத்தப்பட்ட இணைய வெப்தளம் தொடர்ந்தும் ஒரு பரந்த தகவல் வீச்சினைக் கொண்டு விளங்கியது. இது வங்கி அலுவலர்களுக்கு உள்ளூர் மற்றும் பன்னாட்டு நிதியியல் செய்திகளுடனும் மற்றும் ஏனைய நடைமுறை பொருளாதார தகவல்களுடனும் கூடிய ஒரு இன்றியமையானதான இணைப்பினை வழங்குகிறது.

இத்திணைக்களமானது பொதுமக்களுக்கு பல்வேறு வழிகளில் தகவல்களைப் பரப்புகிறது. 2005 காலப்பகுதியில் நாளாந்த செலாவணி வீதங்கள், வாராந்த, மாதாந்த, பொருளாதாரக் குறிகாட்டிகள், நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான தகவல்கள் 934 பத்திரிகைச்செய்தி வெளியீடுகள், 11 வர்த்தமான அறிவித்தல்கள் மற்றும் 166 விளம்பரங்கள் என்பவற்றை வெளியிட்டு வைத்தது. பொதுமக்கள் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு திணைக்களம் பொதுமக்களை இலக்காகக் கொண்டு இலகுமொழியில் துண்டுப்பிரசுரத் தொகுதிகளையும் வெளியிடத் தொடங்கியது. இந்த தொடர்களின் கீழ் முதல் இரண்டு துண்டுப்பிரசுரங்களும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறையின் உறுதிப்பாடு என்பவை பற்றியதாகும். திணைக்களமானது வங்கியின் குறிக்கோள், பங்கு, மற்றும் தொழிற்பாடுகள் பற்றி மும்மொழிகளிலும் சிறுபிரசுரங்களையும் வெளியிட்டது. இது இவ்வாண்டில் நடைமுறைப் பொருளாதார விடயங்கள் மற்றும் அபிவிருத்தி பற்றி 8 பத்திரிகை மகாநாடுகளை நடாத்தி வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுமக்கள் விரிவுரைத் தொடர்களுக்கு ஊடக ஒருங்கிணைப் பினையும் கையாண்டது. திணைக்களம் தொடர்ந்தும் இரு மாதங்களுக்கு ஒரு தடவை "சட்டகன" மாதாந்த

வெளியீட்டில் 6 வெளியீடுகளை வெளியிட்டு வைத்ததுடன் காலாண்டு வெளியீடான செய்தி அளவீட்டில் 4 வெளியீடுகளையும் குறிப்பேடு என்ற சட்டகனவின் தமிழ் வெளியீட்டினையும் வெளியிட்டது.

மத்திய வங்கியின் குறிக்கோள் பற்றி பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அறிவூட்டும் பொருட்டு திணைக்களம், விலை மற்றும் பொருளாதார உறுதித்தன்மையைப் பேணுவதில் வங்கியின் பங்கு பற்றிய விவரணச் சித்திரமொன்றை தயாரித்துள்ளது. விவரணச் சித்திரத்தின் இரு பகுதிகள் கொண்ட தொடரின் முதலாவது பகுதி இதுவாகும். இரண்டாவது பகுதியாக நிதியியல் முறையின் உறுதிப்பாட்டினைப் பேணுவது பற்றியதாகவிருக்கும்.

இத்திணைக்களம், தமது விநியோக நடவடிக்கைகளை வங்கியின் விற்பனைப் பீடங்கள் மற்றும் நாடெங்கிலுமுள்ள புத்தகக் கடைகளின் வலையமைப்பின் ஊடாகவும் மேற்கொண்டது. முன்னைய ஆண்டினைப் போலவே திணைக்களமானது கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி 2005 இலும் தீவிரமாகப் பங்குபற்றியது. இதற்கு புறம்பாக, இது இரண்டு மகாபொல பொருட்காட்சிகள், பல்கலைக் கழகங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பொதுநிகழ்ச்சிகள், மற்றும் உலக குழந்தைகள் தினத்தினை குறிக்கும் வகையில் இடம்பெற்ற பொருட்காட்சியிலும் பங்கு பற்றியது. இந்த நடவடிக்கையில் பங்குபற்றியமையானது வங்கி வெளியீடுகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வினையும் அதிகரிக்க உதவியது.

திணைக்களமானது, பொருளாதாரம் தொடர்பான தலைப்புக்களில் ஆய்வரங்குகளையும் விரிவுரைகளையும் நடாத்துமாறு பாடசாலைகளினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை நிறைவேற்றும் வகையில் ஏனைய திணைக்களங்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டது. 2005 இல் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமென அத்தகைய 5 கல்விசார் ஆய்வரங்குகளை ஒழுங்கு செய்தது.

வங்கியின் அச்சிடும் அச்சகமானது தொடர்ந்தும் வங்கியின் அச்சிடல் தேவைப்பாடுகளை நிறைவேற்றியது. கிரமமாக அச்சக வேலைகள் ஆண்டறிக்கை, இலங்கை சமூகப் பொருளாதாரத் தரவுகள், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள், செய்தி அளவீடு, சட்டகன, கவுலுவ மற்றும் உயர் அலுவலர் ஆய்வுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டில் அச்சிடப்பட்ட சிறப்பு வெளியீடுகளாக இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் குறிக்கோள்கள் மற்றும் நிறுவன அமைப்பு பற்றிய சிறுபிரசுரம் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பற்றிய சிறுபிரசுரம் மற்றும் நுகர்வோர் நிதிய மற்றும் சமூக பொருளாதார அளவீட்டு அறிக்கை என்பன விளங்கின. இந்த அச்சிடல் வேலையுடன் சேர்த்து அச்சிடும் அச்சகம் 306 அச்சிடல் வேலைகள் மேற்கொண்டுள்ளது.

## நூலகமும் தகவல் நிலையமும்

நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும், வேண்டுதலின் பேரில் மற்றையவர்களுக்கும் நூலகப் பணிகளை தொடர்ந்தும் வழங்கியது. இது தமது புத்தக சேகரிப்புக்களை 17,194 இலிருந்து 18,784 இற்கும் அறிக்கைகளை 11,887 இலிருந்து 12,196 இற்கும் இறுவட்டுக்களை 900 இலிருந்து 965 இற்கும் அதிகரித்துக் கொண்டதுடன் இவ்வாண்டில் ஒன்று திரட்டப்பட்டு கட்டப்பட்ட 944 தொகுதிகளும் சேகரிக்கப்பட்டன. வங்கித்தொழில் கல்வி ஆய்வுநிலைய நூலகமும் அதன் சேகரிப்புக்களை 4,896 இலிருந்து 5,045 இற்கு அதிகரித்துக் கொண்டது.

பொருளாதாரம், பொருளியலளவை மற்றும் நிதி என்பன தொடர்பான 90 இற்கு மேற்பட்ட சஞ்சிகைகளை உடனடியாக அணுகத்தக்க விதத்தில் "விஞ்ஞான வழிகாட்டல்" இன் பயன்பாடு அதிகரித்தது. ஆகையால் நூலகம் சஞ்சிகைகளுக்கான சந்தாவை 195 இலிருந்து 172 ஆக குறைத்தது.

மீளாய்வுக்குரிய ஆண்டில் நூலகமும் தகவல் நிலையமும் (அதாவது புதிய நூல்கள்) தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் பட்டியல் மத்திய வங்கித் தொழில் பற்றிய செய்திகள் நியூஸ் அலேர்ட் போன்ற மின்னியல் வெளியீடுகளைத் தொடர்ந்தும் திரட்டி இணையத்தளமூடாக அவற்றைப் பரப்பின.

வங்கி அலுவலர்கள் நூலக வசதிகளை அதே நேரத்திலேயே பயன்படுத்திக் கொள்வதனை ஊக்குவிக்கும் பொருட்டு 11 திணைக்களங்களை உள்ளடக்கி பயன்படுத்துநருக்கான 12 அறிவூட்டல்களும் வங்கித்தொழில் மற்றும் நிதி வலையமைப்பு பங்குபற்றுபவர்க்காக மற்றொரு நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டன. முதன்முறையாக நூலகமும் தகவல் நிலையமும் வாசிப்பு மாதத்தில் ஒரு புத்தகக் கண்காட்சியை ஒழுங்குசெய்து புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ஏறத்தாழ 400 புதிய நூல்களை காட்சிப் படுத்தியதுடன் இந்தக் கண்காட்சிக்கு அலுவலர் களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்தது.

வங்கி அலுவலர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை புகட்டுவதற்கு என "வெற்றிக்கான வாசிப்பு" என்பது பற்றிய விரிவுரையொன்றினை நூலாக தகவல் நிலையம் ஒழுங்கு செய்தது.

## 9. தகவல் தொழில்நுட்பம்

2005 இல் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் முக்கியமாக கடந்த சில ஆண்டுகளாக அனர்த்த நிவாரண வசதிகளை வலுப்படுத்து வதன் மூலம் தமது நடவடிக்கைகளை ஒன்று திரட்டுவதன் மீதும் முக்கிய தொழிற்பாட்டு இழப்பு ஏற்படுமிடத்து மிக முக்கியமான தொழிற்பாடுகளை விரைவாக மீளத்தொடங்குவதற்குரிய தொடர்ச்சியான வியாபாரத் திட்டங்களை நிறுவுவதிலும் முக்கிய கவனத்தைச் செலுத்தியது. இதற்கு மேலாக திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப வசதிகளை விரிவுபடுத்து வதற்கும் வங்கி அலுவலர்களின் தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சியினை மேம்படுத்து வதற்குமான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டது

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகள் பின்வருமாறு.

- அ அனர்த்த நிவாரண மீட்பு வசதிகள், வியாபார தொடர்ச்சித் திட்டம் மற்றும் முகாமைத்துவம் என்பனவற்றினை வலுப்படுத்துதல்.
- ஆ. ஊழியர்களின் தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சிகளை மேம்படுத்துதல்
- இ. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துதல்.
- ஈ. உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக பயன்படுத்தும் திணைக்களங்களினால் கையாளப்படும் தொழிற்பாடுகளை மேலும் தன்னியக்கப்படுத்துதல்.
- உ. இந்த முறையின் அதிக பட்சமாக கிடைக்கும் நன்மையினை உறுதிப் படுத்துவதற்காக கொடுப்பனவு முறை, கணனி வலையமைப்பு மற்றும் ஏனைய மிக முக்கியமான பிரயோகங்களைப் பேணுதல்
- ஊ. அளவீடுகள் ஊடாக தகவல் தொழில் நுட்ப முறைகளிலுள்ள இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை மட்டுப்படுத்து வதற்கான இழப்பீட்டு முறைகளை நடைமுறைப்படுத்துதல்.

இலங்கை மத்திய வங்கி, தற்பொழுது ஒரு சிறப்பு வாய்ந்த தன்னியக்கச் சூழலில் தொழிற்படு கின்றது. தொடர்ச்சியான வியாபாரத் திட்டம், தொழிற்பாட்டு இயலளவின் நிறைவுத்தன்மை மற்றும் தொலைவிடங்களில் அனர்த்த மீட்புத் தளத்தினை நிறுவுதலின் ஊடாக இலங்கை மத்திய வங்கியானது தொழிற்பாட்டு சீர்குலைவிலிருந்தான இடர்நேர்வினை மட்டுப்படுத்தும். இதற்கமைய முறைகளை கண்டறியவதனை அவசிய மாக்கியது. அனர்த்த மீட்பு தலத்திலிருந்தான தொடர்ச்சியான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக ஒரு தொடர்ச்சியான வியாபாரத் திட்டமானது சாத்தியமான எதிர்பாராத சம்பவங்களையும் மீட்பு நடவடிக்கைகளையும் அடையாளம் காணப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது. மிக அவசியமானது என அடையாளம் காணப்பட்ட செயல்முறைகளை மீளத்தொடங்குவதற்கு அவசியமாகத் தேவைப்படும் நாற்பது அலுவலர்களுக்குத் தேவையான தளபாடங்கள் கணனிகள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பன வழங்கப்பட்டன.

இவ்வாண்டில் இலங்கை மத்திய வங்கியின் தற்செயலான அலுவலர்களின் பங்கேற்புடன் வர்த்தக வங்கிகள் முதன்மை வணிகர்கள் போன்றவர்களின் பங்கேற்பாளர்களுடனும் மற்றும் பன்னாட்டு கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களில் பங்கு பற்றும் ஏனைய இணைக்கிணையாளர்களுடனும் பலவிதமான மாதிரிப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அனர்த்த மீட்புத் தளத்திலிருந்தான மாதிரி அடையாள தொழிற்பாடுகள் எதிர்பாராச் சம்பவங்களை கையாள்வதற்கும் முகாமைப்படுத்துவ தற்குமான பயிற்சியை வழங்குவதன் மூலம் எதிர்பாரா அலுவலர்கள் அனர்த்த மீட்புத் தளத்திலுள்ள வசதிகளுடன் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வதனை உறுதி செய்தது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது மத்திய வங்கியினதும் மற்றும் ஏனைய அரச அமைப்புக்களினதும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான கொள்வனவுகள் மற்றும் பணிகள் போன்றவற்றிற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின்றது. மீளாய்வின் கீழான ஆண்டில் இம் முறைமைகளின் நம்பத்தகு தன்மையை வலுப்படுத்தும் வகையில் உட்கட்டமைப்பிற்கு பின்வரும் அதிகரிப்புக்கள் செய்யப்பட்டன.

(அ) இயலளவின் விரிவடைந்துவரும் கேள்வியை ஈடுசெய்வதற்காகவும் அனர்த்த மீட்புத் தலத்திலிருந்து

வியாபாரத்தினை மீளத் தொடங்குவதற்கான வசதிகளையளிப்பதற்காகவும் மத்திய வங்கியின் பிரதான அலுவலகத்திலும் அனர்த்த மீட்பு தலத்திலுமுள்ள ஐ.தொடர் ஏஎஸ்/400 கணனி முறைகள் தரமுயர்த்தப்பட்டன.

(ஆ) இணையத் தளத்திலிருந்து அதிகாரமளிக்கப்படாதவர்கள் தகவல்களைப் பெறுவதற்கும், வெளிச்செல்வதற்குமான தடைகளை நிறுவியமை.

(இ) எஸ்கியூ.எல்/ வெப்தள சேமிப்புக் கருவிகளை நிறுவியமை.

(ஈ) வெப்தள பிரயோகப் பாதுகாப்பிற்காக மத்திய வங்கி அதிகாரமளிப்பு முறை (இலக்க சான்றுபடுத்தல்) நடைமுறைப் படுத்தப்பட்டமை.

(உ) அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் வர்த்தகப்படுத்தல் முறை மென்பொருளை சிஏஎஸ 3.3 இலிருந்து கூடியளவு பயன்படுத்துநர் சிநேக முறைப்பண்புகளைக் கொண்ட சிஏஎஸ் 2.68 இற்கு தரமுயர்த்துதல்.

(ஊ) பயன்படுத்துநரின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்துவதற்காகவும் வெப் தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பிரயோகங்களின் அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்காகவும் இணையத்தள வழிகளின் இயலளவு 256 எம்பீபி களிலிருந்து 512 எம்பீபி களுக்கு விரிவாக்கப்பட்டது.

(எ) எதிர்பாரா நிகழ்வுகளின் போது அனர்த்த மீட்பு தலத்துடன் தன்னியக்கமாக இணைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அகன்ற பரப்பு வலையமைப்பு இணைப்பானது ஐபிவீபிஎன் எனும் தொழில் நுட்பத்திற்கு மாற்றப்பட்டது.

மத்திய வங்கியின் வலையமைப்பு தற்பொழுது 1000 இற்கு மேற்பட்ட கணனிகள் வலையமைப்புடன் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கும் தன்மையைக் கொண்டிருக்கிறது. இத்தகைய வலையமைப்புச் சூழலொன்றில் அலுவலகத் தன்னியக்கத்திற்கு வசதியளிப்பதற்காகவும் தகவல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் ஏறத்தாழ 900 மின்அஞ்சல் முகவர்களும் 300 இணையத்தள இணைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான நடைமுறைகளை நடத்துவதற்கு மூலவள ஆட்களை வழங்குகின்றமையினூடாக ஊழியர்களின் தகவல் தொழில்நுட்பத்தினை தொடர்ந்தும் உயர்த்தி வந்தது. திணைக்கள தொடர்பு அலுவலர்களுக்கு மேம்பட்ட பாதுகாப்பு பண்புகள் தொடர்பாக அறிவூட்டுவதற்காகவும் கணனிகளை நல்லமுறையில் பயன்படுத்தும் முறை பற்றி வழிகாட்டல்களை வழங்குவதற்காகவும் அவர்களுடன் கிரமமாகக் கூட்டங்களை நடாத்தப்பட்டன. 2005 இல் வங்கியின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கொள்கை வழிகாட்டல்கள் தொடர்பாக அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்காக பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் முக்கியமான பொறுப்புக்களில் ஒன்றாக கொடுக்கல்வாங்கல்களை அதேநேரத்தில் தீர்க்கப்படுவது உச்ச மட்டத்தில் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை, திறைசேரி வணிகப்படுத்தல் அறை முகாமைத்துவ முறை மற்றும் பொதுப்பேரேட்டு முறை ஆகிய கொடுப்பனவு முறைகளைப் பேணுவது காணப்பட்டது. 2005 திசெம்பர் 31 இல் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் கொடுப்பனவு முறையில் 99.40 சதவீதத்தினை சரியான நேரத்தில் மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை/ ப.பி.தீ.முறை என்பனவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட பிரயோக மென்கலம் சிஏஎஸ் 2.68 இலிருந்து சிஏஎஸ் 3.3 இற்கு தரமுயர்த்தப்பட்டது. இது பண்புகளை உயர்த்தியதுடன் சுவிப்ற் முறையினை தரமுயர்த்தவும் இது அவசியமாயிருந்தது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் கொடுப்பனவு முறைகளின் சமூகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் விதத்தில் முறையினைப் பேணுகின்ற மென்பொருள் வழங்குநர்களுடனான பொதுவான தொடர்புகளுக்கு பொறுப்பாக இருந்தது.

கொள்கை ரீதியாக தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் இலகுவாகப் பேணுவதற்கு சாத்தியமான எந்த நேரத்திலும் வெப்தள சூழலில் அனைத்து எதிர்கால பிரயோகங்களையும் அபிவிருத்தி செய்ய தீர்மானித்தது. தொடக்க செயற்றிட்டமாக, வங்கி

மேற்பார்வைத் திணைக்களத்திற்காக, வர்த்தக வங்கிகளிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்காக மத்திய தரவுத்தள முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்முறை வங்கியல்லா மேற்பார்வைத் திணைக்களத்திற்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கும் விரிவுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அரச பிணையங்களின் பயன்பெறும் கொள்ளத்தக்க இலகுவாக அடைவதனை வசதிப்படுத்து முகமாக மத்திய வைப்பக முறையிலுள்ள அத்தகைய பிணையங்களின் அனைத்து அசைவுகளின் மீதுமான தகவல்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் பொருட்டு வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட முறையொன்று விருத்தி செய்யப்பட்டது.

மேலும், மத்திய வங்கியின் தொழிற்பாடுகளைத் தன்னியக்கப்படுத்தும் விதத்தில் பல மென்கலப் பிரயோகங்களை அபிவிருத்தி செய்கின்ற செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை பின்வருமாறு.

(அ) வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவு முறை;

(ஆ) டொலர் முறி வழங்கல் முறை;

(இ) நிலவறைகளுக்கிடையில் நாணயம் அசைவினைப் பதிவு செய்வதற்கான முறை;

(ஈ) ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறை

(உ) அரச திறைசேரி உண்டியல்/முறிகளைத் தன்னியக்கப்படுத்தும் முறை;

(ஊ) சிற்றுண்டிச் சாலைக்கான களஞ்சிய முகாமைத்துவ முறை;

(எ) உடன்படிக்கைகள் மற்றும் கொடுப்பனவுகளின் பேணலைக் கண்காணிக்கும் முறை.

மேலும், வங்கியில் உருவாக்கப்பட்ட அனைத்துப் பிரயோகங்களையும் மத்திய வங்கியிலுள்ள தொழிற்பாடுகளையும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் பேணியது. மத்திய வங்கியின் முக்கிய தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களிலொன்றான ஊ.சே.நிதிய முறையும் பேணப்பட்டதுடன் முறைக்கு தேவையான மென்பொருள் நவீனமயப்படுத்தலும் அவற்றினை உயர்த்துவதும் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக் கொள்கையும் அனைத்துக் கொடுப்பனவு முறைகளுக்குமான தொடர்ச்சியான வியாபாரத் திட்டமும் ஆய்விற்குரிய ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன. மாற்றமடைந்து வருகின்ற சூழலின் தேவைகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் ஆவணங்கள் மேலும் பூர்த்தி செய்யப்பட்டதுடன் நாணயச் சபையினால் ஒப்புதலும் வழங்கப்பட்டது. 2005 இல் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உபாயத் திட்டமும் நடைமுறைக் கைநூலும் கூட தயாரிக்கப்பட்டன.

இடர்நேர்வுகளை அடையாளம் காண்பது மற்றும் பகுப்பாய்வு செய்வது தொடர்பாக தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அலுவலர்களுக்கு அறிவூட்டுவதன் மூலம் பாதுகாப்பு அச்சுறுத்தலைத் தணிப்பதற்காக வெளிநாட்டிலிருந்து நிபுணத்துவ உதவி பெறப்பட்டது. வலுப்படுத்தப்பட வேண்டிய துறைகளை அடையாளம் காணும் பொருட்டு தகவல் தொழில்நுட்ப முறைப் பாதுகாப்பின் மீது அளவீடொன்று நடத்தப்பட்டது.

## 10. பன்னாட்டு தொழிற்பாடுகள்

### 10.1 வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதித் தன்மையினைப் பேணுவதற்கு வசதியளிப்பதற்காகவும் பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களில் சாத்தியமானளவிற்கு பெருமளவு சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் நாட்டின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகளை முகாமை செய்கின்றது. பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளின் மூலம் போதுமான வருவாயினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளின் திரவத் தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றினை உறுதிப்படுத்துகின்றது. மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை அடையும் பொருட்டு மத்திய வங்கியானது, போதுமானளவு பன்னாட்டு ஒதுக்குகளை திரவ நாணயங்களிலும் முக்கியமான ஒதுக்குகளை தங்கத்திலும் பேண வேண்டுமென 1949 ஆம் ஆண்டில் 58 ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் தேவைப்படுத்தப்படுகின்றது.

நாட்டின் அலுவல்சார் நாட்டிற்கான வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் நாட்டிற்கான உயர் தரமிடப்பட்ட அரச பிணையங்கள், அரச உத்தர

வாதப்படுத்தப்பட்ட பிணையங்கள், அரச பிணையங்கள், அரச முகவர்களின் பிணையங்கள் மற்றும் உயர் தேசிய நிறுவனங்கள் என்பனவற்றில் செய்யப்பட்டுள்ளன. திரவத் தன்மை தேவைகளானவை நிலையான திரவ வருமானங்களின் சொத்துப்பட்டியலிலும் வேறுபட்ட நாணயங்களின் பணச்சந்தை சொத்துப் பட்டியலிலும் போதுமான அளவு ஒதுக்குகளை பேணுவதனூடாக பூர்த்தி செய்யப்படுகின்றது. பணச்சந்தை மற்றும் நிலையான வருமான பிணையங்கள் ஆகிய இரண்டினதும் கொடுக்கல் வாங்கல்கள் உயர்தரமிடப்பட்ட இணைக்கிணையாளர்களினூடாக மேற்கொள்ளப்பட்டது. 2005 இல் மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு சொத்துக்கள் பேணப்பட்ட முக்கிய நாணயங்களாக ஐ.அ.டொலர்கள், யூரோக்கள், இசுடேர்லிங் பவுண்ஸ், அவுஸ்திரேலியன் டொலர்கள் மற்றும் தங்கம் என்பன விளங்கின.

வெளிநாட்டு ஒதுக்குகளின் முதலீடுகள் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ செயற்குழுவினால் உருவாக்கப்பட்ட வழிகாட்டலுக்கு இசைவாகவும், நாணயச்சபையின் அங்கீகாரத்துடனும் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. முதலீட்டு நடவடிக்கைகளின் போக்கானது வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முன்வரைவிலக்கணம் செய்யப்பட்ட அடித்தள அளவுக் குறிக்கு எதிராக அளவிடப்பட்டன. மேலும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ செயற்குழுவானது சொத்துக்களின் உள்ளமைப்பு, முன் வரைவிலக்கணம் செய்யப்பட்ட அடித்தள அளவுக் குறியினூடாக இடர்நேர்வு தவிர்ப்பு தொடர்பாடல் மற்றும் ஒதுக்கு முகாமைத்துவ செயற்பாடுகளின் ஒட்டுமொத்த செயற்பாடு என்பவற்றை கிரமமாக மீளாய்வு செய்கின்றது.

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது பொருளாதார அடிப்படைகளின் மாற்றங்கள் மற்றும் பன்னாட்டு நிதியியல் நிலையங்களின் புவிசார் அரசியல் நிலைமைகள் முக்கிய நாணயங்கள் மற்றும் வட்டிவீத சூழல் என்பவற்றை மீளாய்வு செய்ததன் பின்னர் காலத்துக்குக்காலம் பணம் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளின் சொத்து திரட்டுக்கள் என்பவற்றில் தேவையான மாற்றங்களை செய்தது. அனைத்து முதலீடுகளும் நாணயச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பிற்குள் அனுமதியளிக்கப்பட்ட இணைக்கிணை யாளர்களினூடாக குறிப்பிட்ட சொத்துக்களின் பாதுகாப்பு, திரவத்தன்மை, சொத்துக்களின் மீதான வருமானம் என்பவற்றின் மீதுகவனம் செலுத்துவதனூடா மேற்கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டு செலாவணி ஒதுக்கின் சொத்துப் பட்டியல் உள்ளமைப்பினை தீர்மானிப்பதில் வங்கியின் படுகடன் பணிக்கொடுப்பனவு தேவைப்பாடுகள் மற்றும் வருமானம் உருவாக்கும் இயலுமைகள் என்பனவும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. பட்டியல் பெறுமதியை பாதுகாப்பதற்கும் வட்டிவீத தளம்பல்களினால் கிரமமாக ஏற்படும் சந்தை இடர்நேர்வுத் தாக்கத்தினை குறைப்பதற்கும் பொருத்தமான சொத்துப்பட்டியல் சீராக்கங்கள் மேறகொள்ளப்பட்டன. 2005 இல் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளினூடாக உருவாக்கப்பட்ட மொத்த தேறிய வெளிநாட்டு வருமானம் ஐ.அ.டொலர்கள் 77.0 மில்லியனாக அல்லது இலங்கை ரூபாயில் 7603 மில்லியனாக காணப்பட்டது. இது ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளிலிருந்தான வரவு செலவுத் திட்ட வருமானமாக ஐ.அ.டொலர்கள் 73.1 மில்லியனுக்கும் கூடுதலானதாக இருந்ததுடன் அதிகரித்த வட்டிவீத சூழலினால் இது எய்தப்பட்டதுடன் இச்சூழலில் கடந்தகால முதலீடுகள் குறைந்த வருவாயினையே பெற்றுக்கொண்டன.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது இலத்திரனியல் வர்த்தக பேரம் பேச்சுக்களையும் செய்முறைத் தொழிற்பாடுகளையும் பூரணமாக வசப்படுத்திக் கொள்ள முயற்சித்ததுடன் இடர்நேர்வு முன்னுரிமை மற்றும் முதலீட்டு இலக்கு என்பவற்றுடன் மிகச்சரியான ஒதுக்கு முகாமைத்துவ செயற்பாடு என்பவற்றின் சிறந்த தொடர்பாடலுக்காக சர்வதேச அடித்தள அளவுக்குறியினை மீள்வரைவிலக்கணப் படுத்தும் நடைமுறையை பூரணப் படுத்தியது.

### 10.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன ஒதுக்கு முகாமைத்துவத்துடன் இணைந்துள்ள பிரதான இடர்நேர்வுகளாகும். பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடுஅலுவலகம் வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர் நேர்வினை கண்காணிக்கின்றது.

வெளிநாட்டுச் செலாவணி இடர் நேர்வானது செலாவணி வீதங்களின் தளம்பல்களின் விளைவாக மூலதன இழப்புக்களை ஏற்படுத்தும் இடர்நேர்வாகும். வங்கியானது பல்வேறு நாணயங்களுக் கிடையிலான அதன் வெளிநாட்டுச்

செலாவணி ஒதுக்கு சொத்துடமைகளை பன்முகப்படுத்தி அமைப்பதன் மூலம் செலாவணிவீத இடர்பாடுகளினை முகாமைப்படுத்தியது. சொத்துப்பட்டியலின் நாணயப் பங்கீடு இலக்கிடப்பட்ட வெளிப்பாடுகளுக்கேற்ப மீளாய்வு செய்யப்பட்டு காலத்திற்குக் காலம் சீராக்கப் படுகிறது. வட்டிவீத இடர்நேர்வு அல்லது வட்டிவீத அசைவுகளுக்கேற்ப வங்கியின் முதலீடுகளின் வெளிப்படுத்துகையானது பல்வேறு நாணய பிரிவுகளின் மட்டங்களிலுள்ள சொத்துப்பட்டியல் மட்டங்களிலும் உள்ளகரீதியில் அடித்தள அளவுக் குறியீட்டிற்கெதிராகவும் மதிப்பிடப்பட்டது. உள்ளக அடித்தள அளவுக் குறியிலிருந்து வேறுபடும் முதலீட்டு சொத்துப்பட்டியல் காலத்துக்குக்காலம் மதிப்பிடப்படுவதுடன் ஒப்புதலளிக்கப்பட்ட மட்டங்களுக்கெதிராகவும் ஒப்பிடப்படுகின்றது.

கொடுகடன் இடர்நேர்வானது, நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கிணை யாளர்களின் இடர்நேர்வு முகாமைத்துவ நிபந்தனைகள் மற்றும் ஏனைய காரணிகளான தனிநபர் அமைப்புக்களின் கொடுகடன் நம்பகத் தன்மை மற்றும் சுதந்திர தரப்படுத்தும் முகவர்களினால் தரப்படுத்தப்பட்ட கொடுகடன் தரப்படுத்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் தகைமை சார்ந்த தேவைப்பாடுகளை ஏற்படுத்துதல், வெளிப் படுத்துகைகளை உயர்தர கருவிகளுக்கு மட்டுப்படுத்துதல், வழங்குநர்களுக்கும், இணைக் கிணையாளர்களுக்கும், நிதியியல் கருவிகளுக்கும் தனிப்பட்ட ரீதியாக கொடுகடன் இடர்நேர்வு வரை யறைகளை வழங்குதல் என்பவற்றினூடாக முகாமை செய்கின்றது. திரவத்தன்மை இடர்நேர்வு என்பது வங்கி நட்டத்திற்குள்ளாதல் அல்லது நிர்ணயிக்கப்பட்டதனை விட கணிசமான உயர்செலவின் காரணமாக குறிப்பிட்ட நேரத்தில் கொடுப்பனவுகளை பொறுப்புடன் மேற்கொள்ள முடியாது போதல் போன்ற இடர்நேர்வுகளை குறிக்கும். பன்னாட்டு ஒதுக்குகளில் பெரும்பகுதியான குறுங்கால முதிர்ச்சிகளுடன் கூடிய உயர் திரவத் தன்மையினைக் கொண்ட நிதியியல் கருவிகளில் முதலீடு செய்வதன் மூலம் திரவத்தன்மை இடர்நேர்வினை குறைக்கலாம்.

மனித தவறுகள், முறைகளிலான தவறுகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதுமானளவில் இல்லாமை என்பவற்றின் காரணமாக தோன்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வானது பல்வேறுபட்ட வழிமுறைகளினால் முகாமை செய்யப்படுகின்றது. அதாவது கொடுக்கல் வாங்கல் செயல்முறைகளின் பல்வேறு தொழிற்பாடுகளையும் ஒன்றிணைத்து கண்காணித்தல், வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தல், தொழிற்பாட்டுப் பொறுப்பினைக் கொண்ட தீர்மானங்களை மேற்கொள்ளும் குழுவினை கொண்டிருத்தல், வணிகப்பேச்சு தொழிற்பாடுகளுள் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தல் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயன்முறைகளை வலுப்படுத்தல் என்பனவை சாத்தியமான முறைமை தவறுகள் மற்றும் தோல்விகளின் தாக்கங்கள் என்பவற்றை குறைக்கும் முகமாக, குறிப்பிட்ட கட்டுப்பாடு மற்றும் நடைமுறை உள்ளடங்கலான ஒதுக்கு முகாமைத்துவ செயற்பாடுகள் மீதான பூரண வழிகாட்டல்களுடன் தன்னியக்கப்பட்டதும், கைகளினால் மேற்கொள்ளப்பட்டதுமான பின்னரங்க நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

2005 சனவரி முதல் மத்திய வங்கி மற்றும் இணைக்கிணையாளர்கள் இடையில் ஏற்படக்கூடிய தொழிற் பாட்டு இடர்நேர்வினாலான முரண்பாடுகளைக் குறைக்கும் நோக்குடன் வர்த்தக பேரம்பேச்சுக்களை பதிவு செய்யக்கூடிய ஒலிப்பதிவு முறைமை பொருத்தப்பட்டது.

### 10.3 உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை அபிவிருத்திகளைக் கண்காணித்தல்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகவும் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுச் செலாவணி வீதத்தினை ஒழுங்கான முறையில் சீராக்குவதற்காகவும் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது 2005 காலப்பகுதியில் உள்நாட்டின் வெளிநாட்டு சந்தையிலான நிகழ்வுகள் மற்றும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவு தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமை என்பவற்றை மிக நெருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் கண்காணிக்கின்றது.

31.12.2005 இல் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு இலங்கை ரூபா 31.12.2004 இல் காணப் பட்ட மட்டமான ரூ.104.61 உடன் ஒப்பிடுகையில் 102.12 ஆக விளங்கி 2.37 சதவீதமான உயர்ச்சியினை எடுத்துக்காட்டியது. பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட மற்றைய முக்கிய நாணயங்களின் சார்பளவிலான பெறுமான தேய்வுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அந்நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா உயர்ச்சியடைந்தது. வங்கிகளுக் கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2004 இல் ஐ.அ.டொலர்கள் 4279 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2005 இல் ஐ.அ.டொலர்கள் 7245 மில்லியனுக்கு 69 சதவீதத்தால்

(ஐ.அ.டொலர்கள் 2966 மில்லியன்) அதிகரித்திருக்கின்றது. இலங்கை ரூபாவின் செலாவணி விகிதத்தை அளவுக்கதிகமாக தளம்பலுறாது நிலைப்படுத்த மத்திய வங்கியானது சந்தையின் இரண்டு பக்கங்களிலும் செயற்பட்டது. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளிடமிருந்தான மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான வெளிநாட்டு செலாவணி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் சந்தை விலையில் முறையே ஐ.அ.டொலர்கள் 290 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர்கள் 464 மில்லியன்களாகவே இருந்தது.

திணைக்களமானது பல்வேறு நாணயங்களின் மீதான இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்களை குறித்துக்காட்டும் முறையினை அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் தொடர்பான ஏனைய தரப்பினருக்கு இவ்வாண்டு காலப்பகுதியிலும் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றன.

### 10.4. 2005 இல் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகள்

உருவாக்கம் பெற்றுவரும் பெறுதிச் சந்தையினை முறையான ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பொன்றின் கீழ் கொண்டுவரும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணியிலான நிதியியல் பெறுதிச் சாதனங்கள் பற்றி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு இவ்வாண்டு காலத்தில் புதிய பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. இப்பணிப்புரைகள் உள்நாட்டு நிதியியல் சந்தையினைப் பன்முகப்படுத்த உதவும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் மேலும் அகலமும் ஆழமுமாக்கப்படுகின்றது. இப்பணிப்புரையானது இந்நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகள் இலங்கை ரூபாவில் தொடர்புபடாத விதத்தில் அடையாளம் காணப்பட்ட பெறுதிச் சாதனங்களான வட்டிவீத ஒன்றுக்கொன்று பரிமாற்றம் வட்டிவீத விருப்பத்தேர்வு, இலங்கை ரூபா அல்லாத விருப்பத்தேர்வு, குறுக்கு நாணய ஒன்றுக்கொன்று பரிமாற்றம் என்பனவற்றில் ஈடுபட அனுமதிக்கப்பட்டதுடன் பண்ட விருப்பத்தேர்வு தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திகளுக்கும் பெறுமதிமிக்க உலோகங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டது.

## 11. சட்டம்

2005 இல் வங்கியின் சட்டத் திணைக்களம் சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரைகளை வழங்குதல் நீதிமன்றங்களிலும் மற்றைய சட்ட மன்றங்களிலும் வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தல் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் துறைகளின் சட்ட மறுசீரமைப்பிற்கான பங்களிப்பு போன்ற அதன் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

இவ்வாண்டில் சட்ட திணைக்களமானது நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்பினை மீளாய்வு செய்யும் முயற்சியினை தொடர்ந்தும் மேற்கொண்ட வேளையில் நிதியியல் முறையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதி ஏற்படுத்தும் வகையில் புதிய சட்டவிதியினை அறிமுகப்படுத்தியது. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட விதியில் காணப்படும் பல நிச்சயமற்ற தன்மைகளையும் இடைவெளிகளையும் கட்டுப்படுத்தவும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடுகளை விரிவுபடுத்தவும் 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம் இல.2 2005 பெப்புருவரியில் நிறைவேற்றப் பட்டது. இந்தத் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க ஏற்பாடுகளாக பணிப்பாளர்களுக்கான "சரியான மற்றும் பொருத்தமான" வழிகாட்டிகள், உரிமம் பெற்ற வங்கிகளின் சொத்துரிமை செறிவுத் தன்மையினை குறைப்பதற்கான ஏற்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் ஆளுகைகளின் தோற்றத்தினை வலுப்படுத்தல் என்பன காணப்பட்டன. இந்த திருத்தங்களுடன் "வைப்பு" என்பதன் கருத்துவிளக்கம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன் இதன் மூலம் வைப்பாளர்களின் பாதுகாப்பு செயற்பரப்பும் வலுவாக்கப்பட்டுள்ளது. இவ்வகைத் திருத்தங்கள் இலங்கையின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணிப் பாதுகாப்பதற்கு குறிப்பிடத்தக்க பங்கினை வகித்து வருகின்றன.

2005 ஆம் ஆண்டின் மற்றுமொரு முக்கிய அபிவிருத்தியாக கொடுப்பனவு தீர்ப்பனவு சட்ட விதியின் ஆக்கம் விளங்கியதுடன், சட்ட கட்டமைப்பானது, ஆளுகை கொடுப்பனவுப் பணிகளை வினைத்திறன் மிக்கதாகவும் நம்பகமான தொழிற்பாட்டு கொடுப்பனவு முறையினை வலுவுடையதாக்கி நிதியியல் முறையின் ஆற்றலிற்கும் சுமூகமான தொழிற்பாட்டிற்கும் உதவும். இது கொடுப்பனவு, தீர்ப்பனவு மற்றும் தீர்வு முறைகள், நாணயப் பணிகளை வழங்குபவர்களுக்கும் இலத்திரனியல் முறையில் காசோலைகளை சமர்ப்பித்தல் என்பனவற்றிற்குமான ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கான ஏற்பாடுகளையும் கொண்டிருந்தன.

ஏனைய விடயங்களுடன் நிதிக்குத்தகை சட்டவிதி திருத்தப்பட்டதன் மூலம் குத்தகைக்

கம்பனிகள் தமது சொத்துப்பட்டியலினை பிணையப்படுத்துவதற்கு இயலக்கூடியனவாக இருந்தன. இதன் மூலம் நிதிக்குத்தகைக் கம்பனிகளுக்கு தமது தொழிற்படும் மூலதனத் தேவையினை நிதியிடுவதனை இயலச் செய்ததன் மூலம் அவற்றின் திரவத் தன்மையின் குறைபாடுகளை நீக்குவதற்கு வழிவகுத்தது. எனினும் பிணைய மயப்படுத்தல் தொடர்பான பரந்த விடயங்களும் பொதுவாக இந்த விவகாரங்களில் மிகவும் தாராளமான ஒரு சட்டவிதியினை அறிமுகப்படுத்தும் நோக்குடன் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

சட்டத் திணைக்களம், வங்கியின் ஏனைய பல திணைக்களங்களுடனும் வெளியிலுள்ள அரச முகவர்களுடனும் சட்டத்திற்கு முரணான பணத்தினை சட்டபூர்வமாக மாற்றுதல் மற்றும் பயங்கர வாதத்திற்கு நிதியிடுதல் போன்றவற்றைத் தடுப்பதற்கு ஒரு சட்ட விதியினைத் தயாரிப்பதற்கு நெருக்கமாக பணியாற்றி வருகின்றது. இலங்கை சட்டத்துக்கு முரணான பணத்தினை சட்டபூர்வமாக மாற்றுதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி சேகரித்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் உலக ரீதியான முயற்சியில் இணைந்து 2005 மத்தியில் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்கும் ஒப்பந்தங்களை நிறைவேற்றியது. சட்டத்துக்கு முரணான பணத்தை சட்டபூர்வமாக மாற்றுதல் மற்றும் பணக்கொடுக்கல் வாங்கல்களை அறிவித்தல் என்பனவற்றை தடை செய்யும் மசோதா 2005 இல் சட்டவாக்கத்திற்கென சமர்ப்பிக்கப்பட்டு 2006 சனவரியில் நிறைவேற்றப்பட்டது.

## 12. முகாமைத்துவ கணக்காய்வு

2005 ஆம் ஆண்டில் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் அதனது இடர்நேர்வு சுதந்திரமான கணக்காய்வினை தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் பெறுமதி கூட்டல்களுக்கான ஆலோசனைகளை வழங்கி வங்கியின் தொழிற்பாடுகளினதும், கட்டுப்பாட்டு முறைமைகளினதும், செயற்றிறனை முன்னேற்றுவதற்கும் அதன் மூலம் அதன் உபாயக் குறிக்கோள்களை எய்துவதற்கும் காத்திரமான முறையில் உதவிபுரிந்தது.

நாணயச்சபையின் கணக்காய்வுக் குழுவும் மத்திய வங்கியின் வருடாந்த கணக்காய்வுத் திட்டம், கணக்காய்வுச் செய்முறை, மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் தொடர்பான நிதியியல் அறிக்கையிடல் நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் என்பவற்றினை மேற்பார்வை செய்து அதன் பங்களிப்பினைச் செயற்படுத்தியது. முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் கணக்காய்வுக் குழுவின் செயலகமாக செயற்பட்டது.

கணக்காய்வுப் பட்டயத்திற்கு இணங்க 2005 இற்கான வருடாந்த கணக்காய்வு திட்டம் ஒரு இடர்நேர்வு அடிப்படையிலான கணக்காய்வு அணுகுமுறையில் தயாரிக்கப்பட்டது. திட்டமிட்டபடி உள்ளகக் கடப்பாடுகளின் கிடைக்கும் தன்மைகளை மீளாய்வு செய்வதற்காக பல கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் வலுவான இடர் நேர்விலிருந்து வங்கியினைப் பாதுகாக்கும் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வேளையில் நிறுவப்பட்ட உள்ளக கடப்பாடுகள் திட்டமிட்டபடி செயற்படுவதை சரி பார்ப்பதற்கான இணங்குவிப்பு கணக்காய்வு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. முன்னைய ஆண்டினைப் போலவே, கணக்காய்வு விதந்துரைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்வதற்கு பின்தொடர் கணக்காய்வு மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் வங்கியின் கட்டுப்பாட்டு நடவடிக்கை பற்றிய செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பிடத்தக்க பிரச்சனைகளை அறிவித்துள்ளதுடன், வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் தன்மை மற்றும் பெறுபேறுகள் பற்றிய தகவல்களை காலத்திற்குக்காலம் முகாமைத்துவத் திற்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் அறிவித்துள்ளது.

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கணக்காய்வு நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் சம்பளப் பட்டியல் முறை (ஏர்னஸ்ட் அன்ட் யங்) இன் வெளி மூலங்களுடன் இலங்கை மத்திய வங்கியின் காப்புறுதிக் கொள்கைகளின் மீளாய்வு, பொதுவான பேணல் நடவடிக்கைகளுக்கான பொருட்களின் கொள்வனவு அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறை பிரதேச அலுவலகங்களினது நடவடிக்கைகளின் மீளாய்வு, வாடகை ஊர்திப் பயன்பாடு பற்றிய பகுப்பாய்வுகள், எரிபொருள் நுகர்வு மற்றும் வங்கி ஊர்திகளின் திருத்த வேலைக்கான செலவு, சிறிய நடுத்தர உதவிச் செயற்றிட்டம், மத்திய நாட்டு நீண்டகால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம், வேளாண்மை புனரமைப்புச் செயற்றிட்டம் மற்றும் சிறிய நடுத்தர கைத்தொழில் iv செயற்றிட்டம் ஆகிய திட்டங்களின் கொடுகடன் உத்தரவாத திட்டங்களின் கீழான கோரல் தீர்ப்பனவுகள் செலவினப் பகுப்பாய்வுகள், நாணய நிலவறையிலுள்ள இருப்புக்கள் பற்றிய பௌதீக ரீதியான பரிசீலனை பிரதேச அலுவலகங்களின் பண்டகசாலை மற்றும் பொறியியல் பண்டகசாலைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

2005 ஆண்டில் இத்திணைக்களமானது இடர்நேர்வினை மதிப்பீடு செய்வதற்கான குழுவின் வழிகாட்டலின் கீழ் வங்கி முழுவதற்குமான இடர்நேர்வு முகாமைத்துவ திட்ட கட்டமைப்பினை வடிவமைத்து நடைமுறைப் படுத்துவதனை தொடங்கி வைத்தது. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களமானது அனைத்து திணைக்களங்களுக்குமான இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான விதிமுறைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது. வங்கி முழுவதற்குமான இடர்நேர்வினை கண்காணிக்கும் நோக்குடன் திணைக்களங்களினால் அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அனைத்து திணைக்களங்களிலும் மென்பொருள் அபிவிருத்தி செய்யப்பட்டு நிறுவப்பட்டது. முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் முயற்சி மற்றும் வழிகாட்டலின் கீழ் திணைக்களம் தொழிற்பாட்டு கைநூலை திரட்டும் செய்முறையினை 2005 இல் நிறைவு செய்தது.

உள்ளக மற்றும் கணக்காய்வு முகாமைத் துவத்தின் தொழில்சார் நிபுணத்துவத்தை கட்டியெழுப்பும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவில் அமைந்துள்ள உள்ளக கணக்காய்வாளர் நிறுவனம் தமது பரீட்சைகளை இலங்கையிலும் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டன. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் உள்ளக கணக்காய்வு நிறுவனத்தின் இலங்கையில் கிளையுடன் இந்த துறையினை உயர்த்துவதற்கு தீவிரமாக ஒத்துழைத்ததுடன், இதற்கேற்ப வங்கியானது ஆட்சி பீடத்திலும், கல்விசார் சபையிலும் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுள்ளது.

## 13. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

ஆற்றல் வாய்ந்த, உறுதியான, வினைத்திறன் மிக்க நிதியியல் முறையொன்றினை மேம்படுத்துவ தென்ற மத்திய வங்கியின் குறிக்கோளினை நிறைவேற்றுகின்றமையின் ஒரு பகுதியாக, 2005 இல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் நடவடிக்கையில் கொடுப்பனவு முறை மேற பார்வையினை வலுப்படுத்தல், சட்டக் கட்டமைப்பு மற்றும் தொடர்ச்சியான வியாபார திட்டமிடல் என்பனவற்றிற்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பின் முதுகெலும்பாக விளங்கும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினை தொழிற படுத்தியது; மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ தொழிற்பாடுகள் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பாக செய்முறைப்படுத்தும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை மேற்கொண்டது; மத்திய வங்கியின் சுவிப்ற் தொடர்பூட்டல்களைக் கையாண்டது; மத்திய வங்கியின் சொந்தக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு நுழைவாயிலொன்றினைத் தொழிற்படுத்தியது; அத்துடன் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொண்டது.

### 13.1 அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் தொழிற்பாடு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் தொழிற்பாட்டுப் பிரிவு தொடர்ந்தும் இம்முறையினைத் தொழிற்படுத்தியதுடன் பங்கேற்பாளர்களுக்கு உதவிப்பீடம் பணிகளையும் வழங்கியது. 2005 ஆம் ஆண்டில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூ.17,543 பில்லியன்களாக விளங்கியது. இது இலங்கையின் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்க ஏறத்தாழ 7 மடங்கு அதிகமானதாகும். 2005 இல் நாளாந்த சராசரி அளவும் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியும் முறையே 629 ஆகவும் ரூ.74 பில்லியனாகவும் காணப்பட்டன. 2005 திசெம்பர் இறுதியில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் மத்திய வங்கி, 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 8 வங்கியல்லா முதனிலை வணிகர்கள் மற்றும் ஊழியர் சேமநிதியம் என்பனவற்றை உள்ளடக்கிய 32 பங்கேற்பாளர்கள் காணப்பட்டனர்.

### 13.2 சுவிப்ற் தொடர்பூட்டல்

2005 இல் சுவிப்ற் தொடர்பூட்டல் பிரிவு மத்திய வங்கியின் சுவிப்றுடன் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கையாண்டது. திணைக்களம் மத்திய வங்கியின் 'சுவிப்ற்' முறையினை நவீனப்படுத்தி தரமுயர்த்துவதில் ஈடுபட்டிருந்தது.

(i) பிரதான இடத்திலமைந்துள்ள 'சுவிப்ற் ' அணி வழிகள் விளக்க விடுவிப்பு 5.0 இலிருந்து வலை இணைப்பு 5.5 இற்கு தரமுயர்த்தப் பட்டது.

(ii) பிரதான அமைவிடத்திலிருந்த சுவிப்ற் வலைஇணைப்பு முக்கிய அமைவிடத்தில் சு.வ.இ.4.40 இலிருந்து சு.வ.இ.5.00 இற்கு தரமுயர்த்தப்பட்டது.

(iii) புதிய விளக்கத்துடன் எம்ரி 5XX தரமுயர்த்தப்பட்டது.

## 13.3 ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்கள்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கைக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2004 இன் ரூ.161 பில்லியனிலிருந்து ரூ.167 பில்லியனுக்கு 4 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. எனினும், மற்றைய ஆ.தீ.ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதியின் மொத்தப் பெறுமதி 2004 உடன் ஒப்பிடுகையில் 2005 இல் 38 சதவீதமான கணிசமான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. இதற்கு இந்தியா மற்றும் பாகித்தானுக்கான ஏற்றுமதிகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

2005 இல் ஆ.தீ.ஒன்றிய பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி ரூ.138 பில்லியன்களாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

அட்டவணை II- 9
ஏனைய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடனான இலங்கையின் வர்த்தகம் மற்றும் ஆ.தீ.ஒ. கொடுக்கல் வாங்கல்கள்

ரூ.பில்லியன்

| விடயம் | 2004 | 2005 |
|---|---|---|
| ஆ.தீ.ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 161.1 | 166.8 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் | 51.0 | 70.6 |
| ஏனைய ஆ.தீ.ஒன்றிய நாடுகளிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் | 199.9 | 250.0 |
| ஏனைய ஆ.தீ.ஒன்றிய நாடுகளுடனான மொத்த வர்த்தகம் | 250.9 | 320.6 |
| தேறிய ஆ.தீ.ஒன்றிய தீர்ப்பனவுகள் | 143.3 | 138.4 |

மூலம். இலங்கை மத்திய வங்கி

ஆ.தீ. ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 34 ஆவது கூட்டம் 2005 மேயில் பாகித்தானிலுள்ள லாகூரில் நடைபெற்றது. ஆ.தீ.ஒன்றியத்தின் எதிர்காலப் பங்கு பற்றி ஆய்வு செய்வதற்கும் விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்குமாக அனைத்து நாடுகளிலுமிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவொன்றினை நியமிப்பதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## 13.4 கொடுப்பனவு முறைக் கொள்கையும் மேற்பார்வையும்

கொடுப்பனவு முறை மேற்பார்வையானது (அ) கொடுப்பனவு முறை தோற்றப்பாட்டினை வலுப்படுத்துதல், அத்துடன் (ஆ) நீண்ட மற்றும் பரந்தளவிலான இடையூறுகளின் போது தொடர்ந்து தொழிற்படுத்துவதற்குரிய பன்னாட்டு நியமங்களுடன் கூடிய அடிப்படை அளவுக் குறியீடொன்றிற்காக முழுமையாக கருவிகள் பொருத்தப்பட்ட அனர்த்த மீட்பு அமைவிடம் ஒன்றுடன் கூடிய தொடர்ச்சியான வியாபாரத் திட்டங்களைக் கொண்டிருப்பதற்காக லங்கா செட்டில் பங்கேற்பாளர்களைத் தொடர்தல் என்பனவற்றில் கவனம் செலுத்தியது. வேறுபட்ட கொடுப்பனவு முறைகளின் மாறுபட்ட இடர்நேர்வு தோற்றப்பாடுகளை அங்கீகரிக்கின்ற விதத்தில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையினை மேற்பார்வை செய்கையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் தொடர்ந்தும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளையே பின்பற்றியது. மேற்பார்வை நடவடிக்கைகள் முறைசார்ந்த மற்றும் குறிக்கோள்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் மேலும் அபிவிருத்திகளுக்காக தேவையானவிடத்து மாற்றங்களைத் தூண்டுதல் என்பனவற்றிற்கெதிரான முறையடிப்படையிலான முக்கிய கொடுப்பனவு முறைகள் என்பனவற்றின் கண்காணிப்பினையும், மதிப்பீட்டையும் உள்ளடக்கியிருந்தது. இதன்படி, மேற்பார்வையின் செயற்பரப்பானது மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட முறைசார்ந்த முக்கிய கொடுப்பனவுகள் மற்றும் பிணைய தீர்ப்பனவு முறைகள் (அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பகம்) அத்துடன் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் தொழிற்படுத்தப்பட்ட அனைத்து சில்லறை மட்ட தீர்வக முறைகள் போன்ற முறையடிப்படையிலான முக்கியமான சில்லறைக் கொடுப்பனவு முறைகள்; வரைறுக்கப்பட்ட தனியார் மத்திய வைப்பக முறையினால் தொழிற் படுத்தப்பட்ட படுகடன் பிணையங்கள் வர்த்தக முறைகள் வீசா மற்றும் மாஸ்டர் அட்டை கொடுக்கல் வாங்கல்களுக்காக இரு வர்த்தக வங்கிகளினால் தொழிற்படுத்தப்பட்ட இரு உள்நாட்டு தீர்ப்பனவு முறைகள் மற்றும் வர்த்தக வங்கியினால் தொழிற் படுத்தப்பட்ட ஐ.அ.டொலர் தீர்ப்பனவு மற்றும் தீர்த்தல் முறைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு முறை மேற்பார்வையானது சிறந்த பன்னாட்டு நியமங்களுக்கு இணையாக தேசிய கொடுப்பனவு முறைத்தொழிற்பாடுகளுக்கு

வசதியளிப்பதனை இலக்காகக் கொண்டு முறைசார்ந்த விடயங்களை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது. இதன்படி முறைசார் போன்றவற்றின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நோக்கங்களுக்காவும் காலாண்டு கொடுப்பனவுச் செய்தித்திரட்டினை வெளியிடுவதற்காகவும் அனைத்து முக்கிய கொடுப்பனவு மற்றும் லங்கா செட்டில் பங்கேற்பாளர்களிடமிருந்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் காலத்திற்குக்காலம் தகைமை சார்ந்ததும் அளவு கணியம்சார்ந்ததுமான தகவல்களைத் திரட்டியது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அதன் வழமையான நாளாந்தத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் தொழிற்பாடுகளைக் கண்காணித்ததுடன், அதன் வழமையான நாளாந்த தொழிற்பாடுகள் 2005 ஒத்தோபரிலிருந்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மீது செலுத்தத் தவறியமைக்கான கண்டனத்தினை விதித்தமை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் தேறிய தீர்ப்பனவுக் கடப்பாடுகளுக்காக அவர்களது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக் கணக்கில் போதியளவு நிதியினைப் பேணத்தவறுகின்றமைக்காக நிலுவைகளை உரிய நேரத்தில் தீர்ப்பனவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் சந்தை இடர்நேர்வுகளை குறைப்பதற்குமாக லங்கா செட்டில் முறையினது ஒழுங்குவிதிகளின் தொகுதி 2 இன் கிளைவாசகம் 8.3 இனைத் திருத்தியமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் தொழிற்பாட்டு தடங்கல்களின் காரணமாக ஏற்படக் கூடிய முறையியல் இடர்நேர்வுகளின் விளைவுகளைக் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கி, அனைத்து லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள் அனைவரும் 2005 மார்ச்சு இறுதியில் தொடர்ச்சியான வியாபாரத் திட்டங்களை ஆவணப்படுத்தியிருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தொடர்ச்சியான வியாபாரத் திட்டங்கள் தொடர்பான தேவையான நியமங்களை விளக்குவதற்காக ஒவ்வொரு பங்கேற்பாளர்களுடனும் தனித்தனியே கூட்டங்களை நடத்தியதுடன் திருத்தப்பட்ட தொடர்ச்சியான வியாபாரத் திட்டங்களை 2005 ஒகத்து அளவில் சமர்ப்பிக்குமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தியது. தொடர்ச்சியான வியாபாரத் திட்டம் மீதான வழிகாட்டல் தொகுதியொன்று கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தினால் வரையப்பட்டு வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கத்திற்கும் (உத்தரவாதம்) முதனிலை வணிகர் சங்கத்திற்கும் அவர்களது கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டது.

2005 இன் தொடக்கத்தில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் செவறியெஸ் றிஸ்க்பாங் (சுவீடன் மத்திய வங்கி) இன் குழுவினால் நடத்தப்பட்ட லங்கா செட்டில் முறையின் பின்னைய நடைமுறைப்படுத்தல் ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. லங்கா செட்டில் முறை நடைமுறைக் கிடப்பட்டமையும் சட்ட சீர்திருத்தங்களும் முன்னர் மத்திய வங்கியினாலும் பங்கேற்பாளர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு தொழிற்பாட்டு மற்றும் சட்ட இடர்நேர்வுகளை கணிசமாகக் குறைத்திருப்பதனை மீளாய்வுகள் நிரூபித்துள்ளன.

## 14. பணிமனை

வங்கியின் அலுவலர்களுக்கு போக்குவரத்து தொலைத் தொடர்பூட்டல் போன்ற துணைப்பணிகளை வழங்குவதற்கு மேலதிகமாக 2005 இல் பணிமனைத் திணைக்களம் வங்கிப் பணிமனையினைப் பேணுவதனையும் சுத்தமாக வைத்திருப்பதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டது.

வினைத்திறன் மிக்க பணிகளைக் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பேணல் வேலைகளில் பெரும்பகுதியும், போக்குவரத்துப் பணிகளில் ஒரு பகுதியும் வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

2005 இறுதியில் வங்கியானது அனைத்து திணைக்களங்களுக்கும் நவீன தளபாடங்களையும் சாளரத் திரைகளையும் வழங்கியதன் மூலமாக ஊழியர்களுக்கு மேலும் வசதிகளை வழங்கி தூண்டுதலளிக்கக்கூடிய வேலைச்சூழலை உருவாக்கி கொடுத்துள்ளது.

இவ்வாண்டில் பணிமனைத் திணைக்களம், ஊழியர்களுக்கும் ஓய்வூதியர்களுக்குமான வீடுகளின் பட்டியலில் மற்றுமொரு விடுமுறை வாசல்தலமாக அநுராதபுரத்திலுள்ள விடுமுறை இல்லத்தினையும் சேர்த்துள்ளது. மாத்தளை பிரதேச அலுவலககம் புதிய கட்டத்தில் அமையப் பெற்றுள்ளது.

இத்திணைக்களம் வங்கித் தலைமையகத்திற்கு அருகாமையில் உள்ள வரலாற்றுப் பெறுமதிமிக்க வெளிச்சவீட்டு மணிக்கூட்டுக் கோபுரத்தை தொடர்ந்தும் பேணி வருகிறது.

## 15. பொதுப்படுகடன்

நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 113 இன்

நியதிகளுக்கிணங்க, உள்நாட்டுப்படுகடனை வழங்கி முகாமைப்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுப் படுகடன்கள் இரண்டினையும் தீர்ப்பனவு செய்தல் ஆகிய நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு பொதுப்படுகடன் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதற்கமைய, இடர்நேர்வுகளின் முன்மதியுடைய அளவுகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையில் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசின் நிதியிடல் தேவைப்பாடுகளும் அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படுவதனைத் திணைக்களம் உறுதிப்படுத்த வேண்டியிருக்கும். 2005ஆம் ஆண்டில் பொதுப் படுகடன் திணைக்களம் அரச பிணையங்களுடாக ரூ.259 பில்லியன்களைத் திரட்டியதுடன் 605 வெளிநாட்டுக் கடன்கள் உட்பட முழுப் பொதுப்படுகடன் சொத்துப் பட்டியலையும் துல்லியமாகவும் சரியான நேரத்திலும் தீர்ப்பனவு செய்தது. இம்முக்கிய பணிக்குப் புறம்பாக, பொதுப்படுகடன் திணைக்களம் இவ்வாண்டில் நாட்டிற்கான தரமிடல் மற்றும் படுகடன் சட்ட இசைவு தாமதச் செயற்றிட்டங்கள் ஆகிய இரு முக்கிய செயற்றிட்டங்களை பொதுப்படுகடன் திணைக்களம் கையாண்டது. பொதுப்படுகடன் திணைக்களம் இலங்கைக்கான தரமிடலைப் பெற்றுக் கொள்வதில் ஒரு பெரும் கருவியாக விளங்கியதுடன் தரமிடல் முகவர்களிடமிருந்து இம்முன் மொழிவுகளைப் பெற்றுக் கொண்டமை மற்றும் அவர்களால் ஆற்றப்பட்ட அறிமுக உரைகளை ஒழுங்கு செய்தமை முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தமை, லீட் முகாமையாருடன் (சிட்டிகுறூப்) இணைப்புக்களை மேற்கொண்டமை தகவல்களை வழங்குகின்றமை தரமிடல் முகவரின் கூட்டங்களில் பங்கேற்றமை போன்ற பல்வேறு செய்முறைகளையும் மேற்கொண்டது. சுனாமியுடன் தொடர்பான நடவடிக்கைகளில் நிவாரணங்களை வழங்குகின்ற நோக்குடன் பரிஸ்கழக உறுப்பினர்களினாலும் மற்றும் சில இருபுடை கொடை வழங்குனர்களினாலும் சட்ட இசைவுத் தாமதமொன்று வழங்கப்பட்டது. கொடை வழங்கும் நாடுகளின் தொடர்பான இராஜதந்திரக் குழுக்களை தொடர்பு கொண்டமையின் மூலமாக கிடைத்த படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் கீழ் வழங்கப்பட்டபடுகடன் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதில் பொதுப்படுகடன் திணைக்களம் பன்னாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து ஐ.அ.டொலர் 100 மில்லியன் தொகை கொண்ட கூட்டமைப்புக் கடனொன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக ஒழுங்குகளை மேற்கொண்டதுடன் சிட்டி குறூப்பின் லீட் ஒழுங்கு படுத்துகையுடன் தொடர்புகளையும் மேற்கொண்டது.

2005 இல் பொதுப்படுகடன் திணைக்களம் குறிப்பாக படுகடன் முகாமைத்துவச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. முறைசார்ந்த உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவ உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் பன்னாட்டு ஆலோசனையாளர்களின் உதவியுடன் இடர்நேர்வு முகாமைத்துவ மாதிரியினை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டது. தற்பொழுதுள்ள படுகடன் சொத்துப்பட்டியல் கடுமையாக ஒன்றுசேரும் பிரச்சனையினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு படுகடனைத் திரட்சிப் படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான தேவையினைப் பொதுப்படுகடன் திணைக்களம் இனம் கண்டது. பொதுப்படுகடன் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்களினது பெறுபேறுகளின் பயனாக ஒன்று சேரும் பிரச்சனையினை எதிர்கொள்வதற்காக கோட்பாட்டு பத்திரங்கள் தயாரிக்கப்பட்டதுடன் மீண்டும் வாங்குதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நிறுத்துதல் போன்ற உபாயங்கள் முன்மொழியப் பட்டன. தற்பொழுதுள்ள நிலையான வீதங்களைக் கொண்ட உள்நாட்டுப்படுகடன் கருவிகளுக்குப் புறம்பாக, முதலீட்டாளர்களுக்கு நேர்க்கணிய உண்மை வருமானத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டும் சந்தைக்குத் திரவத் தன்மையினை வழங்குவதற்காகவும் சுட்டெண் மயப்படுத்தப்பட்ட இணைக்கப்பட்ட முறிகள் முதன்முதலாக சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. அதேவேளை முன்னைய ஆண்டினைப் போன்று, ரூபாக்கடன்களை உரிய காலத்திற்கு முன் தீர்ப்பனவு செய்யும் விருப்பினை நடைமுறைப்படுத்தியதன் மூலம் பொதுப்படுகடன் திணைக்களம் அரசாங்கத்தின் வட்டிச் செலவினை ரூ.3 பில்லியனால் குறைக்கக்கூடியதாக இருந்தது. கொழும்புப் பங்குச் சந்தைக்கு வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் என்ற தகுதியினை வழங்கியமை மீள் கொள்வனவு / நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் மீது முதன்மை உடன்படிக்கையினை அறிமுகப்படுத்துகின்ற செயற்பாட்டினைத் தொடங்கியமை முதனிலை வணிகர்களுக்கு பயிற்சி செயலமர்வுகளை நடத்தியமை மற்றும் முதலீட்டாளர் போன்றோருக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தினை நடத்தியமை

போன்றன அரச பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக பொதுப்படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளில் சிலவாகும். ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை உயர்த்தியமை பங்கிலாபப் பகிர்ந்தளிப்புக்கள் போன்றனமீது கட்டுப்பாடுகளை விதித்தமை போன்றவற்றின் மூலம் பொதுப்படுகடன் முறைமையின் உறுதித் தன்மையும் மேலும் வலுப்படுத்தப்பட்டது.

## 15. 1. 2005 இன் அபிவிருத்தி

### (அ) படுகடன் வழங்கலும் செலவும்

2005 ஆம் ஆண்டிற்காக நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம், ஏட்டுப் பெறுமதி நியதிகளில் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டு எல்லையை ரூ.436 பில்லியனில் நிர்ணயித்தது. இதில் உள்நாட்டு மூலங்களுடாகத் திரட்டப்பட வேண்டிய நிதி ரூ.331 பில்லியனாக விளங்கியது. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளின் ஒரு பகுதியினைப் பூர்த்தி செய்யும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் அரசாங்கப் பிணையங்கள் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக ரூ.259 பில்லியனைத் திரட்டியது. மேலும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவினூடான மொத்தக் கடன்பாடுகள் ரூ.59 பில்லியனாக விளங்கியது. (ஐ.அ.டொலர் 585 மில்லியன்) இவ்வாண்டிற்கான ஒப்புதலளிக்கப்பட்ட திறைசேரி உண்டியல் எல்லை இவ்வாண்டில் மாற்றமின்றி ரூ.300 பில்லியனாக விளங்கியது.

இம் மூலங்களைத் திரட்டும் பொருட்டு பொருத்தமான உபாயமொன்று, நாணய, இறை மற்றும் படுகடன் முகாமைத்துவ கொள்கைகளிடையே காத்திரமான இணைப்பினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு என்பனவற்றிலிருந்தான உறுப்பினர்களை உள்ளடக்கிய உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவக் குழுவினால் வடிவமைக்கப்பட்டது. 2005இல் படுகடன் முகாமைத்துவ உபாயமானது திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் சுட்டெண்மயப்படுத்தப்பட்ட இணைக்கப்பட்ட முறிகள் போன்ற வர்த்தகப்படுத்தத் தக்க கருவிகளிலிருந்து பெருமளவு மூலவளங்களைத் திரட்டுவதனை இலக்காகக் கொண்டிருந்தது. இக் கருவிகளிலிருந்து திரட்டப்பட்ட மொத்த மூலவளங்கள் அரச பிணையங்களுடன் திரட்டப்பட்ட மொத்த நிதியில் 83 சதவீதத்திற்கு வகைகூறின. ரூபாக் கடன்கள் போன்ற வர்த்தகப்படுத்தலல்லாத கருவிகளிலிருந்து ரூ.24 பில்லியன் கொண்ட தேறிய மீள் கொடுப்பனவொன்று காணப்பட்டதன் மூலம் மொத்தப்படுகடன் இருப்பில் இதன் பங்கு 2004 இன் 15 சதவீதத்திலிருந்து 2005 இல் 11 சதவீதத்திற்கு குறைவடைந்தது. சந்தைப் பங்கேற்பாளர்கள் சந்தை நிலைமைகள் மீதான அவர்களது உணர்வின் காரணமாக அவர்களது இடர்நேர்வு விருப்பினை இடர் நேர்வு தவிர்ப்பு நிலைக்கு மாற்றியமையினால் குறுங்காலப் படுகடன் கருவிகளுக்கு வலுவான சந்தை வெறுப்புக் காணப்பட்டது. குறுங்கால திறைசேரி உண்டியல்களையும் அதேபோன்று நடுத்தர மற்றும் நீண்டகால திறைசேரி முறிகளையும் வழங்குவதன் மூலம் படுகடன் சொத்துப்பட்டியலின் செலவு மற்றும் இடர்நேர்வுகளிடையே சமநிலையொன்றினை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டது. மொத்த திறைசேரி முறி வழங்கலில் ஏறத்தாழ 61 சதவீதம் 2 ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சிகளைக் கொண்டிருந்தன. எதிர்கால பணவீக்க வீதங்கள் பற்றிய அவர்களது எதிர்பார்ப்புக்களுக்கு சில பாதுகாப்புக்களை வழங்கும் பொருட்டும் வருமானத்தின் நேர்க்கணிய உண்மை வீதத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் 2005 இல் சந்தையில் சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்ட முறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதேவேளை, உள்நாட்டுச் சந்தை மீதான அழுத்தத்தினைக் குறைக்கும் பொருட்டும், வீதங்களைச் சமநிலைப்படுத்துவதற்காகவும் மூன்றாண்டு காலத்தைக் கொண்டதும் இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் +95 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட வீதத்தில் ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட வெளிநாட்டு வங்கிக் கடன்பாடுகள் (கூட்டமைப்புக் கடன்களுடாக) முன்னணி ஒழுங்குபடுத்துநரூடாகப் பெறப்பட்டன.

2005 இல், பொதுப்படுகடன் திணைக்களம் 52 திறைசேரி உண்டியல்கள் ஏலங்களை நடத்தியதுடன் ஏலங்கள் மற்றும் முதலீடுகளூடாக மொத்த நியதிகளில் ரூ.486 மில்லியன் கொண்ட தொகை திரட்டப்பட்டது. எனினும், தேறிய நியதிகளில் முறைக்கு ரூ.9.7 பில்லியன் கொண்ட மீள் கொடுப்பனவொன்று காணப்பட்டது. சந்தை முன்னுரிமைகள் குறுங்கால உண்டியல்களுக்குச் சாதகமாக் காணப்படுவதனைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த வழங்கலில் 53 சதவீதம் 91 நாள் திறைசேரி உண்டியல்களின் மீது காணப்பட்டது. திறைசேரி முறிகளைப் பொறுத்தவரையில் 64 ஏலங்கள் நடத்தப்பட்டதுடன் ஏலங்கள் மற்றும் நேரடி முதலீடுகள் இரண்டினதுமூடாக ரூ.230 பில்லியன் திரட்டப்பட்டது. குறுங்கால திறைசேரி

உண்டியல் சந்தைக்கான சந்தை ஆர்வம் அதிகமாகக் காணப்பட்டமையினால் 4 - 6 ஆண்டு முதிர்ச்சிகள் ரூ.37 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. திறைசேரி முறிகளினது தொடர்களின் மொத்த எண்ணிக்கை 56 இற்குக் குறைவடைந்தது. 2005இல் ரூபாக் கடன்களுக்கு தேறிய மீள் கொடுப்பனவொன்று காணப்பட்டது. மீள் கொடுப்பனவுகள் 11 இலிருந்து 13 சதவீதம் வரையிலான வட்டி வீதங்களைக் கொண்ட அழைக்கத்தக்க ரூபாக் கடன்கள் உரிய காலத்திற்கு முன்பே தீர்ப்பனவு செய்யப்பட்டமையினால் முக்கியமாக ஏற்பட்டதாகும்.

அட்டவணை II.10 2005இல் உள்நாட்டுப் படுகடனின் வழங்கல் மற்றும் முதிர்ச்சியின் விபரங்களைத் தருகின்றது.

## (ஆ) வெளிநின்ற படுகடன்

2005 இறுதியில் மொத்த வெளிநின்ற படுகடன் ரூ.2217.1 பில்லியனாக விளங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தி நியதிகளில் ரூபாவானது முக்கிய நாணயங்களுக்கு எதிராக பெறுமதியில் உயர்வடைந்திருந்த காரணத்தினால் படுகடன் இருப்பு 2004 இன் 105.5 சதவீதத்திலிருந்து 94 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

## 15.2 படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட படுகடனின் பேரிலான மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ.339 பில்லியன்களாகக் காணப்பட்டன. அதேவேளை, உள்நாட்டுப்படுகடன் மீதான முதலின் மீள் கொடுப்பனவுகள் ரூ.202 பில்லியன்களாகக் காணப்பட்டன. மொத்த வெளிநாட்டுப்படுகடன் தீர்ப்பனவுச் செலவு ரூ.25 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 43% அல்லது ரூ.19 பில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் கீழ் வழங்கப்பட்ட படுகடன் நிவாரணத்தின் பேரில் வட்டிச் செலவு (ரூ.10 பில்லியன்) முதல் கொடுப்பனவு (ரூ.17 பில்லியன்) ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் விபரங்கள் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன.

## 15.3 படுகடன் சட்ட இசைவுத் தாமதம்

சுனாமியின் அனர்த்த தாக்கங்களைக் கருத்திற் கொண்டும் மனிதாபிமான மற்றும் மீள் கட்டுமாணத் தேவைகளுக்காக கூடியளவான மூலவளங்களை ஒதுக்குவதற்கு இலங்கையினை அனுமதிக்கும் பொருட்டும் பரிஸ்கழக கடன்வழங்கும் நாடுகள் 2005 இற்கான படுகடன் பணிக் கொடுப்பனவுகளை பிற்போடுவதற்கு உடன்பட்டன. பிற்போடப்பட்ட தொகை ஓராண்டு சலுகைக் காலத்துடன் ஐந்தாண்டுக் காலப்பகுதியில் மீளச் செலுத்தப்படவேண்டும். மீள் கொடுப்பனவுகள் 2006 திசெம்பரில் தொடங்குவதுடன் 2005 இல் சட்ட இசைவுத் தாமதம் மூலமாக ஒன்றுசேரும் வட்டி மூலதனமயப்படுத்தப்பட்டு பிற்போடப்பட்ட கொடுப்பனவாகச் செலுத்தப்படும். படுகடன் சட்ட இசைவுத் தாமதத்திற்கு பங்களித்த பல்புடை நாடுகளில் ஐக்கிய அமெரிக்கா, கனடா, டென்மார்க், ஜேர்மனி, பிரான்சு, யப்பான், இத்தாலி, நெதர்லாந்து, கொரியா, மற்றும் இந்தியா என்பன உள்ளடக்கியிருந்தன. இத்தாலிக்குச் செலுத்தப்பட வேண்டிய வெளிநின்ற படுகடன் முழுமையாகப் பதிவழிக்கப்பட்ட வேளையில் சீனா பகுதியளவில் பதிவழித்தது. அதேநேரம் ஐக்கிய இராச்சிய அரசாங்கம் உலக வங்கிக்கு செலுத்தப்பட்ட படுகடன் பணிக்கொடுப்பனவில் 10% இனை மீள் நிதியிட உடன்பட்டது. இந்தியஅரசாங்கத்தின் தொடர் கொடுகடனின் பேரில் இந்தியா மூன்றாண்டு படுகடன்

அட்டவணை II-10

2005இல் உள்நாட்டுப்படுகடனின் வழங்கலும் முதிர்ச்சியும்

ரூ.மில்லியன்

| | முதிர்ச்சி | வழங்கல் | மீள் கொடுப்பனவு | தேறிய வழங்கல் |
|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல் | 91நாள் | 259,713 | 213,531 | 46,182 |
| | 182நாள் | 65,826 | 94,561 | (28,735) |
| | 364நாள் | 100,458 | 112,457 | (11,999) |
| | மற்றையது | 59,772 | 74,932 | (15,160) |
| | **மொத்தம்** | 485,769 | 495,481 | (9,712) |
| திறைசேரி முறிகள் | 1 வருடம் | 3,200 | 12,970 | (9,770) |
| | 2 வருடம் | 86,531 | 15,000 | 71,531 |
| | 3 வருடம் | 103,187 | 77,810 | 25,377 |
| | 4 வருடம் | 27,592 | - | 27,592 |
| | 5 வருடம | 5,415 | 14,550 | (9,135) |
| | 6 வருடம் | - | 1,000 | (1,000) |
| | 8 வருடம் | 3,625 | - | 3,625 |
| | **மொத்தம்** | 229,550 | 121,330 | 108,220 |
| ரூபாக் கடன்கள் | 2/ 5வருடம் | - | 44,375 | (44,375) |
| | 2/ 6வருடம | 820 | - | 820 |
| | 4/ 6வருடம் | 4,986 | - | 4,986 |
| | 4/ 7வருடம் | 3,575 | - | 3,575 |
| | 4/ 8வருடம | 2,868 | - | 2,868 |
| | 4/ 10வருடம் | 31,430 | - | 31,430 |
| | 7/ 8வருடம் | - | 12,500 | (12,500) |
| | **மொத்தம்** | 43,679 | 56,875 | (13,196) |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | **மொத்தம்** | - | - | - |
| வெ.நா.வ.தொ. பிரிவுகளிலிருந்தான கடன்கள் | <= 1வருடம் | 58,968 | 17,236 | 41,732 |
| | **மொத்தம்** | 58,968 | 17,236 | 41,732 |
| **மொத்தம்** | | 817,966 | 690,922 | 127,044 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்கியுள்ளது. பதிவழிக்கப்பட்ட படுகடன் உட்பட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்திலிருந்து கிடைத்த மொத்தச் சேமிப்புக்கள் 2005இல் ரூ.27 பில்லியனாகக் காணப்பட்டன.

## 15.4 அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

2004 இன் இறுதிப்பகுதியில் சமநிலையடையத் தொடங்கிய அரசாங்கப் பிணையங்களின் விளைவு வீதங்கள் 2005 இல் முதலாந்தர, இரண்டாந்தர சந்தைகள் இரண்டிலும் மிகக் கூடியளவிற்கு அதிகரித்தன. இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்திலும் தற்பொழுதுள்ள சந்தை நிலைமைகளின் காரணமாகவும் 3 மாத திறைசேரி உண்டியல் வீதங்கள் 180 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்வடைந்தன. சந்தையின் குறுங்கால சந்தையின் அபிவிருத்திகளுக்குச் சமாந்தரமாக நீண்டகால விளைவு வளைகோடும் மேல் நோக்கிப் பெயர்ந்து காணப்பட்டது. திறைசேரி முறிகளின் அனைத்து முதிர்ச்சிகளினதும் முதலாந்தர இரண்டாந்தர சந்தை விளைவு வீதங்கள் இரண்டும் அதிகரித்தன. சராசரி அடிப்படையில், முதலாந்தரச் சந்தையில் 2 ஆண்டு மற்றும் 3 ஆண்டு திறைசேரி முறிகளின் வீதங்கள் முறையே 152 மற்றும் 163 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தன.

## 15.5 பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையும் மத்திய வைப்பக முறையும் (லங்கா செகுயர்)

பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையினூடாகவும் லங்கா செகுயர் மூலமாகவும் வழங்கப்படுகின்ற பணிகள் இவ்வாண்டில் மேலும் விரிவடைந்தன. 2005இல் லங்கா செகுயரினால் கையாளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.11,215 பில்லியனுக்கு 61 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இக் கொடுக்கல் வாங்கலானது வழங்கல் எதிர் கொடுப்பனவுகள் மீள் சந்தைப்படுத்தல், மீள் கொள்வனவு நேர்மாற்று மீள் கொள்வனவு மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இம்முறையானது பத்திரங்களற்ற திறைசேரி முறிகளின் பேரிலான ரூ.64,250 மில்லியனுக்குக் கொடுப்பனவுகளையும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மீது ரூ.581,023 மில்லியன் கொண்ட முதிர்ச்சிக் கொடுப்பனவுகளையும் மேற்கொண்டது.

"லங்கா செகுயர்" முறையில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை 32ஆக அமைந்து 8 முதனிலை வணிகர்களையும் 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும், ஊழியர் சேமநிதியத்தினையும் மத்திய வங்கியினையும் உள்ளடக்கியிருந்தது. 2005 இறுதியில் இம்முறையில் இப்பங்கேற்பாளர்களினால் பேணப்பட்ட முதலீட்டாளர் கணக்குகள் 24,411 ஆகக் காணப்பட்டது. 2005இன் லங்கா செகுயரினால் வழங்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கூற்றுக்களின் மொத்த எண்ணிக்கை 39,806 ஆக விளங்கிய வேளையில் வழங்கப்பட்ட கொடுப்பனவு கூற்றுக்களின் எண்ணிக்கை 35,872ஆகக் காணப்பட்டது. மேலும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் பிணைய உடமையாளர்களுக்கு 20,374 உடமை கூற்றுக்களும் வழங்கப்பட்டன.

முறையின் கணக்கு வைத்திருப்போருக்காக, லங்கா செகுயர் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கணக்கு சரிபார்ப்பு முறையினை நடைமுறைப்படுத்தியது. இது முதலீட்டாளர்கள் இணையத்தளமூடாக தமது பிணைய உடமைகளையும், வருமான உழைப்பு விபரங்களையும் பார்ப்பதற்கு வாய்ப்பொன்றினை வழங்குவதற்காக உள்ளகத்தில் உருவாக்கப்பட்ட மேலதிக வசதியொன்றாகும்.

## 15.6 முதனிலை வணிகர்கள் முறையினை மேற்பார்வை செய்தல்

முதனிலை வணிகர் முறையின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம், தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு ஊடாகவும் முதனிலை வணிகரின் நடவடிக்கைகள் மீது கிரமமான தலப் பரீட்சிப்புக்களை மேற்கொண்டதன் மூலமும் முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்து வருகிறது. பல்வேறுபட்ட இடர்நேர்வு வகைகளுக்கு எதிராக ஒவ்வொரு முதனிலை வணிகராலும் பயன்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ நுணுக்கங்களை அடையாளங்கண்டு கொள்வதற்காக இவ்வாண்டில் அனைத்து முதனிலை வணிகர்கள் மீதும் சிறப்புத் தலப் பரீட்சிப்பொன்று மேற்கொள்ளப்பட்டது. முதனிலை வணிகர்களுக்கு அவர்களது ஏனைய இடர்நேர்வு முகாமைத்துவ கருவிகளை மேம்படுத்துவதற்குப் புறம்பாக, அவர்களது வியாபாரப் பிரிவிற்காக தொடர்ச்சியான விபரத் திட்டமொன்றினை வரைந்து பேணிவருமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காகவும் தலப்பரீட்சிப்புக்களின்போது எழுப்பப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு வழிமுறைகளை மேற்கொள்வதற்காவும் முதனிலை வணிகர்களுடன் தனித்தனியாகக்

கலந்துரையாடல்களும் கிரமமான கூட்டங்களும் ஆண்டு முழுவதும் நடத்தப்பட்டன.

முதனிலை வணிகர்களினால் வலுவான மூலதனத் தளம் பேணப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டும் முதனிலை வணிகர்கள் முறையினை வலுப்படுத்துவதற்காக முதனிலை வணிர்களின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு 2005 யூலை 1 ஆம் நாளிலிருந்து ரூ.200 மில்லியனிலிருந்து ரூ.250 மில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டது. இது தொடர்பான விபரங்கள் சுற்றறிக்கை எண் 08/24/002/005/005 தரப்பட்டுள்ளது. வேறுபட்ட முதனிலை வணிகர்களின் வேறுபட்ட இடர்நேர்வு மட்டங்களை கண்டறியும் பொருட்டு 2006 யூலை 1 ஆம் நாளிலிருந்து மூலதனத் தேவைப் பாட்டினை ரூ.300 மில்லியனிற்கு அதிகரிப்பதெனவும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமைக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. 2006 யூலையிலிருந்து இது நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமைக் கட்டமைப்பினை மேற்கொள்வதற்கு இணையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கொங்கொங் அன்ட சங்காய் பாங்கிங் கோப்பரேசன் 2005 யூலை 30 ஆம் நாளிலிருந்து முதனிலை வணிகர் முறையிலிருந்து விலகிக் கொண்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியின் துணை நிறுவனமொன்றான வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி முதனிலை வணிகர் 2005 ஒத்தோபர் 1 ஆம் நாளிலிருந்து முதனிலை வணிகர்கள் கம்பெனியாகத் தொழிற் படுவதனை நிறுத்திக் கொண்டதுடன் வங்கியின் முதனிலை வணிகர்கள் பிரிவாகத் தொழிற்படுவதற்காக மீண்டும் தாய் வங்கியுடன் சேர்ந்து கொண்டது.

### 15.7 இரண்டாந்தரச் சந்தை கொடுக்கல் வாங்கலின் அபிவிருத்தி

முதனிலை வணிகர்களின் வாராந்த அறிக்கையிடும் முறையினூடாக திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2005இல் முதனிலை வணிகர்கள் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஒரு தரப்பினராக இருந்த படுகடன் திணைக்களத்தின் இரண்டாந்தர (உடனடி மற்றும் மீள் கொள்வனவு) கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த. திறைசேரி முறிகளின் கொடுக்கல் வாங்கல் 28 சதவீதத்தினால் கணசமாக வீழ்ச்சியடைந்த வேளையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல்கள் 6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்து குறுங்கால கருவிகளுக்கான விருப்பம் அதிகரித்து வருவதனைப் பிரதிபலித்தது. 2004 இற்கும் 2005 இற்குமிடையில் மொத்த மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் உடனடி விற்பனைகள் 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டினைப் போன்றே, முதனிலை வணிகர்கள் இடர்நேர்வைத் தவிர்க்கும் நிலைமையைத் தொடர்ந்தும் கைக்கொண்டமையானது இரண்டாந் தரச் சந்தையில் ஓரிரவு மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு போன்ற குறுங்கால சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் 20 சதவீதத்தினால் அதிகரிக்க வழிவகுத்தது.

## 16. பிரதேச அபிவிருத்தி

இலங்கை அரசாங்கத்தினாலும் கொடை முகவர்களினாலும் அனுசரணை/ நிதியிடப்பட்ட 11 அபிவிருத்தி கொடுகடன் திட்டங்களின் உச்ச முகவரான பிரதேச அபிவிருத்தி திணைக்களம் 2005 ஆம் ஆண்டில் இத்திட்டங்களினை நடைமுறைப் படுத்துவதன் மூலம் அதனது தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கு மேலாக, 2005 இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் நடைமுறையாண்டில் குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளை மீளத்தொடங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட மூன்று புதிய கொடுகடன் திட்டங்களினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டதன் மூலம் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் கொடுகடன் திட்டங்களின் மொத்த எண்ணிக்கையினை 14 இற்கு அதிகரித்தது. மேலும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது ஆடைகள் துறைக் கைத்தொழில்களின் நவீன மயமாக்கலுக்கு கடன் வழங்குவதற்காக கடன் வழங்கும் வங்கிகள் எதிர்நோக்கும் கொடுகடன் இடர்நேர்வுகளில் ஒரு பகுதியினை ஈடுசெய்யவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளை மீளத்தொடங்குவதற்குமாக இரண்டு புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. சுனாமியால் பாதிப்படைந்த உட்கட்டுமான தொழில்முயற்சிகளின் நிர்மாணத்துறை மற்றும் மீள்நிர்மாணம் புனர்நிர்மாணம் போன்ற துறைகளை அபிவிருத்தி செய்யவும் வலுப்படுத்தவும் வேண்டி மேலும் கொடுகடன் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான நிதியினை பெற்றுக்கொள்ளும்

பொருட்டு ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் பிரான்சிய அரசாங்கம் என்பவற்றுடன் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமும் பங்குபற்றியது.

கொடுகடன் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் பங்கேற்கும் நிதிநிறுவனங்களிற்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்களை வழி காட்டுதல்களை வழங்குதல். மீள்நிதிகளை பகிர்ந்தளித்தல் அல்லது அரச வட்டி உதவித்தொகையினை கொடுப்பனவு அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்களின் கீழ் மீள்நிதியினை மீளப்பெறுதல் என்பவற்றினை உள்ளடக்கியவேளையில் களத்தில் அவர்களின் தொழிற்பாடுகளை கண் காணித்து மேற்பார்வை செய்தது. மேலும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அனைத்து பங்குடமையாளருக்கும் பொதுமக்களுக்கும் தொடர்பான அமைச்சுக்கள் சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் பங்கேற்பு நிதிநிறுவனங்கள் என்பன வற்றின் ஒத்துழைப்புடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன் தரவுத்தளங்களின் பேணல்/ தகவல் பதிவுகளைப் பேணியதுடன் கொடையாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் வசதியளிப்பதற்காக ஒவ்வொரு கொடுகடன் திட்டத்தின் கணக்குகளையும் பேணுகிறது.

2005 இல் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் அட்டவணை II -11 இல் தரப்பட்டுள்ளன.

நடைமுறை ஆண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் இதுவரை நடைமுறைப் படுத்தப்பட்ட செயற்றிட்டங்களுக்கு புறம்பாக சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசாங்கத்தின் ஜீவனோபாயத்தினை மீளமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சுனாமி நிவாரண கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களினை (சுசகன) நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் அத்திணைக் களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கடன் திட்டத்தின் குறிக்கோள் பாதிக்கப்பட்ட தரப்பினர் ஜீவனோபாயத்திற்கான தொழிற்பாடுகளை தொடங்குவதற்காக சலுகை அடிப்படையிலான கடன் திட்டங்களை வழங்குவதேயாகும். தொடக்கத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான ரூ.5 பில்லியன் அதாவது ரூ.3 பில்லியன் இலங்கை மத்திய வங்கியிலிருந்து வங்கி நிறுவனங்களின் முறைமையான துறையினூடாக வழங்குவதற்காகவும், ரூ.2 பில்லியன் அரசாங்கத்திடமிருந்து பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியினூடாகவும் மற்றும் குத்தகை நிறுவனங்களினூடாக வழங்குவதற்காகவும் ஒதுக்கப்பட்டது. 2005 இறுதியில் சுசகன கொடுகடன் திட்டத்தின் கீழ் 15 முறையான வங்கித்துறை நிறுவனங்களினால் ரூ.4,280 மில்லியன் தொகை பாதிக்கப்பட்ட 9,186 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில் 15 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினாலும் குத்தகை நிறுவனங் களினாலும் ரூ.165 மில்லியன் கொண்ட தொகை 174 தொழில் முயற்சிகளுக்கு கொடுக்கப்பட்டன.

2005 திசெம்பர் இறுதியில் நோக்கத்தின் அடிப்படையிலான கடன் பகிர்ந்தளிப்புக்கள் அட்டவணை II.12 இல் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டின் பிற்பகுதியில் அரசின் மீள்கட்டுமானம் மற்றும் புனர்நிர்மாண நிகழ்ச்சித் திட்டங்களில் உதவுவதற்காக பன்னாட்டு ஒத்துழைப்பு யப்பானிய வங்கியும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுக்கு வங்கி வலையமைப்பினூடாக உதவி புரிந்தன. இந்த வகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நாட்டின் கரையோரப் பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு உதவி வழங்குவதற்காக சுசகன கடன் திட்டத்திற்கு துணைநிரப்பாக இரண்டு தனித்தனியான கடன் திட்டங்களைஅறிமுகப் படுத்தியது. 2005 இன் நான்காம் காலாண்டில் இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களான சிறிய வியாபார மீள்எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் யப்பானிய ஒத்துழைப்பு வங்கியின் உதவியுடனும் ஜீவனசக்தி நுண்பாக நிகழ்ச்சித்திட்டம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி

**அட்டவணை II-12**

**சுசகன கடன் திட்டம் - 2005**
**நோக்க அடிப்படையிலான பகிர்ந்தளிப்புக்கள்**

| நோக்கம் | கடன்பாட்டாளர்களின் எண்ணிக்கை | வீதம் | ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் ரூ.மில் | வீதம் |
|---|---|---|---|---|
| வேளாண்மை | 98 | 1.05 | 18.2 | 0.41 |
| கைத்தொழில் | 741 | 7.91 | 338.7 | 7.62 |
| மீன்பிடி | 3,486 | 37.24 | 1,282.4 | 28.85 |
| வர்த்தகம் | 2,496 | 26.67 | 1,235.3 | 27.79 |
| சுற்றுலா | 1,219 | 13.02 | 895.7 | 20.15 |
| போக்குவரத்து | 349 | 3.73 | 196.4 | 4.42 |
| சுயதொழில் | 283 | 3.03 | 447.2 | 10.06 |
| ஏனைய பணிகள் | 688 | 7.35 | 31.1 | 0.70 |
| **மொத்தம்** | **9,360** | **100.0** | **4,445.0** | **100.0** |

நிழ்ச்சித்திட்டத்தின் உதவியுடனும் தொழிற் பாட்டிற்கு வந்தன.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நாட்டில் வேளாண்மை சந்தைப்படுத்தலுக்காக வேளாண்மை யாளர் மற்றும் வாங்குநர்களுக்கிடையில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை தொடர்ந்தும் ஊக்குவித்தது. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தம் என்பது வர்த்தக வேளாண்மை உற்பத்திகளை முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு விலையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்காலத் திகதியில்விற்பதற்கு வாங்குநர்களுக்கும் வேளாண்மை

**அட்டவணை II-13**

**முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள்**

| பயிர் வகை | கையெழுத்தான ஒப்பந்தங் களின் எண்ணிக்கை | நன்மை பெற்ற வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | தீர்மானிக் கப்பட்ட முன்னோக் கிய விலை ரூ.கி.கி | முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் பங்கேற்கும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களின் கொள்வனவுத் தொகை |
|---|---|---|---|---|
| சோளம் | 34,071 | 40,500 | 16-18 | 687 |
| நெல் | 14,270 | 16,200 | 14-17 | 745 |
| சோயா | 6700 | 6700 | 30-38 | 375 |
| பாசிப்பயறு | 1,200 | 1,200 | 47-52 | 51 |
| சிறு தானியம் | 520 | 540 | 20-25 | 14 |
| எள்ளு | 610 | 610 | 370 | - |
| ஏனைய பயிர்வகை* | 11,800 | 11,800 | 20-65 | 540 |
| **மொத்தம்** | **69,171** | **77,550** | - | **2,412** |

* எள்ளு, காய்கறிகள், பப்பாப்பழம், சூரியகாந்தி

யாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட ஒரு உடன்பாடாகும். இந்த அமைப்பானது பெரும் எண்ணிக்கையிலான வேளாண்மையாளருக்கும் வாங்குநர்களுக்கும் தங்களது சந்தைப்படுத்தல் பிரச்சனைகளைத் தொடர்ந்து தீர்த்து வைப்பதற்கென 1999 இல் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது நாடு பூராகவுமுள்ள பங்கேற்கும் நிதிநிறுவனங்கள் வாங்குநர்கள், வேளாண்மையாளர் வேளாண்மையாளர் சங்கங்கள் அரச மற்றும் அரசுசார்பற்ற அமைப்புக்கள் உட்பட வேறுபட்ட பங்குடமையாளர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இத்திட்டத்தினை ஊக்குவிக்கின்றது. மீளாய்வுக்குரிய ஆண்டில் பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது பிரதேச அலுவலகங்கள் மற்றும் பங்கேற்கும் நிதிநிறுவனங்களின் உதவியுடன் நாட்டின் முக்கிய வேளாண்மைப் பகுதிகளில் நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்தும் முகமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. சோளம், சோயா அவரை, சூரியகாந்தி, இஞ்சி, பாசிப்பயறு, தேன் மற்றும் நிலக்கடலை போன்ற உள்ளூர் உற்பத்திகளின் பெரும் பங்கு முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் வர்த்தகப்படுத்தப்பட்ட வேளையில் ஆயிரக் கணக்கான நெல் வேளாண்மையாளர் மற்றும் ஏனைய வேளாண்மை உற்பத்தியாளருடன் முக்கிய வாங்குநர்களும் இத்திட்டத்தின் கீழ் நன்மை பெற்றனர். வேளாண்மைச் சந்தைகளில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் தாக்கத்தினை குறிப்பாக மிதமிஞ்சிய உற்பத்திக் காலப்பகுதியில் அங்கீகரிக்கின்ற விதத்தில் பண்ட விலைகளை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி அரசாங்கத்துடன் இணைந்து முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழான கடன் பெறும் மேல் எல்லையை கடன்பெறுநர் ஒருவருக்கு 2005 ஆம் ஆண்டளவில் ரூ.25 மில்லியனிலிருந்து ரூ.50 மில்லியனாக அதிகரித்தது.

பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறை பிரதேச அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் வேளாண்மையின் மத்தியில் புதிய கலப்பின விதை வகைகள் பண்ணை சாதனங்கள் அறுவடைக்குப் பின்னரான வழி முறைகள் நுண்பாக நீர்ப்பாசன தொழில்நுட்பங்கள், வேளாண்மையாளருக்கு உயர் வருமானம் தரும் புதிய பயிர் வகை என்பனவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் வேளாண்மை உற்பத்தி விளைவினை மேம்படுத்தும் முகமாக வேளாண்மை யாளர் மத்தியில் ஊக்குவிப்பு பிரச்சாரங்களை மேற்கொண்டது. மீளாய்வுக்குரிய ஆண்டில் சோளம், இஞ்சி மற்றும் சூரியகாந்தி போன்றவற்றின் பயிர்ச்செய்கையினைப் பொறுத்தவரை உற்பத்தி யாக்கத்திலும் வேளாண்மையாளரின் வருமான மட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி அவதானிக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீளாய்வுக்குரிய ஆண்டில் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைக்கும் முகமாக உள்ளீட்டு வழங்குநர், விதை இறக்குமதியாளர், விதை உற்பத்தியாளர், ஏற்றுமதியாளர் வேளாண்மை பண்டவாங்குநர் மற்றும் பங்கேற்பு நிதிநிறு வனங்களுடன் பல்வேறு பூர்வாங்கக் கூட்டங்களை நடாத்தியது. அரசாங்கத்தின் வட்டி உதவித்தொகை அனுசரணையுடன் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டங்களுக்கு விரிவுபடுத்துவதன் ஊடாக, முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தமும் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. 2004/05 பெரும்போகம் மற்றும் 2005 சிறுபோகம் ஆகிய இரு பயிர்ச்செய்கை பருவகாலங்களிலும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன்

## 2005 இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள்

| | செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் முகவர் | பணித் திட்டங்கள் | ஆரம்ப ஒதுக்கு | கடன்படுநர்களுக்கான ஆண்டு வட்டிவீதம் | 2005.12.31 வரைக்குமான வழங்கலும் தொகையும் (ரூ.மில்.) | மீளப்பெறல் % |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (1999 - 2005) | ஆ.அ.வ | சிறு தேயிலை உடமையாளர்களின் வருமானத்தினை உறுதியான அடிப்படையில் உயர்த்துதல் செயற்றிட்டப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலை மேம்படுத்தலும், அவசியமான உட்கட்டமைப்பினை அப்பகுதியில் அபிவிருத்தி செய்தல் | ஐ.அ.டொ 28 மில். | ஆண்டொன்றுக்கு சநிலை வீதம் 8.5% இலிருந்து 10.5% (கள அபிவிருத்திக்கு) சநிலை வீதம்+6% (தொழிற்சாலை நவீனமயமாக்கல்) | (i)2,678<br>(ii)2,963 | 96% |
| 2. | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1998-2005) | ஆ.அ.வ | நிரந்தரப்பயிர்களின் துறையின் உற்பத்தியை வர்த்தகமயப் படுத்தலையும் அதிகரித்தல் நாற்று மேடையை அபிவிருத்தி செய்தல் அறுவடைக்குப் பின்னைய கையாளல், பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் | சி.எ.உ 11.562 மில். | ஆண்டொன்றுக்கு ச.நிலை.வீதம் 8.5% இலிருந்து 10.5% | (i)6,250<br>(ii)1,453 | 95% |
| 3. | தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் (2000-2006) | ஆ.அ.வ | உயர்ந்த தகைமைபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்காகவும், தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மை, கிராமிய மற்றும் நகர் இளைஞர்களிடையேயான வேலைவாய்ப்பின்மையினையும் கருத்திற்கொண்டு தரத்தினையும் தொடர்பான தேர்ச்சிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்துவது. | சி.எ.உ. 0.657 மில். | 10 சதவீதம் | (i)549<br>(ii)56 | 97% |
| 4. | நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் (2000-2005) | | குறைந்த வருமானமுடைய குடும்பஅலகுகளுக்கு வீடமைப்பு மேம்பாடுகளுக்காக மூலதனம் வழங்குவதற்கு. | ஐ.அ.டொ. 20 மில். | 11.9 சதவீதம் | (i)28,971<br>(ii)1,873 | 91% |
| 5. | வறுமை ஒழிப்பு; நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (2000-2006) | ப.ஒ. யப்பானிய வங்கி | கிராமிய வறிய மக்களுக்கு வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு வழக்கமான கொடுகடனை ஏற்படுத்தவதற்கான, வலுவான கொடுகடன் வழங்குதல் நுட்பத்தினை அமைத்தலும் நன்மை பெறுவோரின் பொதுநலன்புரி வேலைகளும் | யப்பானிய யென் 1.368 மில். | 16-20 சதவீதம் | (i)36,981<br>(ii)741 | 94% |
| 6. | சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (1990-2005) | வே.அ.ப.நி<br>க.ப.அ.க இலங்கை அரசு | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாகக் கடன் வழங்கல் முறைமையினைத் தாபிப்பதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலும். | சி.எ.உ 4.85 மில். | சந்தை வீதங்கள் 16-20 சதவீதம் | (i)106,632<br>(ii)1,513 | 96% |
| 7. | மாத்தளை பிரதேச பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (2000 - 2006) | வே.அ.ப.நி | கிராமப் புறங்களிலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களினதும் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள வேளாண்மைக் குடும்பங்களினதும் வருமானத்தை உயர்த்தி வலுவாக்கல் | சிஎஉ 2 மில். | 12 சதவீதம் | (i)639<br>(ii)52 | 94% |
| 8. | புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | அவஉதொபகொநி | சிறிய வேளாண்மையாளரின் தொழிற்படும் மூலதன தேவைப்பாடுகளுக்கான ஏற்பாடுகள்<br>- குறுகிய தவணை உற்பத்திக் கடன்கள்<br>- விதை தாவரப் பொருள் உற்பத்தி<br>- முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வேளாண்மை பொருட்களை கொள்வனவு செய்தல் | பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் நிதியங்கள் | 8 சதவீதம் | (i)70,196<br>(ii)1,620<br>(இவ்வாண்டில்) | 91% |
| 9. | சப்பிரகமுவ கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதியம்) செயற்றிட்டம் (1997-2006) | இலங்கை அரசு | வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளை முன்னேற்றுவதன்மூலம் செயற்றிட்ட பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | இல.ரூபா 100 மில். | 10 சதவீதம் | (i)13,410<br>(ii)569 | 92% |
| 10. | தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதி) (2000-2006) | இலங்கை அரசு | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 8.1 மில். | 12 சதவீதம் | (i)2,100<br>(ii)100.6 | |
| 11. | (சுசகன) சுனாமி நிவாரண கடன் திட்டம் | இ.ம.வ | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குதல் | இல.ரூபா 3 பில்லியன் | 6 சதவீதம் | (i)9,360<br>(ii)4,445 | சலுகைக் காலத்திற்குள் |
| 12 | சிறிய வியாபார மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் | ப.ஒ. யப்பானிய வங்கி | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர கைத்தொழில்களை மீளத் தொடங்குதல் | யப்பானிய யென் 3 பில்லியன் | 6 சதவீதம் | சுசகனாவின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் சிறிய வியாபார மீள் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றப்பட்டது. | சலுகைக் காலத்திற்குள் |
| 13. | ஜீவன சக்தி நுண்பாக கொடுகடன் நிகழ்ச்சித்திட்டம் | ஐநா.நி.நி. | சுனாமியனால் பாதிக்கப்பட்ட நுண்பாக தொழில் முயற்சிகளை மீள ஆரம்பிக்க உதவுதல் | ஐ.அ.டொ. 1 மில். | 6-8 சதவீதம் | | |
| 14. | கிராமிய நிதித்துறை அபிவிருத்திச்செயற்றிட்டம் | ஆ.அ.வ | நாட்டின் நுண்பாக நிதித்துறையினைப் பலப்படுத்துவதற்கு | ஐ.அ.டொ 70 மில். | தமது தகுதியினையும் அமைப்பினையும் அபிவிருத்தி செய்ய பங்குதாரர்களுக்கு உதவியளிக்கும் கொள்கைக் கடன் திட்டம் | | பொருந்தாது |

திட்டத்தின் கீழ் மொத்தத் தொகையான ரூ.4.03 பில்லியன் பங்கேற்பாளர் நிறுவனங்களினூடாக 66,953 வேளாண்மையாளருக்கும் 1,269 வாங்குநர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளினதும் நீண்டகால நிதியியல் ஆற்றலினை உறுதிசெய்யும் முகமாக தொடர்ந்தும் அவற்றின் செயற்பாடுகளை கண்காணிப்புச் செய்தது. பிரதேச அபிவிருத்தி வங்கிகள் அனைத்தும் 2005 ஆம் ஆண்டில் அனைத்து நிதியியல் விகிதங்களிலும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினை அடைந்து அவற்றின் 2005 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட இலக்குகளை விஞ்சிய அளவில் இலாபங்களை பதிவு செய்தன. கிராமிய நிதியியல் துறை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கியின் மீளமைப்பு நிகழ்ச்சி திட்டத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைத்திருக்கப்பட்ட அனைத்து பங்குகளும் தொகுதிக்கடன்களும் 2005 யூனில் இலங்கை அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டன. இதன்படி ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளிலுமுள்ள ரூ.160 மில்லியன் பெயரளவுப் பெறுமதியைக் கொண்ட 16 மில்லியன் பங்குகள் 2004 இறுதியில் அத்தகைய பிர தேச அபிவிருத்தி வங்கிகளின் தேறிய சொத்துக்களின் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப் படுவதற்கு பரிசீலிப்பதற்காக மாற்றம் செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட பங்கு மாற்றலினைத் தொடர்ந்து கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் செயலாற்றத்தினை கண்காணிக்கும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் தொழிற்பாடும் நிறுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மூன்று அபிவிருத்தி கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களான தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், இரண்டாவது நீண்டகால பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டம் நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்றிட்டம் என்பன 2005 இல் அட்டவணையிட்டவாறு திருப்திகரமாக முடித்து வைக்கப்பட்டன. தொடர்பான அமைச்சுக்களின் வேண்டுகோளின்படி மீளாய்வின் கீழான ஆண்டில் மேல்குறிப்பிட்ட முதல் இரண்டு செயற்றிட்டங்கள் தொடர்பிலான இரண்டு மீண்டும் மீண்டும் பயன்படுத்தத்தக்க கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இறுதிப்படுத்தப்பட்டன.

மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் மூன்று

**அட்டவணை II.14**

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டவை 2004 –2005**

| பயிர்ச் செய்கைப் பருவகாலம் | வேளாண்மை யாளர்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூ.மில்) | வேளாண்மை உற்பத்திகளை வாங்குவோரின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| 2004/05 பெரும்போகம் | 39,641 | 964.9 | 678 | 1,389.5 |
| 2005 சிறுபோகம் | 27,312 | 655.5 | 591 | 1,022.8 |
| மொத்தம் | 66,953 | 1,620.4 | 1,269 | 2,412.3 |

பிரதேச அலுவலகங்களும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் தொடர்பான பிரதேசங்களின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள இரண்டு பிரதேச அலுவலகங்களும் தமது தொடர்பான பகுதிகளில் மிகவும் பின்தங்கிய அமைவிடங்களுக்குள் ஊடுருவி கிராமிய குடும்ப அலகுகளில் பொருளாதார, சமூக நிலைமையினை உயர்த்துவதற்கு நிதி மற்றும் நிதியல்லாத பணிகளுக்கான ஒரு பொதியினை ஏற்படுத்தின. மாத்தறை பிரதேச அலுவலகமானது தென் பிராந்தியத்தில் சுசகன கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான களபரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உதவி புரிந்தது. மூன்று பிரதேச அலுவலகங்களும் தொடர்ந்தும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் ஊடாக வேளாண்மைச் சந்தைப்படுத்தலை ஊக்குவித்த வேளையில் பிரதேச தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்கும் ஏனைய பணிகளை வழங்குவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களுக்கும் உதவின.

இரண்டு பிரதேச அலுவலகங்களும் வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் நெல், சோளம், சோயா அவரை, இஞ்சி மற்றும் பப்பாசி போன்றவற்றிற்காக ரூ.815 மில்லியன் கொண்ட 33,700 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஏற்படுத்தக் கூடியனவாக இருந்தன.

## 17. செயலகத் திணைக்களம்

2005 இல் செயலகத் திணைக்களம் வங்கிக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, வங்கி அலுவலர்களுக்கான வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பயணங்கள், பொதுநிருவாகம், உபசரணைத் தொழிற்பாடுகள், விடுப்புக்கொள்கை விடயங்கள் மற்றும் உபயோகத்திலில்லாத பொருட்களை அகற்றுதல் போன்ற ஏனைய பல வகைப்பட்ட

நிருவாகத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. திணைக்களம், பயணம் பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு முற்பணங்களின் தீர்ப்பனவு என்பனவற்றினையும் மேற்கொண்டது. முன்பு வெளிமூலங்களி லிருந்துபெற்றுக் கொள்ளப்பட்ட அஞ்சல் அறைத் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் அதே ஏற்பாடுகளுடன் பெறப்பட்டன.

வங்கியின் நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக உரிய காலத்திற்கு முன்னரான சுயவிருப்பு ஓய்வூதியத்திட்டம் II விளக்கியதுடன், செயலகத் திணைக்களத்தினைத் சேர்ந்த எட்டு ஊழியர்கள் 2005 இறுதியில் ஓய்வு பெற்றனர்.

## 18. பாதுகாப்புப் பணிகள் திணைக்களம்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோளாக மத்திய வங்கி ஊழியர்கள், கட்டடங்கள் அதன் சொத்துக்கள் என்பனவற்றைப் பாதுகாப்பதும் நாணயங்களை எடுத்துச்செல்லும் வேளையில் அவற்றிற்கு பாதுகாப்பு வழங்குதலும் என்பன காணப்பட்டன.

(அ) மத்திய வங்கியின் மிக இன்றியமையாத தொழிற்பாடுகளுக்காக தொடர்ச்சியான வியாபாரத் திட்டத்தினை தயாரிப் பதிலும் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் தீவிரமாகப் பங்கேற்றது.

(ஆ) எதிர்பாராது ஏற்படும் எந்தஒரு எதிர்பாரா நிகழ்வினையும் எதிர் கொள்ளத்தக்க விதத்தில் திணைக்களங் களுக்கென எதிர்பாரா திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. எதிர்பாரா திட்டத்தின் கீழ் அச்சுறுத்தல் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல், செயற்படுத்தல், காயப்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்தல் ஊழியர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப் படுத்துதல் போன்றவற்றுக்கு உதவியளித்தலுக்கென அலுவலர்களை கொண்ட சிறப்புக்குழு ஒன்றுக்கு பயிற்சி யளிக்கப்பட்டுள்ளது.

(இ) தலைமையக ஊழியர்களுக்கு புறம்பாக ராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் மற்றும் பிர தேச அலுவலர்களின் ஊழியர்களுக்கும் இவ்வாண்டில் தீக்கு எதிராக போராடும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயல்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஈ) 05.11.20 இலும் 2005 திசெம்பர் 3 ஆம் 4 ஆம் நாட்களிலும் ஆயுதப்பயிற்சியும், சுடுகலன்கள் பயிற்சியும் நடாத்தப் பட்டது.

(உ) இலங்கை மத்திய வங்கியினது தலைமையகம் மற்றும் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினதும் பௌதீக ரீதியான பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது.

(ஊ) சிறந்த பயிற்சியின் மூலமும் அலுவலர் களுடனான நடைமுறை கலந்துரை யாடல்கள் ஊடாகவும் பாதுகாப்பு அலுவலர்களின் ஆற்றலினை உயர்த்து வதற்கு சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது.

## 19. புள்ளி விபரவியல்

புள்ளி விபரவியல் திணைக்களம் 2005 இலும் தேசிய கணக்குகள் விலைகள் மற்றும் கூலிகள், தொழிற்படை மற்றும் தொழில்நிலை மற்றும் ஏனைய சமூக பொருளாதாரத் துறைகளின் மீதான தரவு சேகரித்தல் திரட்டுதல் பகுப்பாய்வு என்பனவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இத்திணைக்களமானது தேசிய சமூக பொருளாதார புள்ளி விபரங்களின் தரத்தினை மேம்படுத்தி சரியான நேரத்தில் வெளியிடுவதற்காக ஏற்கனவேயுள்ள தரவு முறைகளை முன்னேற்றுதல் மற்றும் புதிய தகவல் முறைமையை விருத்தி செய்தல் என்பனவற்றில் கவனம் செலுத்தியது. இவ்வாண்டில் திணைக்களத்தின் முக்கிய சாதனையாக நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 இன் அறிக்கைகளை அச்சிலும் இலத்திரனியல் வடிவிலும் வெளியிட்டமையும் அதனைத் தொடர்ந்து பல ஆய்வரங்குகளும், பகிரங்க சொற்பொழிவுகளும் இடம்பெற்றமையும் விளங்கின. இதற்கு மேலாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் ஊடக கலந்துரையாடல்கள் என்பவற்றுக்கு மூலவள ஆட்களை கொடுத்துதவியதன் மூலம் திணைக்களமானது ஆண்டு முழுவதும் மத்திய வங்கியின் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் திணைக்களத்தின் தரத்தினையும் உற்பத்தித் திற னையும் மேம்படுத்துவதினை நோக்கமாக கொண்டு இவ்வாண்டில் அநேக அலுவலக உறுப்பினர்கள் தமது அறிவாற்றலை அதிகரிக்கும் பொருட்டு ஆண்டு

முழுவதிலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் செயலமர்வுகளிலும் பங்கேற்றனர்.

## 19.1 நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04

இவ்வாண்டு, இத்திணைக்களத்தின் நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 இன் காலாந்தர செயற்றிட்டத்தின் பூர்த்தியாக்கத்தைக் குறிக்கின்றது. 1953 இல் தொடங்கப்பட்ட பல நோக்கங்களைக் கொண்ட குடியிருப்பாளர் அளவீடுகளின் 8 ஆவது தொடர் இதுவாகும். இந்த அளவீட்டின் முக்கிய சாதனையாக விளங்குவது யாதெனில் கிழக்கு மாகாணத்தினையும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் மட்டும் தவிர்ந்த வடமாகாணம் முழுவதையும் உள்ளடங்கிய குடியிருப்பாளர் குடித்தொகையினை இவ்வளவீடு உள்ளடக்கியிருப்பதாகும்.

நுகர்வோர் நிதிய மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 அறிக்கை இரு பகுதிகளாக பரப்பப் பட்டுள்ளது. அறிக்கையின் பகுதி I பொதுவான தன்மையினையும் குடித்தொகை, கல்வியும் நலத் துறையும், தொழிற்படை, வீடமைப்பும் வாழ்க்கை நிலையும், வருமானம், நுகர்வும் செலவினமும் மற்றும் சேமிப்பு, முதலீடு மற்றும் குடியிருப்பாளரின் கடன்பாடுகள் போன்ற ஏழு பகுதிகளை உள்ளடக்கிய அளவீட்டில் கண்டறியப்பட்டவைகளை பகுப்பாய்வு செய்கிறது. பகுதி I முன்னைய 1996/97 நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டிலிருந்து கண்டறியப்பட்டவைகளின் ஒப்பீட்டினைத் தருகின்றது. அறிக்கையின் பகுதி 2 ஆனது பகுதி I இல் உள்ளடக்கப்பட்ட ஏழு முக்கிய பகுதிகளின் கீழ் தரப்பட்டுள்ள விபரமான வரிசைப்படுத்தப்பட்ட தகவல்களை மாகாண ரீதியிலும் துறைரீதியிலும் (நகர, கிராமிய, தோட்டப்புற) பிரித்துத் தருகின்றது. பரந்த அடிப்படையில் தகவலை பரப்பும் உத்தியாக திணைக்களம் 2005 செத்தெம்பரில் நுகர்வோர் நிதிய மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 இல் முக்கியமாக கண்டறியப்பட்டவை சிங்களத்திலும், தமிழிலும் சுருக்க அறிக்கையாக வெளியிடப்பட்டது. இவை 2005 செத்தெம்பரில் பகுதி I மற்றும் பகுதி II அறிக்கையுடன் வெளியிட்டு வைக்கப்பட்டன. இதற்கு மேலாக, திணைக்களமானது நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 மற்றும் நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 1996/97 என்பனவற்றின் நுண்பாக தரவுகளை ஆய்வு நோக்கங்களுக்காக உள்ளார்ந்த பயன்பாட்டாளருக்காக இறுவட்டிலும் கிடைக்கத் தக்கதாக செய்துள்ளது. அறிக்கைகளிலும் நுண்பாக தரவுகளினதும் விற்பனைகளிலிருந்து கிடைக்கத் தக்கதான செலவு மீளப்பெறல் 2006 மார்ச்சு அளவில் ரூ.1.5 மில்லியனாக இருந்தது.

## 19.2 நாடாளாவிய தரவுச் சேகரிப்பு முறை

நாடளாவிய தரவுச்சேகரிப்பு முறையின் கீழ் விலைகள் மற்றும் கூலிகள் தரவு சேகரிப்பானது சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்ததுடன் பெறுபேறுகளை தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்தது. 2004 இல் நாடாளாவிய தரவுச் சேகரிப்பு முறையின் வடகீழ் மாகாணங்களுக்கும் விரிவடைந்தமையின் காரணமாக திணைக்களமானது 2005 இல் 107 நாடாளாவிய தரவுச் சேகரிப்பு முறைகளிலிருந்து தரவுகளை சேகரித்தது. தரவுச் சேகரிப்பினைப் பூரணப்படுத்துவதற்கான புதிய படிவத்தினை அறிமுகப் படுத்தியமையின் காரணமாக ஆண்டின் தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட வருடாந்த நேர அட்டவணைக்கிணங்க தரமான தகவல்கள் உரிய நேரத்தில் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஆசிரிய பரீட்சகர்களின் மேற்பார்வை வலுப்படுத்தப்பட்டது. தலத்திற்கு வெளியேயான மற்றும் தலத்திலான கள மேற்பார்வைகள் வடகீழ் மாகாணங்களுக்கு வெளியே நிறுவப்பட்ட அனைத்து மையங்களிலும் நடாத்தப்பட்ட வேளையில் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை வடகீழ் மாகாணங்களில் நிறுவப்பட்ட அனைத்து 7 மையங்களிலும் நடத்தப்பட்டன. முன்னரைப்போலவே தமது தரவு சேகரிப்பில் தரம் வினைத்திறன் துல்லியம் சரியான நேரம் என்பவற்றை மேம்படுத்தும் முகமாக பரீட்சிப்பாளருக்கு புதிய பயிற்சியளித்தலுக்காகவும் பொருளாதாரத்தில் காணப்படும் சமகால நிகழ்வுகள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுதலின் மூலம் அந்த அறிவாற்றல் அவர்களது மாணவர்களுக்கும் சமூகங்களுக்கும் சென்றடைவதற்காகவும் நான்கு பிரதேச ஆய்வரங்குகள் கொழும்பு, மாத்தறை, அநுராதபுரம், கண்டி போன்ற இடங்களில் நடாத்தப்பட்டன. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கமானது ஆசிரிய பரீட்சர்களிடையே பொருளாதார விடயங்களில் காணப்பட்ட மேம்பட்ட அறிவாற்றலிலும் ஈடுபாடுகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின் கீழ் தரவு சேகரிப்பு நிலையங்களை ஒழுங்கு படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் இவ்வாண்டில் முற்றுப்பெற்றன.

## 19.3 தேசிய பிராந்திய பிரதேச வருமானக் கணக்குகள்

திணைக்களம் மேலும், முன்னேற்றங்களுடன்

இலங்கையின் தேசிய கணக்குகளின் வருடாந்த, காலாண்டு மதிப்பீடுகளைத் திரட்டுவதிலும் பரப்புவதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டது. தனியார் நுகர்வுச் செலவினம் பற்றிய மதிப்பீடுகள் நுகர்வோர் நிதிய மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 இலிருந்து கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தியதன் மூலம் மேம்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொடக்க வேலைகளைத் தொடர்ந்து தேசிய கணக்குகள் தொகுப்பிலுள்ள ஊழியர் சேமநிதிய தரவுத் தளத்திலிருந்து கிடைக்கத்தக்க தகவல்களை பிரித்தெடுத்து ஒன்று திரட்டுவதற்கான ஒருமுறை மை 2005 இல் அபிவிருத்தி செய்யப்பட்டது. கொழும்பு பங்குச்சந்தையில் அட்டவணையிடப்பட்ட கம்பனிகளின் செயலாற்றமானது பொதுவான பொருளாதார நடவடிக்கை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றிற்கு அவர்களினது பங்களிப்பினை மதிப்பீடு செய்யும் முகமாக ஆய்வு செய்யப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தகவல்களை வழங்குவதானது பன்னாட்டு நியம கைத்தொழில் பகுப்பாய்விற்கு இணையான அடிப்படையில் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளின் வருடாந்த மற்றும் காலாண்டு மீள்பகுப்பாய்வின் ஊடாக மேம்படுத்தப்பட்டன. 2003 இல் தொடங்கப்பட்ட செலவின முறையின் மூலம் காலாண்டு தேசிய கணக்குகளின் மீது ஒரு தரவுத் தொடரினை உருவாக்கும் வேலைகள் 2005 இலும் தொடர்ந்தன.

முன்னைய ஆண்டுகளைப் போன்று திணைக்களமானது 2004 இற்கான மாகாணவாரியாக பகுக்கப்பட்ட வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்திகளை ஓராண்டு தாமதத்துடன் திரட்டி பரப்பியது. மாகாண ரீதியாக பிரிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திகள் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்படும் பிராந்திய வேறுபாடுகளை அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவது மற்றும் நாட்டின் வளர்ச்சி செயலாற்றம் என்பன பற்றிய முக்கியமான கொள்கைக் கலந்துரையாடல்களில் இப்புள்ளி விபரங்கள் முக்கிய இடத்தினை வகித்தமையினை திணைக்களம் கவனித்துள்ளது.

### 19.4 விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலையும்

திணைக்களமானது ஆறு மாதாந்த விலைச்சுட்டெண்களைத் திரட்டி பகுப்பாய்வு செய்துள்ளது. ஐந்து பிரதேசவாரியான நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் ஐந்து வேறுபட்ட பிராந்தியங்களின் சில்லறை விலைகளில் காணப்பட்ட சராசரி விலை அசைவுகளை அளவிட்டவேளையில் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் அதே சில்லறை விலைகளின் சராசரி அளவுகளை உற்பத்தியாளர் அல்லது மொத்த விற்பனை விலை அசைவுகளுக்காக அளவிட்டது. அனைத்து சுட்டெண்களையும் திரட்டுவதற்கு அவசியமான விலைகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை ஊடாக அல்லது வெளிமூலங்களிலிருந்து பெறப்பட்டு திணைக்களத்தினால் பயிற்றப்பட்ட பரீட்சையாளரூடாக சேகரிக்கப்பட்டன. வெளிமூலங்களிலிருந்தான தரவு சேகரிப்பு முறையின் கீழ் தகவல்கள் கொழும்பு மாவட்டத்தில் உள்ள 7 சந்தை நிலையங்களிலிருந்தும் மற்றும் 3 பிரதேச பொருளாதார மையங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டன.

மேலும், திணைக்களம் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பனவற்றின் அடிப்படையிலமைந்த நுகர்வோர் விலைகளின் அசைவுகளது பகுப்பாய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இத்திணைக்களம் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்களினால் அளவிடப்படும் பணவீக்க அசைவுகள் மீதான மாதாந்த ஊடக வெளியீட்டினைத் தொடர்ந்தும் வெளியிட்டது. முறைசாரா கூலிகள் தரம் மற்றும் தரவுகளின் உள்ளடக்கத்தினை மேம்படுத்தும் முகமாக முறைசாரா துறைக் கூலிவீதச் சுட்டெண்ணின் அபிவிருத்தியானது தொடர்ந்தும் இடம்பெற்றது. நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/04 இலிருந்து நுகர்வோர் செலவினத் தகவல்களைப் பயன்படுத்தி அனைத்து ஒன்பது மாகாணங்களுக்குமான நுகர்வோர் விலைச் சுட்டெண்களை தொகுக்கும் செயற்றிட்டம் 2005 இல் தொடங்கப்பட்டுள்ளது.

வருடாந்த மற்றும் காலாண்டு அரசதுறை தொழில்நிலை அளவீடுகளை இத்திணைக்களம் தொடர்ந்தும் நடாத்தியது. இரண்டு அளவீடுகளிலிருந்தும் கிடைத்த தகவல்கள் தேசிய கணக்குகளினதும் காலாண்டு அறிக்கைகளினதும் தொகுப்புக்களுக்கு பயன்படுத்தப்பட்டன. தொழிற்படை மற்றும் தொழில்சந்தையின் வருடாந்த மற்றும் அரையாண்டு பகுப்பாய்வுக்கு மேலதிகமாக, காலாண்டு அறிக்கை உள்ளடக்கத்தினை வெளிநாட்டுத் தொழில்நிலை தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் போன்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம் ஒரு

காலாண்டு தொழில்சந்தையின் மீளாய்வு தொடங்கப்பட்டது.

### 19.5 புள்ளி விபரங்களைப் பரப்புதல்

இவ்வாண்டில் புள்ளிவிபரத் திணைக்களம் செத்தெம்பரில் வெளியிடப்பட்ட நான்கு நுகர்வோர் நிதி அளவீடு 2003/04 வெளியீடுகளுக்குப் புறம்பாக அதன் இரண்டு வருடாந்த வெளியீடுகளான "சமூக பொருளாதாரத் தரவு" (தொகுதி xxviii) யூனிலும் இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள்-2005 (தொகுதி xxvii) இனை செத்தெம்பரிலும் வெளியிட்டு வைத்தது. இலங்கை மத்திய வங்கியின் 2006 ஆம் ஆண்டிற்கான கையடக்க தினக் குறிப்பிலுள்ள புள்ளி விபரவியல் அட்டவணைகள் பூரணப்படுத்தப்பட்ட வேளையில், பயன்பாட்டாளர்களுக்காக நு.நி.அளவீடு 2003/04 இலிருந்து ஆரம்ப புள்ளிவிபரங்களை வழங்குவதற்காக அனைத்து வெளியீடுகளிலும் புதிய அட்டவணைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இவ்வாண்டில் இத்திணைக்களம் சட்டரீதியான அதேபோன்று மத்திய வங்கியின் ஏனைய வெளியீடுகளுக்கும் கிரமமான பங்களிப்புக்களை வழங்கியது. நாணயச்சபைக்கு தேசிய வருமானம், பணவீக்கம், விலைகள், கூலிகள் மற்றும் தொழில்சந்தை என்பன தொடர்பாக தற்பொழுது கண்டறியப்பட்ட விடயங்கள் காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் அறிவிக்கப்படுகின்றன. திணைக்களம் வங்கியிலுள்ள உள்ளூர் வலையமைப்பிலிருக்கும் திணைக்களத்தின் வெப்தளமான "ஸ்ரா நெட்" இனை தொடர்ந்தும் கிரமமாகப் பூரணப்படுத்தியதுடன் வங்கியின் வெப்தளத்திற்கு ஆண்டு முழுவதும் பங்களிப்புச் செய்தது.

### 19.6 மத்திய வங்கியின் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கான பங்களிப்பு

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய வங்கியினாலும் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு ஆய்வரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் தொடர்களில் மூலவள ஆட்களாக கிரமமான முறையில் தொழிற்பட்டனர். 2005 இல் திணைக்களம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் புள்ளி விபரவியல் திணைக்களத்தைச் சேர்ந்த இரு பட்டதாரி மாணவர்களுக்கு உள்ளக பயிற்சியினைத் தொடர்ந்தும் வழங்கியதுடன் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் உதவியளித்தது.

## 20. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட முன்மதித் தேவைப்பாடுகளுக்கு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் இசைவாக நடந்து கொள்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளை ஒழுங்கு முறைப்படுத்தி மேற்பார்வையிடலைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இத்திணைக்களமானது பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகையிடல் நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்குமுறைப்படுத்தி கண்காணிப்பு நடவடிக்கைகளையும் நிறைவேற்றுகின்றது.

இவ்வாண்டில் ஒரு புதிய நிதிக்கம்பனி பதிவு செய்யப்பட்டு 2005 இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியின் மொத்த எண்ணிக்கையினை 28 ஆக அதிகரித்தது. மூன்று நிதிக் குத்தகை நிறுவனங்கள் 2005 இறுதியில் பதிவு செய்யப்பட்டதன் மூலம் நிதிக் குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 68 ஆக விளங்கியது.

### 20.1 பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகள்

அ. தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினை மேற்கொள்ளும் செயற்பாட்டின்போது, நிதிக் கம்பனிகளின் நிதியியல் நிலைமைகளை கண்டறிந்து கொள்ளும் நோக்குடன் காலத்திற்குகாலம் நிதிக்கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதியியல் கம்பனிகள் சட்டவிதியின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கி ஒழுகுகின்றனவா என்பதும் கண்காணிக்கப்பட்டது. நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றையவற்றுடன் ஆகக் குறைந்த மூலதனம் மற்றும் திரவத் தேவைப்பாடுகள் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள், தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை மற்றும் பங்கு முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

சில சமயங்களில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளில் ஒரு சில முன்மதியுடைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாது நடந்துகொண்ட

போதிலும் பொதுவாக பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தொடர்ச்சியான அடிப்படையில் இசைவாக நடந்து கொண்டுள்ளன. அத்தகைய இணங்கியொழுகாத பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கு திணைக்களமானது அத்தகைய சட்ட மீறல்களை சீர்படுத்துவதற்குரிய காலவரையறைகள் வழங்கப்பட்டதுடன் அவர்களினால் மேற்கொள்ளப்படும் சரியான நடவடிக்கைகளையும் நெருக்கமாக கண்காணித்தது.

ஆ. தலப் பரீட்சிப்புக்கள்

திணைக்களமானது மூலதனப்போதுமை, சொத்துக்களின் தரம், முகாமைத்துவ வினைத் திறன், வருவாய், திரவத்தன்மை, உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முறைகள் நியதித் தேவைப்பாடுகளுக்கு கம்பனிகள் இணங்கி ஒழுகுதல் என்பவற்றினை மதிப்பீடு செய்யும் பொருட்டு இவ்வாண்டுக் காலத்தில் திணைக்களம் நான்கு நிதிக்கம்பனிகளின் அனைத்தையும் உள்ளடக்கிய தலப்பரீட்சிப்புக்களை மேற்கொண்டுள்ளது. உரிமம் வழங்குவதற்கு முன்னராக தலப்பரீட்சிப்புக்கு உட்படாத பதிவு செய்யப்பட்ட இருபத்து நான்கு நிதிக்கம்பனிகள் எல்லாவற்றின் மீதும் உடன் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வுடன் பரீட்சிப்புக்கள் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமை மற்றும் முறைகளிலும் கட்டுப் பாடுகளிலும் உள்ள குறைபாடுகள் போன்ற தெரிவு செய்யப்பட்ட முக்கியமான துறைகளை உள்ளடக்கியிருந்தன.

தலப்பரீட்சிப்புக்களின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளுடன் கலந்துரையாடி அத்தகைய குறைபாடுகளை தவிர்ப்பதற்கு சரியான நடவடிக்கைகளை எடுக்குமாறு திணைக்களம் வலியுறுத்தியது. முடிந்தளவிற்கு உடனடியாக சரிசெய்யும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதுடன் பணிப்பாளர் சபைகளினால் மீதமுள்ள எந்தஒரு குறைபாடுகளையும் நிவர்த்தி செய்வதற்கான உத்தரவாதமும் வழங்கப்பட்டது.

(இ) பணிப்புரைகளையும் ஒழுங்கு விதிகளையும் வழங்குதல்

இவ்வாண்டில் 2002 ஆம் ஆண்டின் நிதியியல் கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரை இலக்கம் I இற்குப் பதிலாக 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதியியல் கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரை வழங்கப் பட்டதன் மூலமாக பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகள் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு பொருந்தத்தக்க முன்மதியுடைய தேவைப்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான தொடர்பான அம்சங்கள் மீதான ஏற்கனவேயுள்ள பணிப்புரைகளுக்குப் பதிலாக 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (திரவச்சொத்து) பணிப்புரை விடுக்கப்பட்டது. இப்பணிப்புரைகளின் விளக்கம் யாதெனில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகள் சேமிப்புக் கணக்குகளை தொழிற்படச் செய்வதனூடாக குறைந்த செலவிலான நிதியங்களை திரட்ட முடிவதுடன் சேமிப்பாளர்களுக்கு முதலீட்டிற்கான மாற்று வழிமுறையினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் நன்மைகள் வழங்கப் படுகின்றன.

2005 காலப்பகுதியில் பின்வரும் பணிப்புரை களும் ஒழுங்குவிதிகளும் வழங்கப்பட்டன.

(i) 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வியாபாரத்திற்காக அலுவலகங்களை மூடிவிடல்) பணிப்புரை

(ii) 2005 ஆம் ஆண்டின 5 ஆம் இலக்க நிதியியல் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை

(iii) 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதியியல் கம்பனிகள் (கிளைகளை/ அலுவகத்தினை திறத்தல்/ இடம்மாறுதல்/ மூடுதல்)

(iv) 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதியியல் கம்பனிகள் (பதிவு செய்தலும் உரிமம் வழங்குதலும்) ஒழுங்குவிதிகள்.

## 20.2 பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்கள்

(அ) நிதிக் குத்தகை நிறுவனங்களைப் பதிவு செய்தல்

நிதிக் குத்தகையிடல் சட்டத்தின் நியதிகளின்படி நிதிக் குத்தகை வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு பதிவுச் சான்றிதழ் ஒன்று அவசியமாகும். இவ்வாண்டில் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, இரண்டு பகிரங்க கம்பனிகள் உட்பட (இவை சிறப்பியல்பு குத்தகைக் கம்பனிகளாகும்) 3 கம்பனிகள். நிதிக் குத்தகை ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன. 2005 இன் இறுதியில் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 68 ஆக விளங்கி 13 உரிமம் பெறப்பட்ட வர்த்தக வங்கிகள், 7 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள், 28 பதிவு செய்யப்பட்ட நிதியியல்

கம்பனிகள், 20 சிறப்பியல்பு குத்தகைக் கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**(ஆ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கண்காணிப்பு**

2003 ஒகத்தில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளிடமிருந்து கிரமமான முறையில் முக்கியமான தகவல்களை பெறும்பொருட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளரினால் பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. அதிலிருந்து திணைக்களம் சிறப்பியல்பு வாய்ந்த நிதிக்கம்பனிகளின் அலுவல்களை நெருக்கமாகக் கண்காணித்து வருகின்றது. பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக் கம்பனிகளின் வியாபாரப் பண்புகளையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்காக ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் ஒழுங்குகளையும் கருத்திற் கொண்டு திணைக்களமானது சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் ஆற்றல்மிக்க தொழிற்பாட்டினையும் உறுதிப்பாட்டினையும் விருத்தி செய்வதற்கு பின்வரும் முன்மதித் தேவைப்பாடுகளுக்கான பணிப்புரைகளை வழங்கியது.

(i) 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் குத்தகை (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்புரை

(ii) 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் குத்தகை (அறவிடமுடியாத, ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்) பணிப்புரை

(iii) 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக் குத்தகை (தனியொரு கடன்பெறுபவர் வரையறை) பணிப்புரை

(iv) 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக் குத்தகை (அதிகரிப்பு விகிதம்) பணிப்புரை

(v) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் குத்தகை (ஒன்று திரண்ட வட்டி) பணிப்புரை

(vi) 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக் குத்தகை (ஒதுக்கு நிதிகள்) பணிப்புரை

2006 சனவரி 2 ஆம் நாள் முதல் இந்தப் பணிப்புரைகள் நடைமுறைக்கு வரும்.

திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பனவற்றின் நிதிக்குத்தகை வியாபாரம் தொடர்பான புள்ளி விபரங்களை காலாண்டு அடிப்படையில் திரட்டும் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

## 20.3 முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி ஒன்பது முறிவடைந்த கம்பனிகள் நாணயச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஆறு கம்பனிகளை 2005 இன் ஆரம்பத்தில் மூடிவிடுவதலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2005 ஆண்டில் இரண்டு கம்பனிகள் மூடப்பட்டதுடன் ஏனைய நான்கு கம்பனிகளையும் ஒடுக்கி விடுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீதமுள்ள மூன்று கம்பனிகளில் இரண்டு 2005 ஆம் ஆண்டில் ஒடுக்கிவிடுபவர்களிடம் கையளிக்கப்பட்டது. மற்றைய கம்பனி மற்றுமொரு கம்பனியிடமிருந்து கடன்தொகையினை மீளப்பெறக் கூடியதாகவிருந்ததால் மற்றுமொரு பகுதி நிதிய வைப்புக்களை மீளளிக்க தொடங்கியுள்ளதுடன், மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முதல் கடன்களில் ஒரு பகுதியினை மீளவும் செலுத்தியது.

## 20.4 நிதி வியாபாரங்களின் அங்கீகாரமற்ற நடத்தை

சட்டபூர்வமற்ற முறையில் நிதி வியாபாரங்களை நடாத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட பல நிறுவனங்களின் விவகாரம் தொடர்பாக திணைக்களமானது தொடர்ந்தும் புலனாய்வுகளை மேற்கொண்டது. அத்தகைய பதினொரு நிறுவனங்கள் தொடர்பாக திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையினைப் பரிசீலித்த நாணயச்சபை நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் கீழ் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் வியாபாரம் நிதிக்கம்பனிகள் சட்டத்திற்கு முரணானது எனத் தீர்மானித்தது. இதனைத் தொடர்ந்து நிதிக்கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்நிறுவனங்களின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவ்வாண்டில் திணைக்களமானது நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கத்தவறியதுடன், எந்தவித சட்ட அங்கீகாரமுமின்றி நிதியியல் வியாபாரத்தினை நிறுவனம் மேற்கொண்டதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அந்த வகையில் 2005 இறுதியில் மத்திய வங்கியானது நிதிக்

கம்பனிச் சட்டவிதிகளின் கீழ் தவறுகளை இழைத்த 6 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2005 மார்ச்சில் 22.09.2004 எனத் திகதியிடப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து இரண்டு கம்பனிகளால் மேன்முறையீடு செய்வதற்கு உயர் நீதிமன்றம் அவற்றிற்கு அனுமதி வழங்க மறுத்தது. உயர் நீதிமன்ற வழக்கில் எதிர்வாதிகளாக வங்கியல்லா நிதி நிறுவனங்களின் பணிப்பாளரும், நாணயச்சபையும் விளங்கின. மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பானது வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு இரண்டு கம்பனிகளிடமிருந்து அவர்கள் நிதியியல் கம்பனிகள் சட்டவிதிகளில் வரையறுக்கப்பட்டபடி நிதியியல் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா, என்பதை உறுதிப்படுத்தும் தகவல்களைப் பெறுவதற்கென அளிக்கப்பட்ட அதிகாரங்களை வலியுறுத்தியிருந்தது.

அதிகாரமளிக்கப்படாத வகையில் நிதியியல் வியாபாரங்களை மேற்கொள்ளும் ஆட்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்படும் விசாரணைகள்/முறையீடுகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. மத்திய வங்கி அத்தகைய ஆட்கள் தொடர்பாக தொடர்ச்சியான அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகளும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டமையும் ஓரளவு காரணமாக இருக்கக்கூடும்.

### 20.5 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

முக்கியமாக நிதி வியாபாரத்தின் அதிகார பூர்வமற்ற நடத்தை தொடர்பான விடயங்களில் திணைக்களம் பொதுமக்களுக்கு தொடர்ந்தும் அறிவூட்டியது. திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கியது.

(அ) செய்திப்பத்திரிகை வெளியீடுகள்

(i) பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் பட்டியலொன்று (2005 சனவரி)

(ii) விளக்கக் குறிப்பானது வைப்புக்களின் வரைவிலக்கணம் உள்ளடக்கிய பல்வேறு சட்டங்களின் கீழ் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்காக அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள்/அமைப்புக்களின் வகைகள் என்பன 2005 மார்ச்சில் மத்திய வங்கியினால் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் ஒன்றையும் உள்ளடக்கியிருந்தது. (2005 மார்ச்சு) 2005 யூலை முதல் இந்த அறிவித்தல் மாதாந்த அடிப்படையில் வெளியிடப்பட்டது. இந்த அறிவித்தல்கள் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருடன் இணைந்து வெளியிடப் பட்டது.

(iii) நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11 (1) இன் கீழ் நடத்தப்பட்ட புலனாய்வுகளுக்காக இரு கம்பனிகளிடமிருந்தும் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் கோரப்பட்ட தகவல்களை பல்வேறு வழிகளில் ஆட்சேகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக அவ்விரு நிறுவனங்களினாலும் தொடுக்கப்பட்ட மேன்முறையீடு உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டமை தொடர்பான பத்திரிகை வெளியீடு - 2005 மார்ச்சு.

(iv) நாணயச்சபை நிதிக்கம்பனிகள் சட்டவிதி 11 (2) ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானம் தொடர்பான 4 கம்பனிகளின் பெயர் மற்றும் முகவரி (2005 மே செத்தெம்பர், ஒத்தோபர் மற்றும் நவெம்பர்)

(v) நாணயச்சபையானது நிதிக்கம்பனிகள் சட்டவிதி 11 (2) இன் கீழ் 2005 நவெம்பர் வரை செய்த தீர்மானம் தொடர்பாக 10 நிறுவனங்களின் பெயர் முகவரி பற்றிய அறிவித்தல்கள். (2005 நவெம்பர்)

(vi) நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11 (2) இன் கீழ் நாணயச்சபையினால் தீர்மானிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்படாத வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற நிறுவனங்களில் முதலீடு செய்வதில் இணைந்துள்ள இடர்நேர்வுகளை எடுத்துக்காட்டும் விதத்தில் "உங்கள் சேமிப்புக்களை மேற்கொள்ளும் இடங்களை மனதில் கொள்ளுங்கள்" என்ற தலைப்பிலும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள்/அமைப்புக்களின் வகைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் பட்டியல் என்பனவற்றைக் கொண்ட அறிவித்தல். (2005 நவெம்பர்)

(ஆ) வைப்புக்களை ஏற்பதற்கு அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்களுடன்

வைப்பிலிடுதல் சம்பந்தப்பட்ட இடர்நேர்வு பற்றி விளக்குகின்ற அறிவித்தல்களையும் வைப்புக்களை ஏற்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள் பற்றிய பட்டியலையும் காட்சிக்கு வைக்குமாறு கிராம சேவகர்களை கேட்டுக் கொள்ளுதல்.

## 21. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம்

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் நிதித் துறை ஆளணியின் அபிவிருத்தியை உறுதிப்படுத்து வதற்கு கடினமாக உழைக்கிறது. வங்கித்தொழில் நிதித்துறையில் முதன்மை வாய்ந்த பயிற்சி நிலையங்களில் ஒன்றாக விளங்கிவரும் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் மத்திய வங்கியின் வங்கித்தொழில் துறை மற்றும் கிராமியத்துறை அபிவிருத்தி மற்றும் நுண்பாக நியதிக்கு விளைவாக அபிவிருத்தியடைந்துவரும் துறையின் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான போட்டித் தன்மையினைப்பெறும் விதத்தில் அவற்றுக்குத் தேவையான கருவிகளை வழங்கும் நிறுவனங்கள் உட்பட ஏனைய நிதித்துறை நிறுவனங்களுக்கும் நிதித்துறையின் ஆண்டு பயிற்சி தேவைகளின் அளவீட்டிற்கிணங்க ஆய்வரங்குகள் செயலமர்வுகள் மற்றும் குறுங்கால பாடநெறிகள் என்பவை வங்கியிலும் வெளிநிறுவனங்களிலும் உள்ள மிகுந்த அனுபவம் வாய்ந்த தேர்ச்சி பெற்ற மூலவள ஆட்களினால் வரையப்பட்டு நடாத்தப்படுகின்றன. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் நவீன பயிற்சிக்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன் சார்க் நாடுகளின் பயிற்சித் தேவைகளையும் ஈடுசெய்யும் நிலையிலுள்ளது. நீண்ட காலத்தில் மத்திய வங்கி கல்வி ஆய்வு நிலையம் சுயமாகவே நிதியிடப்படுகின்ற ஒரு நிறுவனமாக அபிவிருத்தியுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் முன்னைய ஆண்டின் 69 உடன் ஒப்பீடுகையில் 2005 இல் வங்கித்தொழில், நிதி, தகவல் தொழில்நுட்பம், மொழிகளிலான தொடர்பு தேர்ச்சிகள், நுண்பாக நிதியினை உள்ளடக்கியதாக கிராமியத்துறை அபிவிருத்தி போன்ற துறைகளை உள்ளடக்கியதாக 73 குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. மொழிகளும் தொடர்பு சாதனத் தேர்ச்சியும் தகவல் தொழில்நுட்பம் என்பவை முதலில் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதையே முக்கிய இலக்காக கொண்டிருந்தன. இருபது சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அவற்றில் 3 நிகழ்ச்சித் திட்டங்கள் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க முழுமையாக அவர்களின் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டது.

அட்டவணை II-15
2005இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| | பயிற்சி நிகழ் திட்ட. எண்ணிக்கை | பயிற்சி பெறுவோர் | | | மொத்தப் பயிற்சி |
|---|---|---|---|---|---|
| | | இ.ம.வ | ஏனையவை | மொத்தம் | மணித். |
| 1.வங்கித்தொழில் | 8 | 55 | 196 | 251 | 102 |
| 2.நிதியியல்துறை | 10 | 45 | 276 | 321 | 108 |
| 3.தகவல் தொழில்நுட்பம் | 23 | 329 | 25 | 354 | 846 |
| 4.மொழிகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சிகள் | 5 | 98 | 8 | 106 | 186 |
| 5.முகாமை | 3 | 32 | 30 | 62 | 24 |
| 6.கிராமியத்துறை அபிவிருத்தியும் நுண்பாக நிதியும் | 4 | - | 112 | 112 | 48 |
| 7.சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 20 | 367 | 182 | 549 | 624 |
| **மொத்தம்** | 73 | 926 | 829 | 1,755 | 1,938 |

மூலம்: வ.க.ஆ.நிலையம், இலங்கை மத்திய வங்கி.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் பங்குபற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 2004 இன் 1507 இலிருந்து 2005 இல் 1755 இற்கு 16 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது 11 பகிரங்க ஞாபகார்த்த விரிவுரைகளை பிரபல்யம் பெற்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பேச்சாளர்களைக் கொண்டு நடாத்தியதுடன் இவ்வகை விரிவுரைகள் தொழில்சார் நிபுணர், நிதித் துறையில் மூத்த நிருவாக அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றவர்களுக்கு ஒரு அரங்கை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் முதலில் நடைமுறை விடயங்கள் பற்றி தத்தமது கருத்துக்களை விளக்கவும் வழியேற்படுத்தப்பட்டது. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் இந்நாளில் பொருளாதாரம் மற்றும் வங்கித்தொழில் பற்றிய ஆய்வரங்குகளை கல்விப்பொதுத் தராதரப் பத்திர உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமாக நடாத்தியதுடன் இதில் 11 பாடசாலைகள் பங்குபற்றியதுடன் அவற்றில் 2 பாடசாலைகள் மட்டக்களப்பில் இருந்து கலந்து கொண்டன.

அட்டவணை II- 16

2005 இல் நடத்தப்பட்ட பொது மற்றும் ஞாபகார்த்த விரிவுரைகளும் ஆய்வரங்குகளும்

| | விடயம் | விரிவுரையாளர்கள் |
|---|---|---|
| 13 சன. 2005 | இலங்கையில் பொருளாதார தாராளமயமாக்கலும் கைத்தொழிலை மீளவமைத்தலும்: சாதனைகளும் கொள்கைத் தேர்வுகளும் | பேராசிரியர் பிறேம-சந்திர அத்துக்கோரள பொருளியல் திணைக்களம், அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், கன்பரா. |
| 02 மார்ச். 05 | இலங்கை பொருளாதாரத்தின் மீது சுனாமி அனர்த்தத்தின் தாக்கமும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான சவால்களும் (சுதந்திர ஞாபகார்த்த விரிவுரை) | கலாநிதி. பி.பி. ஜயசுந்தர<br>திறைசேரியின் செயலாளர்<br>நிதி அமைச்சு. |
| 31 மார்ச். 05 | வங்கித்தொழில் சட்டத்திற்கான அண்மைய திருத்தங்களும் வங்கித்தொழிலின் மீது அதன் தாக்கமும் | திரு.ஏ.எச்.எம்.டி நவாஸ்<br>மூத்த அரச சட்டவாதி<br>சட்டமா அதிபர் திணைக்களம். |
| 28 ஏப். 05 | அனர்த்த முகாமையின் தயாரான நிலைமையும் அமைப்பியல் உள்ளக தொடர்புகளும் | பேராசிரியர். டி.எஸ். விதான<br>அமைப்பு கோட்பாடும் உபாயமும்,<br>வின்சர் பல்கலைக்கழகம், ஒன்டாரியோ, கனடா. |
| 05 மே 05 | 2004 மத்திய வங்கி ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நிலை (குடியரசு ஞாபகார்த்த விரிவுரை) | கலாநிதி.எச்.என். தேநுவர<br>பணிப்பாளர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி. |
| 02 யூன் 05 | பிரமிட் திட்டங்களை ஒழித்தல் | திரு. றொபாட் எல்.பிற்ர்ஸ் பற்றிக்<br>தலைவர்<br>பிரமிட் திட்ட எச்சரிக்கை<br>ஐ.அ.நாடுகள். |
| 14 யூலை 05 | ஆளுகை: சமகால பொருளியல் அபிவிருத்தி பிரச்சனைகள் | பேராசிரியர். பிபெக் டெப்ரோய்<br>பணிப்பாளர்<br>ரஜீவ்காந்தி நிறுவனம்<br>புதுடெல்லி. |
| 25 ஒகத்து 05 | அபிவிருத்தியும் மாற்றமும்: இலங்கை பொருளாதாரம் 1950-2005 (இலங்கை மத்திய வங்கியின் 55வது ஆண்டு நிறைவு விரிவுரை) | கலாநிதி. நிமல் சந்தரரத்ன<br>தலைவர்<br>வறுமை பகுப்பாய்வுகளுக்கான நிலையம். |
| 14 செத்.05 | நுகர்வோர் நிதியங்களும் சமூக பொருளாதார அளவீடும்-அறிக்கை 2003/04 | கலாநிதி. அனிலா டயஸ் பண்டாரநாயக்க<br>பணிப்பாளர், புள்ளிவிபரத் திணைக்களம்<br>இலங்கை மத்திய வங்கி<br>மீளாய்வு செய்தவர்<br>திருமதி.விசாகா கிடல்லகே<br>நாட்டின்/பிராந்திய பணிப்பாளர், இடைநிலை தொழில் நுட்ப அபிவிருத்திக் குழு, தெற்கு ஆசியா. |
| 02 திசெ.05 | பகிரங்க விரிவுரை/ நூல்ஆய்வு- "எலங்கவ" வடமத்திய மாகாணத்தின் கைநூல் மொழி பெயர்ப்பு | கலாநிதி எம்.யு.ஏ. தென்னக்கோன்<br>முன்னைநாள் நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>இலங்கை மத்திய வங்கி. |
| 22 திசெ.05 | இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அப்பால்: இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கை (வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவு விரிவுரை) | கலாநிதி. எச்.என். தேநுவர<br>பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.<br>குழுவின் உறுப்பினர்கள்<br>1. கலாநிதி. சமன் கெலேகம<br>நிர்வாகப் பணிப்பாளர், கொள்கை ஆய்வுகள் நிறுவனம்.<br>2. திரு.எச்.எம். விஜேரத்ன<br>வர்த்தக பணிப்பாளர், வர்த்தகத் திணைக்களம். |

மூலம்: வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம்
இலங்கை மத்திய வங்கி

## 22. பயிற்சி

அறிவைத் தேடுவதில் கற்றலின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்ற விதத்தில் 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பயிற்சி மற்றும் கற்றல் கொள்கையானது 2005 இலும் தொடர்ந்தது. புதிய கட்டமைப்பின் கீழ் முகாமைத்துவமும் அலுவலர்களும் வங்கியில் ஒரு மைய அறிவுத் தளமொன்றினை உருவாக்கும் இணைந்த பொறுப்பினை வகிக்க வேண்டிய தேவைப்பாடு காணப்பட்டது. முகாமைத்துவம் தமது அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து தமது அறிவினையும் அனுபவத்தினையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கான பொறுப்பினை கொண்டுள்ள வேளையில் அலுவலர்கள் அறிவினையும் தேர்ச்சியினையும் தரமுயர்த்துவதற்கு அத்தகைய வாய்ப்புக்களை பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பயிற்சியையும் கற்கும் கொள்கையினையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் வங்கி தமது அலுவலர்களுக்கு தொழில்நுட்பம், தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சி என்பவற்றைப் பெறுவதற்கு வழியமைத்துக் கொடுத்தது.

ஆய்வுக்குரிய ஆண்டில் 191 அலுவலர்கள் வெளிநாட்டில் இடம்பெற்ற மையத்தொழிற்பாடுகளுடன் தொடர்பான குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய வேளையில் 1,253 அலுவலர்கள் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமும் ஏனைய மதிப்பு வாய்ந்த உள்ளூர் பயிற்சி நிறுவனங்களும் நடாத்திய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றினர். இதற்கு மேலாக அலுவலர்களுக்கு தமது திறமையையும் தகுதியினையும் மேம்படுத்துவதற்கு கிடைத்துள்ள வாய்ப்புக்களுக்கு புறம்பாக, திறமை வாய்ந்த முகாமையாளர்களை உருவாக்குவதற்கு முகாமைத்துவ தேர்ச்சியையும் ஆளணித் தேர்ச்சியையும் அபிவிருத்தி செய்வதற்கு தனது அலுவலர்களுக்கு வசதிகளை வழங்குவது முக்கியமானது என்பதனை வங்கி ஏற்றுக் கொண்டது. ஆகவே தலைமைத்துவ பண்புகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்தல் குழுநிலத்தன்மையைக் கட்டியெழுப்புதல், தீர்மானம் எடுக்கும் தேர்ச்சி, புதுமையான சிந்தனைகள் மற்றும் கடமைகளினதும் பொறுப்புக்களினதும் நோக்கத்திற்காக உணர்வுகளை விரிவுபடுத்துதல் என்பனவற்றை அடையும் குறிக்கோளுடன் வங்கியானது, இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட வெளிக்கள தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கென 687 அலுவலர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. இதற்கு மேலாக, வங்கியானது மூத்த அலுவலர்களுக்கு பிராங்க்வின் கொவே (தெற்காசிய) பிறைவேட் லிமிட்டெட்டினால் நடாத்தப்பட்ட பல முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை அளித்தது. திணைக்களங்களினால் செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு மதிப்பளித்து சுவிஸ் பன்னாட்டு அபிவிருத்தி முகவர்களினால் ஒதுக்கப்பட்ட நிதியத்தினைப் பயன்படுத்தி முதலீட்டுப் பகுப்பாய்வு மற்றும் பன்னாட்டு வர்த்தகம் என்பனவற்றிலான இரண்டு தொழில்சார் நிபுணத்துவ பாடநெறிகள் நடாத்தப்பட்டன. 2005 ஆம் ஆண்டில் அலுவலர் மாற்று நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுவீடனில் இடம்பெற்ற விடயங்களை அறிந்து கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தில் 8 அலுவலர்கள் பங்குபற்றிய வேளையில் சார்க் நாடுகளின் அலுவலர் மாற்று நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாகித்தானில் இடம்பெற்ற அறிந்து கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10 அலுவலர்களும் பங்குபற்றினர்.

ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பிரபல்யம் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பினை மேற்கொள்ளும் அலுவலர்களை அனுப்பும் கொள்கையினைத் தொடர்ந்தும் பின்பற்றியது. ஆய்வுக்குரிய ஆண்டில் 13 அலுவலர்கள் தமது பட்டப்பின் படிப்பு பாடநெறியினை வெளிநாடுகளில் தொடங்கியுள்ளனர். தமது பட்டப்பின் படிப்பு கற்கை நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 4 அலுவலர்கள் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

பயிற்சித் திணைக்களமானது தமது வாராந்த ஆய்வரங்கு தொடர்களின் கீழ் ஆய்வரங்குகளை தொடர்ந்து மேற்கொண்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியபவர்களுக்கும் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ஆய்வினை மேற்கொண்டவர்களுக்கும் தமது அனுபவங்களை வங்கியின் ஏனைய அலுவலர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆய்வுக்குரிய ஆண்டில் ஆய்வரங்குத் தொடர்களின் கீழ் 47 ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன.

## 23. நலன்புரித் திணைக்களம்

ஊழியர்களுக்கு நலன்புரி நன்மைகளை வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நலன்புரித் திணைக்களம் அதன் ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும்

அவர்களினது பதிவு செய்யப்பட்ட தங்கியிருப்போர்களுக்கும் என 2005 இறுதியில் மொத்தமாக 9,332 பேருக்கு அத்தகைய வசதிகளை வழங்கியதுடன் ஆய்வுக்குரிய ஆண்டிலும் தொடர்ந்தும் அத்தகைய வசதிகளை விரிவுபடுத்தியது. நலன்புரி நன்மைகள், ஊழியர்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் வேறுபட்ட வகைகளின் கீழான கடன்வசதிகளையும் ஊழியர்கள், ஓய்வூதியர் மற்றும் தங்கியிருப்போருக்கான மருத்துவ நன்மை வசதிகளையும் உள்ளக நலத்துறை மருத்துவகூடத்தைப் பேணல் உணவக வசதிகள் மற்றும் நலன்புரித் தன்மைகளைக் கொண்ட துணைவசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

2005 மேயில் வீடமைப்புக் கடன் திட்டம் ஊழியர்கள் ஏற்கனவே வங்கியிலிருந்து பெற்ற நிதி உதவியுடன் நிருமாணித்த முதலாவது வீட்டினை விற்பனை செய்ய விரும்புகின்ற ஊழியர்களுக்கு இரண்டாவது வீடமைப்புக் கடனாக ஆகக்கூடியது ரூ.3.0 மில்லியன் ஆண்டொன்றிற்கு 7.5% வட்டியில் வழங்கக்கூடிய விதத்தில் விரிவாக்கப்பட்டது. இது நடைமுறையிலிருக்கும் இரண்டாவது வீடமைப்பு கடனுக்கு மேலதிகமாக முதலாவது கடனைப் பெறுபவர்கள் தமது வசிப்பிடம் அமைந்துள்ள இடத்தில் வசிக்க முடியாத வாழ்க்கைக்கு ஆபத்தான அல்லது உடனலத்திற்கு தீங்கானது என ஊழியர் விசனப்படுமிடத்து 2.5% வீதத்தில் கடன் கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

மருத்துவ நன்மைகள் திட்டம் 2005 யூனில் நன்மை பெறுவோர் வாழ்நாளில் ஒருமுறை செவிச்சுருள் கருவியினைப் பொருத்துவதற்கும், இடுப்பெலும்பு மாற்று சத்திர சிகிச்சைக்குமான கோரலுக்கு ரூ.350,000 வரையான தொகையினை மீளளிக்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டது.

### 23.1 ஏனைய செயற்பாடுகள்

உணவு வழங்கல் பணிகள் குறைந்த செலவிலும் வினைத்திறன் மிக்க முறையிலும் வங்கியில் இடம்பெறும் அலுவல்சார் நிகழ்வுகளுக்கு உணவளிக்கக்கூடிய வகையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கை சமர்ப்பிக்கும் முறையினை மேம்படுத்தும் வகையில் உணவகம் தொடர்பான நடவடிக்கைகளை கணனி மயப்படுத்துதல் இறுதியளிக்கப்பட்டுள்ளது.

## 24. மனித மூலவளங்கள் அபிவிருத்தி

2005 இல் மனித மூலவளங்கள் திணைக்களம், நடைமுறையிலிருக்கும் இலங்கை மத்திய வங்கியின் தற்பொழுது நடைபெற்றுவரும் நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடர்ந்தும் தமது தொழிற்பாட்டு மற்றும் மூலோபாய செயற்பாடுகளில் ஈடுபட்டது. இலங்கை மத்திய வங்கியின் அடையாளம் காணப்பட்ட மனித மூலவளத் தேவைகளை நோக்காகக் கொண்டு ஆட்சேர்ப்பு பதவியில் அமர்த்துதல், பதவி உயர்வுகள் அடுத்து தேவையானவற்றை திட்டமிடுதல், செயலாற்றுகை மதிப்பீடு போன்ற விடயங்களில் மனித மூலவளத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 24.1 உரிய காலத்திற்கு முன்னரான சுயவிருப்பு ஓய்வூதிய திட்டம்

சில குறிப்பிட்ட வகை ஊழியர்களின் கோரிக்கைகளைக் கவனத்திலெடுத்து, உரிய காலத்திற்கு முன்னரான சுயவிருப்பு ஓய்வூதிய திட்டம் அனைத்து உயர் பதவி அல்லாத அலுவலர்களுக்கும் சிற்றூழியர்களுக்குமாக 2005 ஒகத்து மாதத்தில் வழங்கப்பட்டது. இந்த உரிய காலத்திற்கு முன்னரான சுயவிருப்பு திட்டத்தின் கீழ் 2005 திசெம்பர் 1 ஆம் நாள் முதல் 106 ஊழியர்கள் ஓய்வுபெற்றனர்.

### 24.2 ஆட்சேர்ப்பு

திணைக்களங்களின் திறமை அடிப்படையிலான தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதன் பொருட்டும் அடையாளம் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட திறந்த போட்டிப்பரீட்சை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட அமைப்பியல் நேர்முகப்பரீட்சை உட்பட்ட கடுமையான தெரிவு முறைக்கு உட்பட்டு மொத்தமாக 57 அலுவலர்கள் உயர்பதவி வகுப்பிற்கு ஆட்சேர்க்கப்பட்டனர். இதற்கு புறம்பாக ஒரு குடிசார் பொறியலாளர், நீதிமன்ற எழுதுவினைஞர் மற்றும் 4 தகவல் தொழில் நுட்பவியலாளர் ஆகியோர் வங்கியின் ஒன்றிணைக்கப்பட்ட பணிகளின் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டனர்.

### 24.3 பதவி உயர்வு

இவ்வாண்டில் இலங்கை மத்திய வங்கியினது தரங்களுக்கான உயர்வு மற்றும் பதவி உயர்வு ஆகிய நியதிகளில் அனைத்து ஊழியர்களினதும் தொழில் செயலாற்றம் கவனத்திலெடுக்கப்பட்டது. ஊழியர்களின் செயலாற்றம் மற்றும் தொடர்பான திணைக்களத் தலைவர்களினால் செய்யப்பட்ட

விதந்துரைப்புக்களின் அடிப்படையில் உயர் பதவியல்லாத வகுப்பிலும் உயர் வகுப்பிலும் இருந்த 148 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. பதவி நிலை, பதவி உயர்வு பற்றிய விடயத்தில் 23 உயர் பதவியல்லாத தரஅலுவலர்கள் உயர் பதவி I இற்கு பதவி உயர்வு பெற்றதுடன் 15 உயர் பதவியல்லாத தர தனிப்பட்ட உதவியாளர் உயர் பதவி வகுப்பு I இற்கு தனிப்பட்ட செயலாளர்களாக பதவி உயர்வு பெற்றனர். இந்தவேளையில் 2 திணைக்களத் தலைவர் பதவிகளும் 2 துணைத் திணைக்களத் தலைவர் பதவிகளும் இலங்கை மத்திய வங்கியின் நிர்ணயிக்கப்பட்ட பதவி உயர்வு பிரமாணத்தின் நியதிகளுக்கிணங்க நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு நிரப்பப்பட்டன.

### 24.4 ஊழியர் - தொழில் தருநர் உறவுகள்

இவ்வாண்டில் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்சங்கங்களுக்கும் முகாமைத்துவத்துக்கும் இடையில் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. தொழிற்சங்கங்களில் பதவி வகிக்கும் அலுவலர்களின் நன்மைக்காக ஸ்ரேற் பாங்க் ஒப் பாக்கித்தான் மற்றும் பாங்க் நெகேரா மலேசியாவிலும், இரண்டு ஆய்வு சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டதன் மூலம் இரு நாடுகளின் மத்திய வங்கிகளினதும் நடவடிக்கைகளை தெரிந்துகொள்ளும் வாய்ப்புக்கு வழிசெய்யப்பட்டது. குறிப்பிட்ட வகை ஊழியர்களிடையே காணப்பட்ட சம்பள முரண்பாடுகளை தீர்த்துவைக்கும் முகமாக, ஆண்டின் முதல் காலாண்டில் சம்பள முரண்பாட்டுக் குழுவின் விதந்துரைப்புக்கள் நடை முறைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலாக, 2006 முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ள கூட்டு ஒப்பந்தம் சம்பந்தமாக கலந்துரையாடல்கள் தொடங்கப்பட்டுள்ளன.

### 24.5 செயலாற்ற முகாமைத்துவ முறை

புதிய செயலாற்ற முகாமைத்துவ முறையின் கீழ் 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை மதிப்பீடுகள் இவ்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்டன. கூட்டு ஒப்பந்தத்தின் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் வகையில் செயலாற்றுகை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று ஊழியர்களின் அசாதாரணமான மிகச் சிறந்த செயலாற்றுகையை அடையாளம் காண்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. 2005 இன் திணைக்கள மற்றும் தனிப்பட்ட அலுவலர்களின் இலக்கு நிர்ணயம் இவ்வாண்டின் தொடக்கத்தில் பூர்த்தியாக்கப்பட்டது.

### 24.6 மனிதவலுத் திட்டமிடல்

2005 ஆம் ஆண்டில் மொத்தமாக 124 ஊழியர் உரிய காலத்திற்கு முன்னரான சுயவிருப்பு ஓய்வுபெறும் திட்டத்தின் கீழும் சாதாரண ஓய்வுத் திட்டத்தின் கீழும் ஓய்வு பெற்றதுடன் 7 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து தாமாகவே விலகிச் சென்றனர். ஆண்டின் இறுதியளவில் வங்கிப்பணியில் 494 உயர் பதவி அலுவலர்களும் 478 உயர் பதவியல்லா அலுவலர்களும், 105 சிற்றூழியர்களும் காணப்பட்டனர். திணைக்களம், தொடர்ந்தும் மேற்கொள்ளக்கூடிய திட்டத்தின் ஒரு பகுதியாக முக்கிய ஆள் இடர்நேர்வு பகுப்பாய்வொன்றினைப் பூர்த்தி செய்துள்ளது. இதன்படி இலங்கை மத்திய வங்கியின் எதிர்கால மனிதவளத் தேவைப்பாடுகள் பற்றி முகாமைத்துவத்திற்கு அறிவித்துள்ளது.

### 24.7 ஈ-மனிதவள முறையினை நடைமுறைப்படுத்தல்

மனிதவளத் திணைக்களம் ஈ மனிதவள முறையினை இணையத்தளத்தினை அடிப்படையாகக் கொண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. இது வங்கிக்கான குறைந்த செலவுடன் உரிய நேரத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முகாமையினை இயலச்செய்தது. கேள்விப்பத்திர நடைமுறையினை பூர்த்தி செய்ததன் பின்னர் முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டு 2005 இன் இறுதிப்பகுதியில் சம்பிரதாயபூர்வமாக வேலைகள் தொடங்கின. பயன்படுத்தும் திணைக்களங்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று ஈ-மனிதவளத் திட்டத்திற்கு தரவுகளை அனுப்பும் செயல்முறை பூர்த்தியாக்கப்பட்டது. பயன்படுத்தும் திணைக்களத்தின் அலுவலர்களை புதிய முறையினை பயன்படுத்துவதற்கு பயிற்றுவிக்கும் தேவை ஏற்பட்டது. ஆட்சேர்ப்பிலிருந்து ஓய்வு பெறுவது வரையான செயற்பாடுகளையும் தரவுத் தளத்தையும் உள்ளடக்கிய முழுமையான இயலளவைக் கொண்ட ஈ மனித வள முறைமையின் செயற்பாடு தற்பொழுது நடைபெற்றுவரும் தன்னியக்க செய்முறை பூர்த்தியடைந்ததும் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

### 24.8 முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தினை மூடிவிடுதல்

2001 இல் தொடங்கப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் பயிற்சி மற்றும் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் போன்ற ஏனைய திணைக்களங்களிடம் கையளிக்கப்பட்டன. முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களமானது சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் திறமையை அபிவிருத்தி செய்யும்

நடவடிக்கைகளை மேற்கொண்டது. முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் 2005 மார்ச்சு 28 ஆம் நாள் மூடப்பட்டது.

### 24.9 ஆளுநர் கலந்துகொண்ட கூட்டங்கள்

2005 ஆம் ஆண்டுப் பகுதியில் ஆளுநர் திரு.சுனில் மெண்டிஸ் பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

(i) 2005 பெப்புருவரி 25-28 ஆம் நாள் வரை பிலிப்பைன்ஸ் மனிலாவில் நடைபெற்ற தென்கிழக்காசிய நியூசிலாந்து ஆளுநர்களின் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

(ii) 2005 ஏப்பிறல் 11-17 ஆம் நாள் வரை ஐக்கிய அமெரிக்காவில் வாசிங்டன் டிசி யில் நடைபெற்ற ஜி-24 பன்னாட்டு நாணய நிதிக்குழு மற்றும் அபிவிருத்தி குழுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

(iii) 2005 மே 31- யூன் 3 வரை பிஜி யில் நடி எனும் இடத்தில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர் சபைக் கூட்டத்திலும் நடைபெற்ற 40 ஆவது தென்னாசிய மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டிலும் 24 ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர் சபைக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

(iv) 2005 யூன் 25-27 ஆம் நாள் வரை சுவிற்சர்லாந்து, பாசலில் நடைபெற்ற பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(v) 2005 செத்தெம்பர் 8-10 ஆம் நாள் வரை இந்தியாவில் மும்பையில் நடத்தப்பட்ட சார்க் நிதி ஆளுநர்களின் கருத்தரங்கு -2004 இல் கலந்து கொண்டார்.

(vi) 2005 செத்தெம்பர் 18 ஆம் நாளன்று பாபடோசில் நடத்தப்பட்ட பொதுநலவாய மத்திய வங்கி ஆளுநர்களின் 2 ஆவது ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(vii) 2005 செத்தெம்பர் 20-25 ஆம் நாள் வரை ஐக்கிய அமெரிக்காவில் வாசிங்கடன் டிசி யில் நடத்தப்பட்ட ஜி-24 பன்னாட்டு நாணய நிதியக் குழு மற்றும் அபிவிருத்திக் குழு கூட்டங்களிலும் பன்னாட்டு நாணய நிதிய/ உலக வங்கியின் ஆண்டுக் கூட்டங்களிலும் ஒதுக்கு முகாமைத்துவத்தின் தொடர்பான ஆளுநர்களின் கருத்தரங்கிலும் கலந்து கொண்டார்.

### 24.10 நியமனங்கள்

(i) முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் மேலதிக பணிப்பாளர் திருமதி. ஜே.ஏ.என். திஸ்ஸநாயக்க 2005 சனவரி 01 ஆம் நாளிலிருந்து முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு அதன் பின்னர் 2005 யூலை 16 ஆம் நாளிலிருந்து செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டார்.

(ii) பணிமனைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு.வை.ஏ.த. சில்வா 2005 பெப்புருவரி 10 ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(iii) பின்வரும் நியமனங்கள் 2005 பெப்புருவரி 14 ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.எம்.எம்.அத்தநாயக்க வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பணிப்பாளராக,

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.டபிள்யூ. எம்.கருணாரத்ன பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக,

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு.எம்.வி.எம் பர்னாந்து பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு 2005 ஓகத்து 01 ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(iv) வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் துணைப்பணிப்பாளர் செல்வி.எஸ்எச். குணவர்த்தன, பணிப்பாளர் திரு.எம்.எம். அத்தநாயக்க அவர்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து 2005 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(v) மனித மூலவளங்கள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.எஸ்.எச்.ஏ.எம்

அபேரத்ன 2005 மே 01 ஆம் நாளிலிருந்து மனித மூலலளங்கள் திணைக்களத்திற்கு பதில் பணிப்பாளராகவும் 2005 நவெம்பர் 01 ஆம் நாளிலிருந்து மனிதவளங்கள் திணைக் களத்தின் பணிப்பாளரக நியமிக்கப்பட்டார்.

(vi) நிதித் திணைக்களத்தின் மேலதிக முதன்மைக் கணக்காளரான திரு.ஈ.ஏ. கெட்டியாராச்சி 2005 மே 01 ஆம் நாளிலிருந்து பதில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப் பட்டார். (2005 யூலை 04 முதல் வெளிநாடு செய்வதற்காக விடுக்கப்பட்டார்)

(vii) முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் துணைப்பணிப்பாளர் திரு.எம்.ஐ. சுவ்வியான் 2005யூலை 16ஆம் நாள் முதல் திணைக் களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(viii) நிதித் திணைக்களத்தின் துணை முதன்மைக் கணக்காளரான திருமதி கே.எம்.ஏ.என். டவுலாகல 2005 யூலை 16 முதல் நிதித் திணைக்களத்தின் பதில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

(ix) புள்ளி விபரவியல் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு.டி. வசந்த 2005 செத்தெம்பர் 01 ஆம் நாளிலிருந்து செலாவணித் திணைக்களத்தின் மேலதிகக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

(x) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக் களத்தின் மேலதிக கட்டுப்பாட்டாளர் திரு.எம்.பி.ஹேரத் 2005 செத்தெம்பர் 01 ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 24.11 ஓய்வு பெறல்

(i) பணிமனைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு.ஜி.எல்.அமரசேனவின் ஒப்பந்தப் பணி 2005 பெப்புருவரி 09 ஆம் நாளுடன் முடிவடைந்தது.

(ii) வங்கித்தொழில் ஆய்வு நிலையப் பணிப்பாளர் திரு.கே.ஜெகநாதன் 2005 பெப்புருவரி 14 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

(iii) நிதித் திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளர் திரு.டி.எல்.கட்டுவாவெலவின் ஒப்பந்தப் பணி 2005 ஏப்பிறல் 30 ஆம் நாளுடன் முடிவடைந்தது.

(iv) ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய மனித மூலவளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.எம்.ஏ.நந்தசிறி 2005 மே 01 ஆம் நாளிலிருந்து ஒப்பந்தப் பணியிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார்.

(v) வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.சி.கே. பரணவிதான அவர்கள் 2004 திசெம்பர் 26 ஆம் நாள் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் விளைவாக காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டதனால் 2005 ஓகத்து 03 ஆம் நாள் முதல் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதாக கருதப்பட்டார்.

(vi) சட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.என்.கதுருகமுவ 2005 திசெம்பர் 04 ஆம் நாள் முதல் வங்கிப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

### 24.12 விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

(i) உதவி ஆளுநர் திரு.ஆர்.ஏ.ஜயதிஸ்ஸ மூத்த பொருளியியல் கொள்கை மதியுரையாளராகவும் திறைசேரியின் துணைச் செயலாளராகவும் பணியாற்ற நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

(ii) உதவி ஆளுநர் முனைவர் யூ.விதான பத்திரன இடர் முகாமைத்துவ அமைச்சிற்கு செயலாளராக

(iii) வங்கித்தொழல் கல்வி ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் திரு.எம்.எம். அத்தநாயக்க தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்கு.

(iv) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர். பி.டபிள்யூ.ஆர்.பி.ஏ.யூ. ஹேரத் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக

(v) பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரிக்கேடியர் டபிள்யூ.பி.பி. பர்னாந்து பாதுகாப்பு அமைச்சிற்கு.

(vi) திரு.எஸ்.ஆர். ஆட்டிகல உயர் பதவி வகுப்பு தரம் III அலுவலர், நிதி திட்டமிடல் அமைச்சிற்கு

(vi) திருமதி.வை.எம். இந்திரரத்ன உயர் பதவி வகுப்பு தரம் III அலுவலர் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்கு.

(viii) திரு.எம்.மகிந்த சாலிய உயர் பதவி வகுப்பு தரம் I பொது திறைசேரியின் தேசிய வரவு செலவுத் திட்டம் மற்றும் இறைக்கொள்கைத் திணைக்களத்திற்கு

(ix) திருமதி.ஏ.கே. கெட்டியாராச்சி, தனிப்பட்ட செயலாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

(x) திருமதி.எம்.சி.ஜே.பர்னாந்து தனிப்பட்ட செயலாளராக நிதித் திட்டமிடல் அமைச்சிற்கு.

(xi) செல்வி. டி.கே.எம்.ஜி.டி. இந்துனில் உயர் பதவி வகுப்பு தரம் I அலுவலர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

(xii) திரு.ஈ. டபிள்யூ.கே.ஜே.பி. எகலப்பொல உயர் பதவி வகுப்பு தரம் I அலுவலர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

(xiii) திரு.கே.ஏ.யூ.எஸ்.கே. திலகரத்தின, உயர் பதவி வகுப்பு தரம் I அலுவலர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு

(xiv) திரு.எஸ்.பிரபாகர் உயர் பதவி வகுப்பு I அலுவலர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.